Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
யாழ். நகரின் மத்தியில் புதுப் பொலிவுடன் முற்றிலும் குளிரூட்டப்பட்டது.
ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் விசேட விலைகளில் BBQ
(C/1615)
தொடர்பு: 0771064385 0776943479
70/6, K.K.S. Road, JAFFNA

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 05 செவ்வாய்கிழமை (19.06.2012) பக்கங்கள் 20 ஓசை – 262
















# வடக்கில் படையினர் வசம் உள்ள தனியார் உடமைகள் மீளளிக்கப்படும்

## வடக்கு ஆளுநர் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கில் படைமுகாம்களை மீள் அமைப்பதற்காக மூன்று மாத காலத்தினுள் அரச காணிகள் அடையாளம் காணும நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் காணிகள் பெறப்பட்டதும் தனியார் காணிகளும் வீடுகளும் உரிமையாளரிடம் கையளிக்கப்படும் என வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தகவல்களை வெளியிட்ட ஆளுநர் வடக்கில் இராணுவ முகாம்களை மீள் அமைப்பதற்குத் தேவையான அரச காணிகளை பெற்றுக் கொடுக்கும் மேற்படி நடவடிக்கைகள் மூன்று மாத காலப் பகுதிக்குள் நிறைவு செய்யப்படும். இராணுவத்திற்குத் தேவையான அரச காணிகளை அடையாளம் காணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காணிகள் வழங்கப்பட்ட பின்னர் இராணுவம் தங்கியுள்ள பொது மக்களின் எஞ்சியுள்ள வீடுகளும்

19 ஆம் பக்கம் பார்க்க

## நீதிபதி நியமனம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீதிமன்றிற்குப் புதிய நீதிபதியாக ஹயாத்து முகமது முகமது பசீல் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் யாழ். மேல் நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் மல்லாகம் நீதிமன்றில் மாவட்ட நீதிபதியாகவும், மாவட்ட மேலதிக குடும்ப நீதிபதியாகவும், மேலதிக சிறுவர் நீதிமன்ற நீதிபதியாகவும், மேலதிக ஆரம்ப நீதிமன்ற நீதிபதியாகவும் கடமையாற்றவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# தொண்டர் ஆசிரியர்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வன்னித் தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் கோரி நேற்று வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வன்னியில் உள்ள பாடசாலைகளில் எந்தவித ஊதியமும் இன்றி 10 வருட காலமாகத் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றிக்கொண்டிருக்கும் எமக்கு நிரந்தர நியமனம் வழங்கும் காலப்பகுதியினை எழுத்து



மூலம் தருமாறு கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வேதனங்கள் எதுவுமின்றி சேவை செய்தோம் இனியும் எம்மை வேதனைப்படுத்தாதே!, உரிமைகளை இழப்பது உயிர்களை இழப்பதாகும்!, சீரழிக்காதே சீரழிக்காதே எம் எதிர் கால வாழ்க்கையைச் சீரழிக்காதே, ஏமாற்றாதே ஏமாற்றாதே,

19 ஆம் பக்கம் பார்க்க

# வன்னி அபிவிருத்திக்கு விசேட நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

இறுதி யுத்தத்தின்போது கடுமையாகப் பாதிப்புக்குள்ளா கிய வன்னிப் பகுதியின் மூன்று மாவட்டங்களின் அபிவிருத்திப் பணிகளைத் துரிதமாக்குவதற்கு 46211 மில்லியன் ரூபாவை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் அபிவிருத்திக்கே அரசாங்கம் 46211 மில்லியன் ரூபாவை ஒதுக்கி உள்ளதாக சம்பந்தப் பட்ட மாவட்டங்களின் அரச அதிபர்கள தெரிவித்தனர்.

அதன்படி மன்னார் மாவட்டத்துக்கு 11584 மில்லியன் ரூபாவும் வவுனியா மாவட்டத்துக்கு 14479 மில்லியன் ரூபாவும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 20148 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப் பட்டுள்ளது.

இதன் மூலம் இந்த மூன்று மாவட்டங்களிலும் வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, குடி நீர், மின்

19 ஆம் பக்கம் பார்க்க

# போதனா மருத்துவமனையில் துருவித்துருவி விசாரணை

## சுகாதார அமைச்சின் அதிகாரிகள் களத்தில்

யாழ். போதனா வைத்தியசாலையில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் முறைகேடான சம்பவங்கள் தொடர்பாக சுகாதார அமைச்சினால் நியமிக்கப் பட்ட 6 பேர் கொண்ட குழு நேற்று தமது விசாரணைகளை மேற்கொண்டது. யாழ் போதனா வைத தியசாலையில் இருந்த இரும்புக் கேடர்கள் மற்றும் மின்பிறப்பாக்கி வைத்தியசாலை வளாகத்தினை விட்டு வெளியே கொண்டு செல்லப்பட்டதுடன், அதை மீளவும் பெற்றுக்கொண்டதாக யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் பவானி

19 ஆம் பக்கம் பார்க்க



முன்னாள் மாநகர சபை முதல்வர் அல்பிரட் தங்கராசா துரையப்பா ஞாபகார்த்தமாக அவரின் குடும்பத்தினரால் 7 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட யாழ். பண்ணை சுற்றுவட்டம் மற்றும் யாழ். நங்கையின் உருவச் சிலை நேற்றுத் திறந்துவைக் கப்பட்டது. (02)

# வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் அமெரிக்காவுடன் ஒத்துப்போக விருப்பம்

(கொழும்பு)

எதிர்காலத்தில் அமெரிக்காவுடன் இணைந்து செயற்படும் வகையில் வெளியுறவுக்கொள்கையில் மாற்றங்களைச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக த ஏசியன் ட்ரிபியூன் இணையத்தளம் செய்தி வெளியிட்டிருக்கிறது.


இதன் அடிப்படையில் அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையிலும் பல்வேறு மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மிகவும் நெருக்கடியான ஒரு சூழ்நிலையில் இந்தத் தீர்மானம் அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் தெளிவுப்படுத்தும் பொருட்டு அடுத்த மாதம் இலங்கையின் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கான விசேட செயலமர்வினை அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இந்தச் செயலமர்வு எதிர்வரும் ஜுலை மாதம் 7 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையில் தியதலாவை மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் நடைபெறவுள்ளது.

இதேவேளை நேற்று ஆரம்பமாகிய ஐக்கிய நாடுகள் சபையின் 20 ஆவது மனித உரிமைகள் மாநாட்டில், இலங்கை

19 ஆம் பக்கம் பார்க்க

## இன்று நினைவு தினம்



ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா அவர்களின் 22 ஆவது நினைவு தினம் யாழில் அனுஷ்டிக்கப் படவுள்ளதாக ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

இன்று பி.ப. 3.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ள மக்கள் தலைவன் தோழர் பத்மநாபாவின் நினைவுதினத்தினை அனுஷ்டிக்க அவரின் கொள்கை வழி நடந்தோர், நடப்போர், நடப்பதற்காய் விரும்புவோர் அனைவரையும் ஒன்றுகூடு மாறு தோழமையுடன் ஏற்பாட்டுக்குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# முதலாவது பிரதேச அபிவிருத்தி வங்கி மருதனார்மடத்தில் திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை வீதி மருதனார்மடத்தில் புதிதாக அமையப் பெற்றுள்ள பிரதேச அபிவிருத்தி வங்கியின் 257 ஆவது கிளையை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வங்கியின் பெயர்ப்பலகையினை திரைநீக்கம் செய்து வைத்ததுடன் நாடாவை வெட்டி வங்கியைத் திறந்து வைத்தார்.

அத்துடன் நினைவுக் கல்லையும் திரை நீக்கம் செய்து வங்கி நடவடிக்கைகளையும் சம்பிரதாய பூர்வமாகத் தொடக்கி வைத்தார்.

அங்கு உரையாற்றிய பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் தலைவி திருமதி கேஷலா ஜயவர்த்தன, நாடளாவிய ரீதியில் சிறுகைத்தொழில் துறையை மேம்படுத்துவதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார் எனவும், அவரது அமைச்சின் கீழான கைத்தொழில்துறைகள் தற்போது சிறப்பான முறையில் அபிவிருத்தி அடைந்து வருகின்றது எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றும் போது,

சிறுகைத்தொழில், மீன்பிடி விவசாயம் போன்ற தொழில் துறைகளை விருத்தி செய்வதனூடாகவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினது எண்ணத்திற்கு அமைவாக ஆசியாவில் ஆச்சரியம் மிக்க நாடாக இலங்கையை மாற்ற முடியும் எனவும் அதற்கு தமது வங்கியும் பூரண ஒத்துழைப்பு வழங்குமெனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து சுயதொழில்களுக்கான கடன்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பயனாளிகளுக்கு வழங்கி வைத்ததுடன் 50 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வைப்பிலிட்டவர்களை ஊக்குவிக்கும் முகமாக பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் வலிகாமம் மேற்கு பிரதேச அமைப்பாளர் அன்பு, ஈ,பி.டி.பி.யின் வலி. வடக்கு பிரதேச அமைப்பாளர் வள்ளுவன், வங்கியின் பொதுமுகாமையாளர் ஆர்.சிறிவர்தன மற்றும் வலி. மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் பிரகாஸ் மற்றும் வங்கியின் துறை சார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.



# கற்கைநெறி தொடக்க விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களின் 2012/2014 கல்வியாண்டிற்கான கற்கைநெறி தொடக்க விழா நாளை காலை 10.00 மணிக்கு கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சு செயலாளர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# வீதிப் புனரமைப்பு

(சங்குவேலி)

மானிப்பாய் வடக்கு, மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை ஊடாக சங்குவேலிக்குச் செல்லும் வீதி புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

ஏறத்தாள 2 கிலோமீற்றர் வரையான சங்குவேலி வடக்கு வரையான பகுதிகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதனால் அவ்வீதியைப் பயன்படுத்தி வந்த மாணவர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் அனைவரும் பல வருடங்களாக அனுபவித்து வந்த அசௌகரியங்கள் நீங்கியுள்ளது.

இடப்பெயர்வுக்குப் பின்பாக 15 வருடங்களுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாமல் வீதியைச் செப்பனிடப் பறித்திருந்த கற்கள் சிதைவடைந்து காணப்பட்ட நிலையை 'தினமுரசு' சுட்டிக்காட்டி செய்தி பிரசுரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (68)



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நாடளாவிய ரீதியில் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு நடத்தியிருந்த இந்து சமய பொது அறிவுத் தேர்வினை மல்லாகம் மகா வித்தியாலயத்தில் எழுதுவதைக் காணலாம். (06)

# நீதிமன்ற உத்தரவினால் வீதிப் போராட்டம் நிறுத்தம்

(கொழும்பு)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் ஏற்பாட்டில் நேற்றுப் பிற்பகல் யாழ். பஸ் நிலையத்துக்கு முன்னால் நடத்தப்படவிருந்த காணி அபகரிப்புக்கு எதிரான போராட்டம் நீதிமன்ற உத்தரவுக்கமைய இடைநிறுத்தப்பட்டது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், நவசமாயக் கட்சியினர், ஜனநாயக மக்கள் முன்னணியினர், ஐக்கிய சோஷலிசக் கட்சியினர் உள்ளிட்ட பலர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள வந்த நிலையில் திரும்பிச் சென்றதோடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் விசேட ஊடகவியலாளர் மாநாடொன்றையும் நடத்தினர்.

## பச்சை மயில் வேலவனுக்கு கொடியேறுகிறது



கல்யாண வேலவர் கொடியேறுகின்றது
கந்தவனம் புகழ் எங்கும் ஓங்குகின்றது
கற்பூரம் விளைந்த வரலாற்று
மண்ணில்
அற்புதங்கள் பல காண கண்கள்
துடிக்கின்றது.
பொலிகண்டி பதி உறையும் வன்னிமர
நாதனுக்கு
பார் போற்றும் தமிழ் கடவுளுக்கு
பாதகன் சூரனை சங்காரம்
செய்தவனுக்கு
பச்சை மயில் வாகனமாய்
கொண்டவனுக்கு கொடியேறுகின்றது

– பொலிகையூர் விசிந்தன்

# வீட்டில் புகுந்து அனர்த்தம் இருவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

வீட்டில் உட்புகுந்து அனர்த்தம் விளைவித்த இருவரை 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உரும்பிராய் யோகபுரம் பகுதியில் இரவு 8.00 மணியளவில் அத்துமீறி வீட்டில் உட்புகுந்து இச்செயலில் ஈடுபட்ட வேளை கோப்பாய் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கினை நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்ட யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா இருவரையும் 3 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எஸ்)

# 'மெய்யறிவு சிந்தனை' விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

'மெய்யறிவு சிந்தனை' (Critical thinking) எனும் தொனிப்பொருளில் அரசியல் மற்றும் வரலாற்றுத்துறை ஆய்வாளர் ஏ.எஸ். உதயகுமார் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00க்கு இல. 84 ஜும்மா பள்ளி வாசல் வீதியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்றினை நிகழ்த்தவுள்ளார்.

தன்னிலை மாறாது மெய்யியலின் பிரயோகம் எவ்வாறு ஊடகம், வரலாறு மற்றும் ஏனைய துறைகளில் பேணப்படுகிறது, எதையும் ஏற்றுக்கொள்ளாது செய்திகளை சரிபார்த்து அறிக்கை எவ்வாறு இடம்பெறவேண்டும் என்பது தொடர்பாகவும், ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் ஊடகத்துறை சார்ந்தோர், ஆய்வாளர்கள், மற்றும் ஆர்வலர்கள் கலந்துகொண்டு பயனடையுமாறு கலந்துரையாடலின் ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## மஹா கும்பாபிஷேகம்

(வேலணை)

வேலணை முதலாம் வட்டாரம் ஆலம்புலப் பதியுறை அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் நாளைமறுதினம் காலை 10.25 மணி முதல் 11.47 வரையான சிங்கலக்கின சுபமுகூர்த்தத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே அடியார்கள் அனைவரும் வருகைதந்து முருகப் பெருமானின் குடமுழுக்கப் பெருவிழாவினை தரிசித்து அருள் பெறுமாறு ஆலய அறங்காவலர்கள் அறிவித்துள்ளனர். (26)

## மஹோற்சவம்

(வடமராட்சி)

கந்தவனம் திருவருள்மிகு கல்யாண வேலவ சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று மதியம் 12.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் காலை 8.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (116)




அண்மையில் மன்னார் அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற மன்னார் ஆயுர்வேத பாதுகாப்புச் சபை வருடாந்த பொதுக்கூட்டத்தின் போது மாவட்டத்திலுள்ள மூத்த மருத்துவர்களுக்கு வடமாகாண ஆயுர்வேத பாதுகாப்புச் சபைகளின் இணையச் செயலாளர் டாக்டர் கே.திருலோகமூர்த்தி மற்றும் இவ் இணையத் தலைவர் எஸ்.செல்வமகேந்திரன் ஆகியோர் மூத்த மருத்துவர்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், அருகில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சரத் ரவீந்திரா மற்றும் டாக்டர் யோகநாதன் நிற்பதையும் காணலாம். (05)

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்!

யாழ். போதனா வைத்திய சாலைக்கு விஜயம் மேற் கொண்ட பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானநதா அவர்கள் அங்கு பல்வேறு பிரிவுகளைப் பார்வையிட்ட துடன் வளாகத்தினது சுத்தம்



மற்றும் சுகாதாரம் தொடர்பிலும் கவனம் செலுத்தினார்.

போதனா வைத்தியசாலைக்கு கடந்த சனிக்கிழமை விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அவர்கள் பல்வேறு பிரிவுக ளுக்கும் சென்று பார்வை யிட்டதுடன் துறைசார்ந்தவர் களுடன் கலந்துரையாடி தேவைகள் மற்றும் பிரச்சினை கள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் வைத்தியசாலை யினதும், வளாகத்தினதும் சுத்தம், சுகாதாரம் தொடர்பில் கவனம் செலுத்தியதுடன் துப்புரவுப் பணிகளை விரைவு படுத்துமாறும் துறைசார்ந்தவர் களுக்கு பணிப்புரை வழங்கிய துடன் நீண்டகாலமாக துப்பரவு செய்யப்படாதுள்ள பகுதிகளை யாழ்.மாநகர சபையூடாக துப்பரவு செய்வதற்கும் நட வடிக்கை மேற்கொண்டுள்ளார.

நோயாளர் விடுதிக்குச் சென்ற அமைச்சர் அவர்கள் சிகிச்சை பெற்றுவரும் நோயா ளர்களுடன் கலந்துரையாடி அவர்களது சுக நலன்களை யும் விசாரித்துக் கொண்டார்.


இதனிடையே வைத்திய சாலையின் அபிவிருத்தி தொடர்பாக கேட்போர் கூடத் தில் நடந்த கலந்துரையாடலின் போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் அவர்கள் அண்மை யில் புற்றுநோய் நிபுணர் டாக்டர் ஜெயக்குமாரனின் வீடு தாக்குதலுக்குள்ளான சம்பவத் திற்கு மக்களினதும், அரசின தும் பிரதிநிதி என்ற வகையில் தாம் மன்னிப்பு கோருவதாக வும் எதிர்காலத்தில் இது போன்ற பிரச்சினைகள் ஏற்படாத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும் எனவும் தாக்குதல் தொடர்பில் ஆராயப் பட்டு சீக்கிரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் தெரிவித் தார்.

அத்துடன் மருத்துவர் களிடையே புரிந்துணர்வும், ஒற்றுமையும் இருக்கும் பட்சத் திலேயே வைத்தியசாலையின் பணிகளை ஒழுங்காகச் செய்ய முடியும் என்றும் அதேபோன்று நோயாளர்களையும் சரியாக கவனிக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

முக்கியமாக யாழ். போதனா வைத்தியசாலையை அபிவி ருத்தி செய்வதிலும், முன்னேற் றுவதிலும் தாம் முழுமையான கவனம்செலுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை வைத்திய சாலை அபிவிருத்தி செயற் குழுவை வாழ்நாள் பேராசிரி யர் பொன் பாலசுந்தரம் பிள் ளையின் தலைமையில் அமைத்து இதனூடாக வைத்திய சாலையின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பிலும் கவனம் செலுத் தப்பட்டது.

இதன்போது யாழ். போதனா வைத்தியாலையின் பணிப் பாளர் டாக்டர்.திருமதி பவானி பசுபதிராஜா உள்ளிட்ட மருத்து வர்கள் மற்றும் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ் வரி பற்கு ணராஜா ஆகியோரும் உடனிருந்தனர்.



## நந்தன வருக்ஷமதில் நாகம்மாளே நயினை நகராளே அபிராமியே கொடியேறு

நந்தாத வரமுதவு நயினை மேவும் நாயகியே
கௌரியே நாகபூஷணியே கொடியேறு

நவசக்தி தாயே நால்வேதமும் போற்றும் நர்த்தனியே
நான்முகியே கொடியேறு

நந்தன வருஷமதில் நாகம்மாளே நயினை நகராளே
அபிராமியே கொடியேறு

ஆதிசிவன் நாயகியே ஆனந்த வாழ்வருள
ஆதிசக்தியே ஆனந்த ரூபினியே கொடியேறு

நயினாதேவி ஆனவளே நாகம்மாளே நாடியே
வந்தோமம்மா நாகேஸ்வரியே கொடியேறு

நாட்டினிலே சாந்தி சமாதானம் நிலவ சங்கரியே
சாந்தினியே கொடியேறு.

**தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன்**

## வைத்தியசாலை விடுதியில் கட்டாக்காலிகள் தொல்லை

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை ஆதார வைத் தியசாலையில் இரவு வேளை களில் விடுதிகளில் தங்கியி ருந்து நோயாளர்களைப் பார்வையிடும் வைத்தியர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தெல்லிப்பளை துர்க்கை யம்மன் ஆலயத்திற்கு முன்பாக இயங்கி வந்த இவ் வைத்திய சாலை மீண்டும் பழைய இடத் திற்கு கொண்டு செல்லப்பட்ட பின் இரவு நேரங்களில் நோயா ளர்களைப் பார்வை யிடுவதற்கு வைத்தியர்கள் நியமிக்கப் பட்டு விடுதிகளில் தங்கி வருகின்றனர.

வைத்தியசாலையைச் சுற்றிவர வேலிகள் போடப் படாத நிலையில் மேற்படி வைத்தியர்கள் தங்கியுள்ள விடுதிகளில் கட்டாக்காலி நாய் கள் உட்பட கால்நடைகளின் தொல்லையில் இவர்கள் சிக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள் ளப்பட்டுள்ளார்கள்.

வைத்தியசாலையில் நோயாளர் விடுதிகளில் ஒரு பகுதி வேலிகள் போடப்பட்ட நிலையில் விசயந்துக்கள், பாம்பு கள், நோயாளர் விடுதிகளில் நட மாடுவதாக நோயாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இவ்வைத்தியசாலையில் விடுதியில் தங்கியுள்ள நோயா ளர்கள் தொகை அதிகரித்துள்ள நிலையில் சிற்றூழியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்வைத்திய சாலையில் நிலவும் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என வைத்தியசாலை வட்டாரங் கள் தெரிவித்துள்ளனர். (வி)

## சிதம்பர தீபம் நூல் வெளியீடு

(பருத்தித்துறை)

தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய பவள விழாவை முன்னிட்டு சிதம்பர தீபம் மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 23ஆம் திகதி சனிக் கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் வைத்திய கலாநிதி க.த. யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமா காண கல்வி அமைச்சின் செயலாளர் ச.சத்தியசீலன், சிறப்பு விருந்தினராக, வடம ராட்சி வலயக் கல்விப் பணிப் பாளர் சி. நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக இரசா யன வியல் சிரேஷ்ட விரிவுரை யாளர் கலாநிதி நா. சிவபாலன், ஆய்வுரையை கலாநிதி மனோன் மணி சண்முகதாஸ் ஆகி யோர் நிகழ்த்துவார்கள். (109)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்களுக்கான செயல மர்வு ஒன்று எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை நடைபெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத் தினால் மானிப்பாய் ஆசிரிய வள நிலையத்தில் நடத்தப்பட வுள்ள செயலமர்வுக்கு வழி காட்டல் ஆலோசனை ஆசிரி யர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட் கப்பட்டுள்ளது.

## கிராம அலுவலர் சேவை III இற்கான பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கிராம அலுவலர் சேவையின் III ஆம் வகுப்பின் அலுவலர் களுக்கான வினைத்திறமை தடைகாண் பரீட்சைக்கு தகுதி யானவர்களிடமிருந்து விண்ணப பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சை எதிர்வரும் செப் ரெம்பர் மாதம் நடத்தப்படவுள் ளதுடன், வடமாகாணத்தில் யாழ்ப் பாணம், மன்னார், முல்லைத் தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட் டங்களில் நடத்தப்படவுள்ளது.

29.09.2010 தொடக்கம் அமுலுக்கு வரும் கிராம அலுவலர களைச் சேர்த்துக் கொள்ளும் நடைமுறையின் படி கிராம சேவையாளர் சேவையின் வகுப்பு III ஆம் பிரிவுக்கு உள் ளீர்க்கப்பட்ட அலுவலர்கள இப்பரீட்சைக்குத் தோற்றுவ தற்கு தகுதியுடையவர்கள் ஆவார்.

விண்ணப்பிக்க விரும்புவோர தமது சேவைப் பிரிவுடன் தொடர்பான பிரதேச செயலா ளர் ஊடாக எதிர்வரும் யூலை மாதம 13 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், ஒழுங் கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவு, பொலவத்தை பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 2012.06.15 திகதிய வர்த்தமானியிலோ அல்லது தினமுரசு யாழ். காரியாலயத் திலோ பார்வையிட முடியும்.

## சிறுகதைப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை கலை இலக்கியக் கழகம் தனது வெள்ளி விழாவை முன்னிட்டு சிறுகதைப் போட்டியொன்றை நடத்த முன்வந்துள்ளது.

இப்போட்டிகள் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, நீர் கொழும்பு விஜயரட்ணம் இந்து மத்திய கல்லூரி, கொழும்பு தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் மண்டபங்களில் நாளை புதன்கிழமை காலை 10 மணி முதல் ஆரம்பமாகி நடைபெற வுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்ற விண்ணப்பித்தவர்கள் மேற்குறிப்பிட்ட 3 இடங்களில் தமக்கு விருப்பமான ஒரு இடத்தினைத் தெரிவு செய்து போட்டியில் பங்குபற்ற முடியும்.சிறுகதைகள் யாவும் மீள் குடியேற்றம் என்னும் கருப்பொரு ளைக் கொண்டிருத்தல் வேண் டும் எனவும், அதற்குப் பொருதத மான தலைப்பை இட்டு 3 மணித்தியாலங்களுக்குள் தரவேண்டும் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

திறந்த போட்டிகள் யாவும் தனியாகவும், தெல்லிப்பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதிற்கு உட்பட்டோருக்கு வேறாகவும் நடத்தப்படுவதுடன் முதலாம் பரிசுத் தொகையாக 10 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் பரிசுத் தொகையாக 7 ஆயிரம் ரூபாவும், 3ஆம் பரிசுத் தொகையாக 5 ஆயிரம் ரூபா வும் தரமான கதைகளுக்கு ஆயிரம் ரூபாவும் வழங்கப்ப டும என அறிவிக்கப்பட்டுளளது.



நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் அதிபர் பா. சிவராசா தலைமையில் நடைபெற்ற மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டு விழாவில் மாணவ தலைவர் ஒருவருக்கு அதிபர் சின்னம் சூட்டுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களுடன் மாணவர் தலைவர்களையும் காணலாம்.

எல்லாருக்குமே உங்கள் காதைக் கொடுக்கலாம்
ஒரு சிலரிடம் மட்டுமே வாயைக் கொடுக்கலாம். -பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## நினைவில் எதுவும் நிற்பதில்லை!

எப்படி இருந்த நாம் இப்படி ஆகிவிட்டோம்! என்று வருத்தப் பட்டுக் கொள்ளப் பல்வேறு சங்கதிகள் இருந்தாலும், நமக்கு அதிகரித்து வரும் மறதிக் குணத்தை அதில் ஒன்றாக சேர்த்து, அதற்காகவும் வருத்தப்பட வேண்டும்.

வயதாக ஆக மறதி அதிகரித்து வருவது ஒருபுறமிருக்கட் டும். மனிதகுலத்தின் நாகரிக வளர்ச்சியில் வரவர எதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய தேவை குறைந்து வருவதையும் பார்க்க வேண்டும்.

எதையும் மனனம் செய்து வைத்திருந்து கற்ற முறை இப் போது இல்லை. கல்குலேட்டர் வந்ததோடு வாய்பாடு பாடமாக் குதல் அவசியமற்றுப் போனது. கம்ப்யூட்டர் வந்து நமக்காக எல்லா நினைவுகளையும் சேமித்து வைத்துக் கொண்டது. இணையத்தின் விரிந்த வெளி உண்டான பிறகு, அது எதைக் கேட்டாலும் நொடிக்குள் கொண்டுவந்து கொட்டியது.

கம்ப்யூட்டர் நினைவிடங்களின் அளவு பெருகிப் பெருகி வளர்ந்தபடியே, நம் ஞாபகத்தில் எதையும் இருத்தி வைத்துக் கொண்டு அவஸ்தைப்பட வேண்டாம் என்று சொல்லிக் கொண் டிருக்கிறது. தொலைபேசி எண்களைக் கூட இப்போது யாரும் மனனம் செய்து வைத்துக் கொள்வதில்லை.

நம் முன்னோர் தங்கள் மனங்களில் மனனம் செய்து பதி த்து வைத்திருந்ததன் மூலமே தம் அறிவுச் சேகரங்களை நமக் குக் கடத்தித் தந்தார்கள். நமது பண்டைய இலக்கியங்கள், மருத்துவ சோதிடக் குறிப்புகளெல்லாம் மனனம் செய்து வைத் திருந்து அடுத்த சந்ததிக்குத் தருவதற்காகவே செய்யுள் வடிவில் அவற்றை இயற்றிச் சொல்லி வந்திருக்கிறார்கள்.

முகமது நபியின் போதனைகள் அனைத்தும் அவரது துணை வியாரும் தோழர்களும் மனனம் செய்து வைத்திருந்து பின்னா ளில் எழுத்து வடிவாகத் தொகுக்கப்பட்டவையே. அதுபோல கௌதம புத்தரின் போதனைகளும் ஆனந்தன் முதலான அவ ரது சீடர்களால் ஞாபகம் வைக்கப்பட்டுப் பின்னர் தொகுக்கப் பட்டவையே.

இன்று அப்படி ஒரு முயற்சியை நம்மால் நினைத்துப் பார்க்க முடியாது. பல்கிப் பெருகிவிட்ட இணையதளங்கள், நவீன தொலைத் தொடர்புச் சாதனங்கள் நம்மைப் படுசோம்பேறிக ளாக்கி விட்டதுடன் மெல்ல மெல்ல எங்களைத் தமக்கு அடிமைகளாக மாற்றிவிட்டன.

எல்லாவற்றையும் இயந்திரங்களின் கையில் கொடுத்து விட்டு நாம் மறதி மன்னர்களாகி விட்டோம். இந்த மறதி நம் மைக் குழப்பி கிட்டத்தட்ட நோயாளிகளாகவே மாற்றிவிட்டது. வீட்டிலிருந்து கதவைப் பூட்டிவிட்டு வெளியே வந்தபிறகு நம்மை நாமே நம்பமுடியாத நிலை ஏற்படுகிறது. மின்விசிறியை நிறுத்தி னோமோ, வீட்டுக்கு பூட்டு போட்டோமா இப்படி பல்வேறு சந்தேகங்கள். இயந்திரகதியாக வாழ்க்கையை ஓட்டுகிறோம்.

என்ன தகவல்களை வேண்டுமானாலும் தருவதற்கு தொலைக்காட்சியும் கணனியும் இணையமும் உள்ளபோது மனனம் செய்யும் சிரமம் எதற்கு அல்லது வாசிப்புதான் எதற்கு என்று நினைக்கிறோம். கேட்பது பார்ப்பது மட்டுமே நடை முறையில் உள்ள மனிதர்களாகி விட்டோம்.

சமீப காலம் வரையில் கூட, பல பேச்சாளர்கள், அடிபிறழா மல் கவிதைகள், செய்யுள்கள், பாடல்களை நினைவிலிருந்து பாடி அருமையாக விளக்கங்கள் கொடுப்பதைக் கேட்டிருக் கிறோம். இப்போதோ கையில் ஐ-போட் ஐ-பாட் கருவிகளை வைத்துக்கொண்டு அதைப் பார்த்துப் பாடுபவர்கள் பேசுபவர்க ளையே பார்க்கிறோம்.

இவ்வாறு ஞாபக சக்தியைக் கைவிட்டு வரும் மனிதனது மூளையின் விருத்தி குறைந்துவிடுமா தெரியவில்லை. ஆனால், விஞ்ஞானக் கதைகளில் சொல்லப்படுவது போல, இயந்திரங் களின் சிந்தனைக்கு இவன் அடிபணியும் காலம் வரலாம் என்றே தோன்றுகிறது.

- ஆசிரியர் -

# வியாபார அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான சிபாரிசு கிடைக்காமையால் அதிருப்தி

(வவுனியா)

வவுனியா வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் கடந்த ஒரு வருடங்களுக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான சிபாரிசுக்கு விண்ணப்பித்திருந்த நிலையிலும் இதுவரை தமக் கான சிபாரிசுகளை வழங்காமையினால் பிரதேச செயலகத்தில் வியாபார அனுமதிப்பத் திரத்தை பெறமுடியாதிருப்பதாகவும் இதன் காரணமாக பல்வேறான சிரமங்களுக்கு முகம் கொடுப்பதாக வும் அப்பகுதி வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ் வியாபார அனுமதிப்பத்திரங்களை பெறுவதற்காக பிரதேசசபை தமது வியாபார நிலையத்தை பார்வையிட்டு அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு தகுதியுள்ளதா என சிபாரிசு செய்யும் பட்சத்திலேயே பிரதேச செயலகத்தி னால் வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

எனினும் வவுனியா வடக்கு பிரதேசசபை அச் சிபாரிசு தொடர்பில் எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாது இருப்பது மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேச வர்த்தகர்கள் என்ற ரீதியில் கடன்களை பெற்றுக்கொள்வதற்கும் வர்த்தகத்தை விஸ்தரிப்பதற்கும் சிரமமான நிலை காணப்படுவ தாகத் தெரிவித்தனர்.

வர்த்தகர்கள் வியாபார அனுமதி பெற்றுக் கொள்ளாமையினால் வவுனியா வடக்கு பிரதேச சபையும் பல இலட்சம் ரூபா வரியினை இழக்கும் நிலையிலும் உள்ளதாகவும் தெரிவித்தனர். (160)

# இலங்கையில் உள்ள பிரித்தானியர் கௌரவிப்பு

பிரித்தானிய அரசி இரண் டாம் எலிசபெத்தின் பிறந்த தினத்தையொட்டி கௌரவிக் கப்படுபவர்களின் பட்டியலில் இலங்கையில் வசிக்கும் பிரித் தானியரான மைக்கல் மேய்ல ரும் இடம்பெற்றுள்ளதாக கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் தெரி வித்துள்ளது.

இலங்கையில் பேசப்படும் ஆங்கிலமொழியிலுள்ள பிரத்தி யேக சொற்களைக் கொண்ட ஆங்கில அகராதியொன்றை மைக்கல் மேய்லர் எழுதினார். 2007 ஆம் ஆண்டு இந்த அக ராதி வெளியிடப்பட்டது.

கொழும்பிலுள்ள பிரித்தா னிய உயர்ஸ்தானிகராலயத்தில் பகுதிநேர ஆசிரியராக கடமை யாற்றும் மேய்லர், ஆங்கில மொழிக்கு ஆற்றிய சேவைக்காக எம்.பி.ஈ. விருது வழங்கி கௌர விக்கப்பட்டதாக பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்தின் ஊடக அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

1985 ஆம் ஆண்டு இலங்கை க்கு வந்த மேய்லர், பிரிட்டிஷ் கவுனஸிலில் ஆங்கில ஆசிரியர் களுக்கான ஆரம்பப் பயிற்சி வகுப்புகளில் சிங்கள, தமிழ் மொழிகளில் கற்பித்தார்.

தனக்கு எதிர்பாராத இந்த கௌரவம் கிடைத்தமை தொடர் பில் தான் வியப்படைவதாகவும் இதற்காகதான் மிக கடமைப்பட் டுள்ளதாகவும் மைக்கல் மேய்லர கூறியுள்ளார்.

# புராதன யுக மனித எழும்புக்கூடு

(கொழும்பு)



புளத்சிங்கள - பாகியங்கல பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆய்வின் போது புராதன யுகத்திற்குரிய முழு மனித எழும்புக்கூட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

புராதன யுக மனித எழும்புக்கூட்டு எச்சம் முழுமையாக கிடைக் கப்பெற்ற முதல் சந்தர்ப்பம் இதுவென பாகியங்கல தொல்பொருள் அகழ்வாராய்ச்சி அதிகாரி ஒசான் வெதகே தெரிவித்துள்ளார்.

எழும்புக்கூட்டு எச்சம் மீதான மேலதிக ஆய்வுகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# இருவர் கைது

(கொழும்பு)

தலைமன்னார் குடியிருப்பு பகுதியில் 773 கிராம் ஹெரோ யினுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் பசியாளை யைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் நபர்களாவர்.

நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்ட இவர்கள் நேற்று மன்னார் நீதவான் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்

# கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை நிறுத்தம்

(கொழும்பு)

கொழும்புக்கும் தூத்துக் குடிக்கும் இடையிலான பயணி கள் கப்பல் சேவை கைவிடப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

போதிய வருமானம் ஈட்ட முடியாத நிலையிலேயே இந்த சேவை கைவிடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே இந்தக் கப்பல் சேவை பல தடவைகள் இடை நிறுத்தப்பட்டு, பின்னர் தொ ரப்பட்டிருந்தன.

அளவில் பெரிதாக ஈடுபடுத் தப்பட்டுள்ள இந்தக் கப்பலை பயன்படுத்தும் பயணிகள் குறைந்த நிலையில் காணப்படு கின்றனர்.

எவ்வாறாயினும், இதற்கு பொருத்தமான கப்பல் ஒன்றை சேவையில் ஈடுபடுத்துவது குறித்து இந்தியா மற்றும் இலங்கை அரசாங்கங்கள் ஆலோ சித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கோழிச்சண்டை நிலையம் முற்றுகை 22 சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

மாரவில பொலிஸ் பகுதி யின் லுனுவில - பட்டிருப்பு பிரதேசத்தில் நடத்திச் செல்லப் பட்டு வந்த சட்டவிரோத கோழிச சண்டை நிலையம் மற்றும் சூதாட்ட நிலையம் என் பவை முற்றுகை யிடப்பட்டுள்ளது.

வென்னப்புவ பொலிஸாரால் நேற்று முன்தினம் இரவு முற்றுகையிடப்பட்ட சூதாட்ட நிலையத்தில் இருந்து 22 சந் தேக நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

அத்துடன், 8 சண்டைக் கோழி கள், 3 முச்சக்கர வண்டிகள், 13 மோட்டார் சைக்கிள்கள், 5520 ரூபா பணம் என்பவற்றை பொலி ஸார் கைப்பற்றியுள்ளனர்.

நீண்ட காலமாக நடத்தப் பட்டு வரும் இந்தச் சூதாட்ட மத்திய நிலையத்திற்கு பிரதேச அரசியல் வாதிகள் மற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளதாக தெரிய வருகிறது. சந்தேகநபர் கள் மாரவில நீதவான் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள் ளனர்.

# மாணவர்களுக்கு அறிவுறுத்தல்

(சாவகச்சேரி)

வவுனியாவில் நடைபெற்று வரும் மாகாண மட்ட விளை யாட்டு விழா மற்றும் மெய்வண் மைப் போட்டிகளில் பங்குபற் றும் தென்மராட்சி கல்வி வலயத தைச் சேர்ந்த மாணவர்கள் உரிய ஆவணங்களுடன் பாடசாலை கடிதத் தலைப்பில் அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத் தினை தம்முடன் எடுத்துச் செல்லு மாறு வலயக்கல்விப் பணிப் பாளரினால் அறிவிக்கப்பட்டுள் ளது. (11)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பூநகரி வேரவில் இந்து மகா வித்தியாலய வருடாந்த பரி சளிப்பு விழா இன்று செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி பா.சோதி லிங்கம் தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிரேம மதுரநாயகம், சிறப்பு விருந்தினராக பூநகரிக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அ.தர்மரத்தினம், வேரவில் வைத் திய அதிகாரி கோ.பன்னீர்ச் செல்வம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# ஊடகங்களை கட்டுப்படுத்தலாமா?

## ஏன் கூடாது?

- மருதன்

இன்று செய்தித்தாள்களையும் தொலைக்காட்சி சனல்களையும் பத்திரிகைகளையும் நடத்திக் கொண்டிருப்பவர்கள் யார்? சமூகத்துக்குச் சேவை செய்வதற்காகவும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும் சீர்கேடுகளைத் தட்டிக் கேட்பதற்காகவும் அவதரித்த போராளிகளா?

இப்படித்தான் முன்பு மருத்துவர்களையும் ஆசிரியர்களையும் நினைத்து வந்தோம். இந்த இரண்டும் சேவை அல்ல, தொழில்களே என்று தெரிந்துகொண்ட பிறகு மயக்கம் தெளிந்தது. ஆனால், "மீடியா மாயை" மட்டும் விலகமாட்டேன் என்கிறது.

காரணம் அதன் மீது கட்டமைக்கப்பட்டிருக்கும் அதீத புனித பிம்பம். ஜனநாயகத்தின் நான்காவது தூண் அல்லவா? லேசாக உரசினால்கூட, தேசத்தின் ஆன்மாவே சிதைந்துவிட்டது என்று குரல் கொடுக்க பத்திரிகையாளர்களும் எழுத்தாளர்களும் அறிவுஜீவிகளும் ஓடோடி வந்துவிடுவார்கள். ஸ்கூப் புகழ் குல்தீப் நய்யார் சமீபத்தில் குரல் கொடுத்திருக்கிறார். "ஊடக சுதந்திரத்துக்கு ஏதாவது பங்கம் வருகிறது என்று தெரிந்தால், முதல் ஆளாக நான் போராட்டத்தில் குதிப்பேன்."

ஊடக சுதந்திரம் காக்கப்பட வேண்டும் என்று அவுட்லுக், ஃப்ரொண்ட்லைன் இரண்டும் கவர் ஸ்டோரி வெளியிட்டு விட்டன. மீடியாவுக்கு எதிராக அரசாங்கம், நீதித்துறை, நிர்வாகத் துறை என்று பெரும்படை திரட்டப்பட்டுக் கொண்டிருப்பதாகவும், எப்பாடுபட்டாவது இந்த முயற்சிகளை முறியடிக்க வேண்டும் என்றும் பலர் கவலையும் கோபமும் கொண்டு பொங்கியிருக்கிறார்கள்.

இந்த விவாதம் கிளம்பியதற்கு ஒரு முக்கிய காரணம் பிரஸ் கவுன்சில் தலைவர் மார்கண்டேய கட்ஜு. மற்ற துறைகளைப்போல் மீடியாவும் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பது இவர் வாதம். அதெப்படி எங்களைக் கட்டுப்படுத்தலாம் என்பது மீடியாவின் கோபம். எங்களைக் கட்டுப்படுத்துவது ஜனநாயகத்தைக் கட்டுப்படுத்துவது ஆகாதா?

இந்த வாதத்தை ஏற்கவேண்டுமானால், ஒரு ஜனநாயக நாட்டில் எதையும் யாரும் கட்டுப்படுத்தக் கூடாது என்று ஒரு சட்டம் போட்டுவிட்டு மற்ற எல்லாச் சட்டங்களையும் விலக்கிக்கொண்டுவிட வேண்டும். குற்றத்தைத் தடுக்கவேண்டியது காவல் துறையின் பணி. எனவே அவர்களை யாரும் மேற்பார்வையிடக் கூடாது. நீதி வழங்கவேண்டியது நீதிமன்றத்தின் பணி. எனவே யாரும் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்க்கக் கூடாது. படிக்க வேண்டியது மாணவர்களின் கடமை. எனவே அவர்களை யாரும் கட்டுப்படுத்தக் கூடாது.

நான்காவது தூண் இழைக்கும் நான்கு முக்கிய தவறுகளைப் பார்த்தால் ஏன் ஊடகங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பது தெரியவரும்.

### 1. அவசரம்

பிரேக்கிங் ஸ்டோரி, ஃப்ளாஷ் நியூஸ், எக்ஸ்க்ளூஸிவ் என்றெல்லாம் பெயர் சூட்டி, அடுத்த நிமிடம் உலகம் வெடித்துச் சிதறப்போகிறது என்னும் தொனியில் உப்புச்சப்பில்லாத ஏதாவதொரு விஷயத்தை எடுத்துக்கொண்டுஅலசுவது.



**ஒருவரை ஹீரோவாக்க வேண்டுமா, வில்லனாக்க வேண்டுமா என்பதை முதலில் முடிவு செய்துகொண்டு விடுகிறார்கள். அதற்கேற்ப சாட்சிகள், காட்சிகள், ஒலி, ஒளி, கிராஃபிக்ஸ் எல்லாம் சேர்த்து தயாரித்து சுடச்சுடப் பரிமாறி விடுகிறார்கள். செய்திகளை அளிப்பது அல்ல, பிம்பங்களைக் கட்டமைப்பதே மீடியாவின் முதன்மையான பணியாக இருக்கிறது.**

கருத்து சொல்வதற்காகவே காத்திருக்கும் 'எக்ஸ்பேர்ட்களை' வீடியோ கொன்ஃபரன்ஸிங்கில் வரவழைத்து அறிவுஜீவித்தனமாக கேள்விகள் கேட்டு, முதல் நபர் பேச ஆரம்பிப்பதற்குள் கட் சொல்லி இரண்டாவது எக்ஸ்பேர்ட்டை இழுத்து, அவரையும் அந்தரத்தில் தவிக்க விட்டுவிட்டு இன்னொருவரிடம் தாவி, பிறகு முதல் நபர் விட்ட இடத்தில் இருந்து தொடங்கி... இப்படி ஒரு மணி நேரம் காரசாரமாக ஒரு விவாதம் நடந்து முடிந்து, எல்லாருக்கும் நன்றி சொல்லிவிட்டு, ஸ்டுடியோ லைற்றை அணைத்து அடுத்த நிகழ்ச்சியை புன்னகையுடன் ஆரம்பிக்கும்போது, எதைப் பற்றி இத்தனை பரபரப்பான விவாதம் என்பதே மறந்து விடுகிறது.

மொத்தத்தில், ஒரு நிகழ்வு உருப்பெறத் தொடங்கி அடுத்தடுத்த கட்டத்துக்கு நகர்ந்து முழுமை பெறுவதற்கு முன்பே, குறுக்கே புகுந்து கழுத்தை நெரித்துக்கொன்று பிரேதப் பரிசோதனை நிகழ்த்தி விடுகிறார்கள். எந்தவொரு செய்தி யையும் நம்மால் முழுமையாகவும் தெளிவாகவும் கடைசிவரை தெரிந்துகொள்ள முடிவதில்லை. அரைவேக்காட்டு செய்திகள் பற்றிய மீடியாவின் அரைவேக்காட்டு கருத்துகளே நம் கருத்துகளாக மாறிவிட்டன.

### 2. அநாவசியம்

பல சமயங்களில், மீடியாவே துப்பறிவாளராக மாறி ஒரு குற்றத்தைக் 'கண்டுபிடித்து', பொலிஸாக மாறி, 'துப்பறிந்து', வழக்கறிஞராக மாறி 'விசாரித்து', நீதிபதியாக மாறி 'தீர்ப்பும்' அளித்து விடுகிறது. ஒருவரை ஹீரோவாக்க வேண்டுமா, வில்லனாக்கவேண்டுமா என்பதை முதலில் முடிவு செய்துகொண்டு விடுகிறார்கள். அதற்கேற்ப சாட்சிகள், காட்சிகள், ஒலி, ஒளி, கிராஃபிக்ஸ் எல்லாம் சேர்த்து தயாரித்து சுடச்சுடப் பரிமாறி விடுகிறார்கள்.

செய்திகளை அளிப்பது அல்ல, பிம்பங்களைக் கட்டமைப்பதே மீடியாவின் முதன்மையான பணியாக இருக்கிறது. பல சமயங்களில் அவர்களே இந்த பிம்பங்களை உடைத்தும் விடுகிறார்கள். சமீபத்தில் மீடியா உருவாக்கி மீடியாவே உடைத்த பிம்பங்கள், ராகுல் காந்தி, நித்யானந்தா, மம்தா பானர்ஜி. இவர்கள் உருவாக்குவதையும் உடைப்பதையும் நுகர்வதே நம் வேலையாகப் போய்விட்டது.

### 3. அதீதம்

குப்பை அள்ளிச் செல்லும் வண்டி ஓரிடத்தில் நிறுத்தி அனைத்தையும் சரசரவேன்று கீழே கொட்டுவதைப் போல் நீங்கள் சுதாரிப்பதற்குக்கூட அவகாசம் அளிக்காமல், ஒன்றின்மேல் ஒன்றாக பல விஷயங்களைத் திணித்துக் கொண்டிருக்கிறது மீடியா. எது எனக்கானது? எது என் வாழ்வைத் தீர்மானிக்கிறது? எது என்னைப் பாதிக்கிறது? எதைப் பற்றி நான் மேலோட்டமாகவும் எதைப் பற்றி நான் ஆழமாகவும் தெரிந்துகொள்ள வேண்டும்? ஒன்றை உள்வாங்குவதற்குள், ஒன்றைப் புரிந்துகொள்ள முயற்சி செய்வதற்குள், ஒன்பது பிரேக்கிங் நியூஸ்.

எது செய்தி, எது செய்தியல்ல என்பதையும் எதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும் எதைத் தெரிந்துகொள்ளக் கூடாது என்பதையும் மீடியாவே முடிவு செய்கிறது. எதை நாம் விவாதிக்க வேண்டும், எதை அப்படியே ஏற்கவேண்டும், எதைப் பற்றி யோசிக்கவே கூடாது என்பதையும் அவர்களே தீர்மானித்து விடுகிறார்கள்.

ஆங்கிலத்தில் Data mining என்று சொல்வார்கள். இன்றைய தகவல் தொழில்நுட்ப உலகில், இணைய, அச்சு, ஒளி, ஒலி ஊடகங்கள் புற்றீசல்போல் பெருகியிருக்கும் சூழலில், அதீதங்களுக்கு மத்தியில், குப்பைகளுக்கு மத்தியில் சரியான விஷயங்களைத் தேடிப்பெறுவது மிக மிக சவாலான காரியம்.



### 4. அலட்சியம்

சென்னையில் ஒரு விபத்து நடைபெறுகிறது. அதே விபத்து காஷ்மீரில் நடைபெறுகிறது. இரு சம்பவங்களிலும் உயிரிழப்பு எண்ணிக்கை ஒன்றே. இந்த இரண்டும் எப்படிச் செய்தியாகிறது என்பதைக் கவனியுங்கள். சென்னை விபத்து இரு பத்திகளைத் தாண்டி நீளாது. ஆனால், காஷ்மீர் கதை சில பக்கங்களுக்கு நீளலாம். பல கருத்து சேகரிப்புகள் நடத்தலாம். தீவிரவாதிகளின் சதியாக இருக்குமா? லஷ்கரா அல் கொய்தாவா? இந்திய வீரர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்? பாகிஸ்தான் என்ன செய்யப்போகிறது? காஷ்மீர் பாதுகாப்பற்ற பிரதேசமாக மாறிக்கொண்டிருக்கிறதா? வேலையற்ற இளைஞர்களின் செயலா?

விதர்பாவில் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வது பிரேக்கிங் நியூஸ் ஆகாது. காஷ்மீர் விபத்து நிச்சயம் பிரேக்கிங் நியூஸ். மக்கள் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் தொடர்ந்து மீடியாவால் அலட்சியப்படுத்தப்படுகின்றன. மிகச் சிறந்த உதாரணம், 26/11 மும்பை தாக்குதலை ஊடகங்கள் விநியோகித்த விதம்.

0

கடந்த ஒரு மாதம் செய்தித்தாள்களில் வெளியான பரபரப்பு தலைப்புச் செய்திகளை நினைவுக்குக் கொண்டு வாருங்கள். நியூஸ் சனல்களில் நீங்கள் கண்ட காரசாரமான விவாதங்களை நினைத்துக் கொள்ளுங்கள். நொடிக்கு நொடி நகரும் ஃப்ளாஷ் நியூஸ்களை மீண்டும் மனத்தில் ஓடவிட்டுப் பாருங்கள். செய்திகளை வெவ்வேறு கோணங்களில் அலசிய எக்ஸ்பேர்ட்களின் வாதங்களை எடுத்துக் கொள்ளுங்கள்.

ஒரு நிகழ்வு குறித்து எத்தனை விதமான கோணங்கள் உங்களுக்குக் காண்பிக்கப்பட்டன? எத்தனை விதமான பார்வைகள் அளிக்கப்பட்டன? குறிப்பிட்ட ஒரு நிகழ்வு பற்றி நீங்கள் எப்படிப்பட்ட கருத்தை உருவாக்கிக் கொண்டீர்கள்? உங்கள் பார்வை எந்த அளவுக்கு மீடியாவால் விசாலப்படுத்தப்பட்டிருக்கிறது? எத்தகைய தெளிவை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்? குறிப்பிட்ட ஒரு கருத்தாக்கம் பற்றிய உங்கள் நிலைப்பாடு மாறியிருக்கிறதா, வலுவடைந்திருக்கிறதா, தளர்ந்திருக்கிறதா? உங்களைப் பற்றியும் உங்களைச் சுற்றியிருப்பவர்கள் பற்றியும் என்ன விதமான அபிப்பிராயத்தை நீங்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்?

அல்லது, நீங்கள் தெரிந்து கொண்டதுதான் என்ன?

0

மீடியா நிச்சயம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். ஆனால் யாரால்? சுயக் கட்டுப்பாடு அல்லது சுய தணிக்கை என்பது நேர்மையான பொலிஸ்காரர் அல்லது நல்ல அரசியல்வாதி போல் நடைமுறை சாத்தியமற்ற கற்பனை. அரசாங்கம் கட்டுப்படுத்தலாமா? செய்யலாம், ஆனால் இந்தக் கட்டுப்பாடு என்பது ஆளுங் கட்சிக்குப் பாதகமான அல்லது எதிர்க்கட்சிக்குச் சாதகமான செய்திகளைத் தணிக்கை செய்வதில் மட்டும்தான் சென்று முடியும். பரபரப்புச் செய்திகளை அளிக்காதே என்றோ ஊர்ஜிதம் செய்யமுடியாத, சரிபார்க்க முடியாத செய்திகளை அளிக்காதே என்றோ மக்களுக்கு உபயோகம் அளிக்காதவற்றைத் தொடாதே என்றோ அறிவுறுத்த யார் இங்கே இருக்கிறார்கள்?

0

நாம் என்னென்ன தெரிந்துகொள்ள வேண்டும் என்பதைவிட நாம் எதையெல்லாம் தெரிந்துகொள்ளக் கூடாது என்பதில்தான் மீடியா அக்கறை காட்டுகிறது. அந்த வகையில், அசலான செய்திகளை அளிப்பதில் அல்ல மறைப்பதில்தான் மீடியா முனைப்புடன் இருக்கிறது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

# வரட்சிக் காலநிலை நீடித்தால் மின்வெட்டு அமுல்படுத்தப்படும்

## இலங்கை மின்சார சபை அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தொடர்ந்தும் வரட்சியான காலநிலை நீடித்தால் மின் வெட்டை அமுல படுத்த நேரிடும் என இலங்கை மின்சாரசபை நிர்வாகம் அறிவித்துள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் நாட்டில் நிலவும் மிக மோசமான வரட்சிக் காலநிலை தற்போது நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீர் மின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. பாகிஸ்தான் மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் நாள் ஒன்றுக்கு எட்டு மணித்தியாலயம் மின்வெட்டு அமுல்படுத்தப்படுவதாக இலங்கை மின்சார சபை சுட்டிக் காட்டியுள்ளது.

நீர் மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தி வீழ்ச்சியினால், அனல் மின்நிலையங்களின் உற்பத்தியை அதிகரிக்க நேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு மின் அலகிலும் மின்சார சபைக்கு 5.88 ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

# பேருந்துக் கட்டணங்களை மீண்டும் அதிகரிக்க ஆலோசனை

பேருந்துக் கட்டணங்களை மீண்டும் அதிகரிப்பது தொடர்பில் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு இடையில் ஆலோசனை நடத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அஞ்சன பிரியஞ்சித் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசிய கொள்கையின் அடிப்படையில் ஜுலை மாதம் 31 ஆம் திகதியுடன் பேருந்துக் கட்டணங் கள் சீர்த்திருத்தப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அனைத்து பேருந்து உரிமையாளர்கள் சங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தி இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இரட்டைக் குடியுரிமையில் புதிய சட்டங்கள் அறிமுகம்

(கொழும்பு)

இரட்டைக் குடியுரிமை தொடர்பில் புதிய சட்டங்கள் அறிமுகம் செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் காலங்களில் இரட்டைக் குடியுரிமை தொடர்பிலான விண்ணப்பங்களை ஏற்றுகொள்ளும் போது புதிய நடைமுறைகள் பின்பற்றப்படவுள்ளதாக குடிவரவு குடியகழ்வுக் கட்டுப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

வேறு ஓர் நாட்டில் குடியுரிமை உடைய நபர் ஒருவர் இலங்கையில் இரட்டைக் குடியுரிமைக்காக விண்ணப்பம் செய்தால், முதலில் ஐந்து ஆண்டுகள் வதிவிட உரிமை வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். ஐந்து ஆண்டுகளின் பின்னரே குறித்த நபருக்கு இரட்டைக் குடியுரிமை அந்தஸ்து வழங்கப்படும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வெளிநாடுகளில் குடியுரிமை பெற்றுக் கொண்ட இலங்கையர்கள் எவ்வாறு குடியுரிமை பெற்றுக் கொண்டார்கள் என்பது பற்றிய விபரங்களை வெளியிட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

என்ன காரணத்திற்காக இலங்கையில் குடியுரிமை கோரப்படுகின்றது என்பது பற்றியும் விளக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

இரட்டைக் குடியுரிமை பெற்றுக் கொள்வதற்காக வீண்ணப்பிப்போர் கட்டணமாக இரண்டு தவணைக்குள் இரண்டு இலட்சம் ரூபாவினை செலுத்த வேண்டுமென குறிப்பிடப்படுகிறது. சட்ட திருத்தங்கள் கொண்டு வரும் நோக்கில் இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடவடிக்கை இந்த ஆண்டு ஆரம்பம் முதல் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெடிபொருட்கள் மீட்பு

(கொழும்பு)


முல்லைத்தீவு, மூதூர் மற்றும் அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களில் இருந்து வெடிப்பொருட்கள் சிலவற்றை பாதுகாப்பு தரப்பினர் மீட்டுள்ளனர்.

ரி - 56 ரக துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் ஆயிரத்து 16 ரவைகள் முல்லைத்தீவு செல்வபுரம் பிரதேசத்தில் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.


துப்பாக்கி ரவைகளை குறித்த பகுதியில் வைத்திருந்த சந்தேக நபர்கள் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில், முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை மூதூரிலுள்ள காட்டுப்பகுதியில் இருந்து 600 மில்லி மீற்றர் ரக மோட்டார் ஷெல் ஒன்று கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது. மூதூர் பொலிஸ் நிலையத்தின் அதிகாரிகள் குழுவொன்று இதை கைப்பற்றியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அக்கரைப்பற்றில் தனியாருக்கு சொந்தமான காணியிலிருந்து கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியைளச் சேர்ந்த இரு சிறுவர்கள் வயல் ஒன்றின் கால்வாயில் இருந்து கண்டெடுத்த கைக்குண்டை காணியில் விட்டுச் சென்றமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.



அம்பாந்தோட்டை, கட்டுவன பிரதேச கூட்டமொன்றின் போது கொல்லப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவாளர்களுக்கு முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இறுதி அஞ்சலி செலுத்தியதுடன், பொது மக்களுடன் உரையாடுவதை காணலாம்.




# கிடைக்குமா வீட்டுத்திட்டம்?

வரணி வடக்கு ஜே/339 கிராம சேவகர் பிரிவில் வசித்து வரும் எமக்கு சொந்த வீடு இல்லாததால் மிகப்பெரும் நெருக்கடிகளை எதிர் கொள்கின்றோம். கடந்த 2005 ஆம் ஆண்டு உலக வங்கி எமது பகுதி யில் சுமார் 150 இற்கு மேற்பட்ட வீடுகளையும் அரச சார்பற்ற நிறுவனம் 25 வீடுகளையும் வழங்கினார்கள். ஆனால் எமக்கு 2002 ஆம் ஆண்டு திருமணம் முடித்த காரணத்தால் அப் போதைய வீட்டுத்திட்டம் நிறுத்தப்பட்டது.

மீண்டும் 2010 இற்குரிய திட்டத்திற்கு சகல ஆவணங்களையும் சமர்ப்பித்தும் எமக்கு வீடு வழங்கவில்லை. 2011 ஆண்டு வீட்டுத்திட்டத்திலும் என் குடும்பம் உள்வாங்கப்படவில்லை. தற்போது 2012 ஆம் ஆண்டு சகல ஆவணங்களையும் மீண்டும் சமர்ப்பித்து விட்டு வீட்டுத்திட்டம் கிடைக்கும் என காத்து இருக்கின்றேன். கிராம அலுவலர் எனது கஷ்ட நிலையை உறுதிப்படுத்தியுள்ளார்.

பிரதேச செயலர், திட்டப்பணிப்பாளர், அரச அதிபர் ஆகியோருக்கு எமது குறைகளை எடுத்துக்கூறியுள்ளோம். எமது கணவரோ உடல் உளநலப் பாதிப்பிற்கு உள்ளாகி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார். எமது வறுமை நிலையை உணர்ந்து சமூகசேவை பகுதி (சாவகச்சேரி) வாழ்வாதார உதவியாக ரூபா 15000 ஐ வழங்கினார்கள். அப்பணத்தை நாம் இருக்கும் வீட்டில் சில்லறைக் கடை அமைத்து எமது மூன்று குழந்தைகளையும் காப்பாற்றி வருகின்றோம்.

வறுமை ஒருபுறம் வாட்ட வாழ்ந்து வருகின்றோம். எமது குறையை யாரிடம் சென்று முறையிடுவது?

இனிவரும் வீட்டுத்திட்டத்திலாவது எமது குடும்பத்தை உள்வாங்கி எமக்கு ஒரு வீடு அமைத்துத் தந்து யுத்தமற்ற எமது மண்ணில் நிம்மதியாக வாழவிடுவீர்களா? எம்குறை தினமுரசு ஊடாக அறிந்தாவது சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

*அ.புவனவதி*
*வரணி வடக்கு, வரணி.*

## குடியிருப்புகளுக்கு அருகில் குப்பைகள்

நாங்கள் கொழும்புத்துறை 5 ஆம் குறுக்குத்தெருவிற்கு தெற்குப பக்கமாக குடியிருக்கிறோம். கடந்த சில வாரங்களாக எங்கள் வீட்டுக்கு அண்மையாக சிலர் குப்பை, கூழங்களைக் கொட்டி வருகின்றனர். இதனால் டெங்கு நுளம்பு, ஈ, கொசு போன்றன பெருகும் நிலை ஏற்பட்டுள்ளன.

இதனைக் கொட்டுபவர்களிடம் கொட்டவேண்டாம் என அண்மையாக இருக்கும் மக்கள் கேட்ட போது பள்ளமாக இருக்கும் இடத்தில் கொட்டிப் பள்ளம் நிரவியதும் அதில் வீடுகள் கட்டப்படவுள்ளதாகப் பதிலளித்தார்கள்.

இக் குப்பை கொட்டிய பின்னர் காற்றினால் குப்பைகள், சொப்பின் பை என்பன பறந்து நீண்ட தூரத்திற்கு அப்பாலும் விழுகின்றன. இக்குப்பையில் பழுதடைந்த உணவுப்பண்டக் கழிவுகள் கொட்டுவதால் துர்நாற்றம் வீசுவதுடன், ஈ, கொசு போன்றவை அதிகமாகப் பரவி வருகின்றன. இதனால் வாந்திபேதி, வயிற்றோட்டம் போன்ற தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே இதனை சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாகப் பார்வையிட்டு தடுத்து நிறுத்துமாறு கோருகின்றோம்.

*சி.காந்தி*
*கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.*

# நேற்றுத் திறக்கப்படவிருந்த நினைவுக் கல்லுக்கு நிறப்பூச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, ஏறாவூர் நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் நேற்றுக் காலை திறக்கப்படவிருந்த அபிவிருத்திப் பணிகளுக்கான நினைவுக்கல் மற்றும் பெயர்ப்பலகைகளை இனந்தெரியாத நபர்கள் நிறப்பூச்சு பூசி சேதமாக்கியுள்ளனர்.

ஏறாவூர் நகரில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைரின் வேண்டுகோளின் பேரில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் உதுமாலெப்பையினால் 8 கோடி ரூபா செலவில் ஆரம்பிக்கப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்களுக்கான நினைவுக்கல் மற்றும் பெயர்ப்பலகைகள் மீதே இவ்வாறு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர்,

எனது வேண்டுகோளின்பேரில் ஏறாவூரில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் உதுமாலெப்பையினால் வழங்கப்பட்ட 8 கோடி ரூபா பெறுமதியான அபிவிருத்தி திட்டங்கள் ஆரம்பித்துவைக்கப்படவிருந்து. அத்துடன் பூர்த்திசெய்யப்பட்ட அபிவிருத்திப் பணிகளும் மக்களிடம் கையளிக்கப்படவிருந்தன.

இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு இவற்றின் மீது நிறப்பூச்சு பூசப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது. இந்த அபிவிருத்தி திட்டங்கள் என்னுடைய வேண்டுகோளின் பெயரில் இங்கு ஆரம்பிக்கப்படவுள்ளதால் அதற்கான பெயர்ப் பலகைகளில் எனது பெயரை அமைச்சர் உதுமாலெப்பை இணைத்துகொண்டார்.

ஆனால் இந்த பிரதேசத்தில் இருக்கும் அரசியல்வாதியொருவர் தனது பெயரை இணைக்கவேண்டும் என விடுத்த வேண்டுகோளை அமைச்சர் உதுமாலெப்பை நிராகரித்ததன் காரணமாக இந்த சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முன்னர் குறித்த அரசியல்வாதி தன்னுடைய பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகையை அவ்விடத்தில் வலுக்கட்டாயமாக அமைத்தபோதும் அமைச்சர் உதுமாலெப்பையினால் அவை அகற்றப்பட்டு இந்த நினைவுக்கல் மற்றும் பெயர்ப் பலகைகள் நாட்டப்பட்டன என்றார்.

# கிளிநொச்சியிலுள்ள தனியார் காணிகள் சட்டரீதியாக எவருக்கும் வழங்கப்படமாட்டாது

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள தனியார் காணிகள் எச்சந்தர்ப்பத்திலும் எத்தேவைக்காகவும் சட்டரீதியாக எவருக்கும் வழங்கப்படமாட்டாது என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநகர் கிராம அலுவலர் பிரிவு மக்கள் எதிர்கொள்ளும் காணிப்பிரச்சினைகள் தொடர்பாக கடந்த சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களுடைய காணிகள் எப்பொழுதும் அந்த மக்களுக்குதான். அவை எச்சந்தர்ப்பத்திலும் சுவீகரிக்கவோ அல்லது வேறு தேவைகளுக்காக வழங்கப்படவோ மாட்டாது. பாதுகாப்பு அமைச்சும் இதே நிலைப்பாட்டில் தான் உள்ளது இராணுவத்தின் பயன்பாட்டில் உள்ள தனியார் காணிகள் படிப்படியாக அவர்களிடமிருந்து பெறபட்டு உரியவர்களிடம் கையளிக்கப்படும். பல தனியார் காணிகள் அவ்வாறு பெறப்பட்டு மீண்டும் அந்த மக்களுக்கே கையளிக்கப்பட்டுள்ளது.



எனவே, அதில் சிலகால தாமதங்கள் இருப்பினும் அந்தந்த காணிகள் அந்த மக்களுக்கே என்பதில் எந்த மாற்றமும் இல்லை எனத் தெரிவித்த அவர், கிளிநொச்சியில் எதிர்காலத்தில் காணிகள் விநியோகிக்கப்படும் போது இந்த மாவட்டத்தினதும் மக்களினதும் நலன் கருதி நன்கு திட்டமிடப்பட்டே வழங்கப்படும்.

மேலும் குளங்கள் மற்றும் ஆற்றுப்பகுதிகளில் ஒதுக்கப்பட்ட நிலங்களிலும் அரச திணைக்களங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களிலும் நீண்டகாலமாக குடியிருப்போர் தொடர்பில் குடியிருப்பாளர்கள் பாதிக்கப்படாத வகையிலும் சட்டத்தை மீறாத வகையிலும் நடவடிக்கை எடுக் கப்படும் எனவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலக உதவித் திட்டப்பணிப்பாளர் அமல்ராஜ், காணி உத்தியோகத்தர் சிவகுமார், தலைமை கிராம அலுவலர் மகேந்திரன், நீர்ப்பாசனத் திணைக்கள பிராந்திய பொறியியலாளர் சுதாகரன், பிரதி பொறியியலாளர் விகிர்தன், கிளிநகர் கிராம அலுவலர் ஜெயந்தன், ஈழமக்கள் ஜனநாயகட்சியின் மாவட்ட அமைப்பாளர் தவநாதன் மற்றும் மக்கள் அமைப்பு பிரதிநிதிகள், பொது மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# மது, புகைத்தலுக்கு எதிராக விழிப்புணர்வு கருத்தரங்கு

(திருநெல்வேலி)

வலிகிழக்கு பிரதேச சபையின் புத்தூர் அலுவலகத்தில் மது மற்றும் புகைத்தலுக்கு எதிரான கருத்தரங்கு இடம் பெற்றது.

கோப்பாய் சுகாதாரப் பணிமனையை சேர்ந்த புத்தூர், சிறுப்பிட்டி பிரிவுகளைச் சேர்ந்த பொது சுகாதாரப் பரிசோதகர்களினால் இவ்விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

உணவு கையாளும் நிலையங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கான இக்கலந்துரையாடலில் மது ஒழிப்பு, புகைத்தல் எதிர்ப்பு; ஆகியவற்றுக்கான விளக்கவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

பிரதேச சபையின் உப தவிசாளர் வி.தர்மலிங்கம் இக்கருத்தரங்குக்கு தலைமை தாங்கினார். புகைத்தலாலும், புகைப்பவர்களினாலும் பாதிக்கப்படுபவர்களின் நோய்கள் பற்றியும், மதுவினால் ஏற்படும் தீமைகள் பற்றியும் இக்கருத்தரங்கில் விரிவாக விளக்கப்பட்டதுடன், இவை பற்றி கலந்துரையாடலும் நடாத்தப்பட்டது. (137)

# நுணாவில் பொது நூலகத்தில் போசாக்கு உணவு வழங்கல்

(சாவகச்சேரி)

சவகச்சேரி நகர சபையின் நுணாவில் பொது நூலகத்தினரால் நூலக வலுவூட்டல் திட்டத்தின் கீழ் சிறுவர்களுக்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்குமான போஷாக்குணவு வழங்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு நுணாவில் நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூணாவில் மேற்கைச் சேர்ந்த அமரர் திருமதி வசந்தாதேவி தனபாலசிங்கத்தின் 9 ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு அவரது குடும்பத்தினரால் ஒரு தொகுதி புத்தம் புதிய நூல்கள் பொது மக்களின் பாவனைக்காக அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது. (11)

# கோட்டக்கல்வி அதிகாரியாக ஸ்ரீராமச்சந்திரன் நியமனம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கோட்டக்கல்வி பணிப்பாளராக கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி அதிபராக கடமையாற்றிய எஸ்.ஸ்ரீராமச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது கடமையாற்றும் பருத்தித்துறை கோட்டக்கல்வி பணிப்பாளர் பா.ரகுநாதன் ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளதை அடுத்தே இவ்வெற்றிடத்திற்கு இவர் நியமிக்கப்படவுள்ளார் கோட்டக்கல்வி பணிப்பாளர் வெற்றிடத்திற்கான நேர்முகப்பரீட்சை அண்மையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (109)

# பாம்பு தீண்டிய சிறுமி வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

கிளாலி பகுதியில் சுருட்டை பாம்பு தீண்டிய சிறுமி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த மரியநாயகம் தினோஜி (வயது 11) என்ற சிறுமியே பாம்புக் கடிக்கு இலக்காகி அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மீள் குடியேறியுள்ள நிலையில் வீட்டிற்குப் பின்புறமாகவுள்ள கற்களை எடுத்து துப்பரவு செய்ய முற்பட்ட வேளை கற்களுக்குள் கிடந்த புடையன் பாம்பின் ஒருவகையான சுருட்டைப்பாம்பு தீண்டியது.

மயக்கமடைந்த சிறுமி உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (எஸ்)




மாத்தளை கந்தநுவர தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த தரம் 10,11 மாணவர்களும், ஆசிரியர்களும் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு யாழ். வந்த வேளை மருதனார் மடம் ஸ்ரீ ஆஞ்சநேயரை தரிசிக்க வந்திருப்பதனைக் காணலாம். (06)

# சாட்டி, மண்கும்பான் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க பதிவுகள் ஆரம்பம்

(தீவகம்)

தீவகத்தில் உள்ள மண்கும்பான், சாட்டி கிராமங்களில் மீள்குடியமர்ந்துள்ள மக்களுக்கு மின்சார விநியோகத்தை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இக்கிராமத்திற்கு மின்சார விநியோகத்தை வழங்கும் வகையில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்கம்பங்கள் நடப்பட்டு மின் வயர்களும் பொருத்தப்பட்ட நிலையில் இதுவரை மின்விநியோகம் வழங்கப்படவில்லை எனவும், இதனால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் இக்கிராம மக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் இது தொடர்பான முறைப்பாட்டை இக்கிராம மக்கள் வேலணை பிரதேச சபையின் தவிசாளரும், ஈ.பி.டி.பி வேலணை பிரதேச அமைப்பாளருமான சி.சிவராசாவிடம் முன்வைத்தனர்.

அவர் இதனை யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி அமைப்பாளர் க.கமலேந்திரனிடம் தெரியப்படுத்தினார். இதனையடுத்து உடனடியாக கடந்த வெள்ளிக்கிழமை ஈ.பி.டி.பி.யின் தலைமை அலுவலகத்தில் இக்கிராம மக்களுடன் ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மற்றும் வடக்கின் வசந்தம் திட்ட பணிப்பாளர் மற்றும் அதிகாரிகள் குழு கலந்துரையாடியதுடன் மின்சாரம் வழங்கப்படாமை தொடர்பாக கருத்துக்களையும் கேட்டறிந்தனர்.

இதனையடுத்து உடனடி நடவடிக்கையாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் உரியவர்களுக்குப் பணித்தார்.

மின்சார விநியோக்திற்கான பதிவுகள் மேற்கொள்ளப்படுவதால் இக்கிராம மக்கள் பதிவுகளை தவறாது மேற்கொள்ளுமாறு வேலணை பிரதேச சபை தவிசாளர் அறிவித்துள்ளார். (85)

# முரசின் இன்றைய பலன்

(19.06.2012 –செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் ஆனி மாதம் 05 ஆம் திகதி. அமாவாசைமுன் இரவு 8.55 வரை. நட்சத்திரம் மிருக சீரீடம் சித்த யோகம் பின் இரவு 1.00 வரை அமாவாசை விரதம். இராகு காலம் 2.54 - 4.24 வரை. சுப நேரம் 10.24 - 11.54 வரை. எமகண்டம் 8.54 - 10.24 வரை. குளிகை காலம் 11.54 - 1.24 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உற்சாகம், தராளமான பணவருவாய், குடும்ப அன்னியோன்யம், கூட்டுமுயற்சி வெற்றி தரும். |
| ரிஷபம் | சுயதொழிலில் வருமானம், புத்திரரால்சிறப்பு, எதிர்ப்புகள் அகலும், ஆன்மீகத்தில் ஈடுபாடு |
| மிதுனம் | பெரியோர் ஆசிகள், குடும்பத்தில் புத்திர பாக்கியம், பொருளாதாரம்உயரும், மருத்துவச்செலவுகள. |
| கடகம் | பயண அலைச்சல், சந்தர்ப்பங்களை பயன் படுத்தவும், குடும்பஅன்னியோன்யம். |
| சிம்மம் | தொழில் வெற்றி, மேலதிகாரிகள் பாராட்டு, எதிர்பாராத இலாபம், பல வழிகளால் பணவரவு. |
| கன்னி | அன்புக்கரிசனை, பொன்பொருள்சேரும், உயரதிகாரிகள் ஆதரவு, எதிர்பாராத இடமாற்றம். |
| துலாம் | செலவுகள் அதிகரிப்பு, பணவரவுகளில் தடை, பிணை போவதைத்தவிர். கருத்து வேறுபாடு |
| விருச்சிகம் | சுப காரிய ஈடுபாடு, பண அலைச்சல், உறவினரால பிரச்சினை, சுமாரான பொருளாதாரம். |
| தனுசு | சேமிப்பு உயரும், கல்வியில் மந்தமான நிலை, தொழிலில் போட்டி பொறாமை. இடமாற்றம் |
| மகரம் | வாகனசுபம், மனைவி வழியில் பிரச்சினைகள், பாராட்டுபுகழும்பெருகும், குடும்ப உறவுமேம்படும் |
| கும்பம் | சுலப நன்மை, அரச உதவிகள் கிட்டும், சேமிப்பு உயரும், பொன்பொருளால் அலைச்சல். |
| மீனம் | சகோதர உதவி, குடும்பத்தில் சுபகாரியங்கள், சமுதாயத்தில் நல்ல அந்தஸ்து வேலைவாய்ப்பு. |



ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயம்



வவுனியா ஸ்ரீசுமண வித்தியாலயம்

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டித் தொடரின் ஆண்கள் பிரிவில் சம்பியன் பட்டம் வென்ற ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் மகாவித்தியாலய அணியையும், பெண்கள் பிரிவில் சம்பியன் பட்டம் வென்ற வவுனியா ஸ்ரீசுமண வித்தியாலய அணியையும் காணலாம். (படம் : கனக்ஸ்)

# அணி நிரலிடல் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் அணி நிரலிடல் இன்றைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சமபோஷா அனுசரணையுடன் நடைபெறவுள்ள இப்போட்டித் தொடர் ஆண், பெண் என இருபாலாருக்குமிடையில் நடைபெறும் என்றும், இப்போட்டிகள் எதிர்வரும் 23, 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாகவும், இன்றைய தினம் இடம்பெறும் அணி நிரலிடல் நிகழ்வில் சம்பந்தப்பட்டவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறும் போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.(எஸ்.பி.)

# சிம்பாப்வே வெற்றி

சிம்பாப்வேயில் ஆரம்பித்துள்ள தென்னாபிரிக்க, பங்களாதேஷ், சிம்பாப்வே அணிகள் பங்குகொள்ளும் உத்தியோகப்பூர்வமற்ற முத்தரப்பு ருவென்ரி – 20 தொடரின் முதலாவது போட்டியில் பங்களாதேஷ் அணியை சிம்பாப்வே அணி தோற்கடித்துள்ளது.

ஹராரேயில் இடம்பெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் ஹமில்ட்டன் மஸகட்ஸா 35 பந்துகளில் 62 ஓட்டங்களை பெற்றார். பந்துவீச்சில் அபுல் ஹசன் 4 ஓவர்களில் 37 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

155 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்று 11 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் தமிம் இக்பால் 35 பந்துகளில் 38 ஓட்டங்களையும், இறுதிநேரத்தில் அதிரடியாக ஆடிய நசீர் ஹொசைன் 15 பந்துகளில் 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் கிறிஸ் மோபு 4 ஓவர்களில் 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், புரொஸ்பர் உற்செயா 3 ஓவர்களில் 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இப்போட்டியின் நாயகனாக சிம்பாப்வே அணியின் ஹமில்ட்டன் மஸகட்ஸா தெரிவானார்.

# அறிவிப்பு விரைவில் வேண்டும்

(கொழும்பு)

அடுத்து நடைபெறவுள்ள உலகக் கிண்ண ருவென்ரி – 20 போட்டித் தொடருக்கான பாகிஸ்தான் அணியை விரைவாக அறிவிக்கவேண்டும் என பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரர் அப்ரிடி தெரிவித்தார்.

இலங்கையில் இவ்வாண்டு செப்டெம்பரில் இடம்பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக ருவென்ரி -20 தொடருக்கான பாகிஸ்தான் அணியை இயலுமான வரையில் விரைவாக அறிவிக்க வேண்டும். அறிவிப்பதில் ஏற்படும் தாமதங்கள் பாகிஸ்தானின் வெற்றிக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

தற்போது அணியை அறிவித்தால் அது வீரர்களுக்குச் சாதகமாக அமையும். வீரர்கள் மனரீதியாகத் தங்களைத் தயார்படுத்திக் கொள்வதற்கு உதவும்.

உலக ருவென்ரி -20 தொடரில் வீரர்களுக்கான சவால்களுக்குத் தங்களைத் தயார்படுத்த காலம் தேவைப்படுகின்றது. ஏற்படும் தாமதம் தயார்படுத்தல்களைப் பாதிக்கும்.

ஒவ்வொரு புதிய அணித்தலைவரும் கற்றுக் கொள்ளும் பருவகாலம் ஒன்று காணப்படுகிறது. மொஹமட் ஹபீஸும் அப்பருவத்தினூடாகச் சென்று கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

நானும் அப்பருவத்தினூடாகச் சென்று வந்த பின் சிறந்த அணித்தலைவராக இருக்க முடிந்தது. எனவே மொஹமட் ஹபீஸ் சிறப்பாகச் செயற்படுவார் என்ற நம்பிக்கை உள்ளது.

மொஹமட் ஹபீஸிற்குக் கீழோ அல்லது மிஸ்பா உல் ஹக் இற்குக் கீழோ அணியில் விளையாடுவதற்குத் எனக்கு எந்தவிதப் பிரச்சினைகளும் இல்லை.

இருவரும் சிறப்பானவர்கள். எல்லா விடயங்களையும் என்னுடன் கலந்துரையாடுகின்றனர்.

இலங்கையில் இடம்பெறவுள்ள ருவென்ரி – 20 தொடரில் நிச்சயம் எமக்குச் சாதகமான பல அம்சங்கள் உள்ளன. அத்துடன் தற்போது இடம்பெற்று வரும் இலங்கை அணியுடனான தொடர் மூலம் நிறைய அனுகூலங்கள் எமக்குக் கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

# காலிறுதியில் போர்த்துக்கல், ஜேர்மனி



யூரோ கிண்ணக் கால்பந்துத் தொடரின் காலிறுதி ஆட்டத்திற்கு போர்த்துக்கல் மற்றும் ஜேர்மனி அணிகள் தகுதி பெற்றுள்ளன.

யூரோ கிண்ண கால்பந்தாட்ட தொடரின் காலிறுதிச் சுற்றுக்கு பி குழுவில் இருந்து இரண்டாவது அணியாக போர்த்துக்கல் முன்னேறியுள்ளது. தீர்மானமிக்க போட்டியொன்றில் நெதர்லாந்து அணியை எதிர்கொண்ட போர்த்துக்கல் 2–1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

போட்டியின் முதல்பாதியில் 1–1 என்ற கோல்கணக்கில் இரண்டு அணிகளும் சமநிலை பெற்றிருந்த நிலையில், இரண்டாவது பாதியில் போர்த்துக்கல் அணி மேலுமொரு கோலைப் போட்டது.

போர்த்துக்கல் சார்பாக இரண்டு கோல்களையும் அணித் தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ போட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதே சி குழுவில் பங்குபற்றிய மூன்று போட்டிகளிலும் வெற்றிபெற்ற ஜேர்மனி முதலாவது அணியாக காலிறுதிச் சுற்றுக்கு தகுதிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் இந்தியா

இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் (ஜூலை) இலங்கை செல்கிறது. இந்திய அணி இலங்கையுடன் 5 ஒருநாள் போட்டி மற்றும் இரண்டு ருவென்ரி – 20 போட்டியில் விளையாடுகிறது. ஜூலை 22ஆம் திகதி இந்த போட்டித்தொடர் தொடங்குகிறது. அதன் பின்னர் இந்திய அணி உள்ளூரில் நியூசிலாந்துடன் (ஆகஸ்ட்–செப்டம்பர்) 2 டெஸ்ட் மற்றும் இரண்டு 20 ஓவர் போட்டியில் ஆடுகிறது. பின்னர் செப்டம்பர் 18ஆம் திகதி முதல் அக்டோபர் 7ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெறும் ருவென்ரி – 20 உலக கோப்பையில் விளையாடும். இந்தியா– இலங்கை இடையேயான போட்டி விவரம்:– ஜூலை.22: முதல் ஒருநாள் போட்டி, ஜூலை24: 2ஆவது ஒருநாள் போட்டி, ஜூலை28: 3ஆவது ஒருநாள் போட்டி ஜூலை31: 4ஆவது ஒருநாள் போட்டி, ஓக4: கடைசி ஒருநாள் போட்டி



# மிகச் சிறந்த கப்டன் டோனி



(புதுடில்லி)

இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் மஹேந்திரசிங் டோனி, மிகச் சிறந்த அணித்தலைவர் என்று ஐவரிகோஸ்ட் கால்பந்து அணியின் அணித்தலைவர் திடையர் டிரோக்பா பாராட்டியுள்ளார்.

பெப்சி ருவென்ரி – 20 கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் புதுடில்லி தியாகராஜ் மைதானத்தில் நடைபெற்றது. இதையொட்டி நடைபெற்ற கண்காட்சி போட்டியில் இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் மஹேந்திர சிங் டோனி தலைமையிலான அணியுடன் டிரோக்பா அணி விளையாடியது.

புதுடில்லியின் ஊடக சந்திப்பில் பேட்டியளித்த டிரோக்பா கூறுகையில், இந்திய கால்பந்து பற்றி அதிகமாக எனக்கு தெரியாது. ஆனால் இங்கு வந்த பின்புதான் கால்பந்துக்கு எவ்வளவு பெரிய மரியாதை இருக்கிறது என்று தெரிந்து கொண்டேன்.

இந்திய கிரிக்கெட் அணி பற்றி ஓரளவு தெரியும். கடந்த உலகக் கிண்ண போட்டியில் இந்திய அணி சிறப்பாக விளையாடி கிண்ணத்தை வெல்ல அணித்தலைவர் என்ற முறையில் டோனி மிகச் சிறப்பாக செயற்பட்டார் என்று புகழாரம் சூட்டினார்.

பிறீமியர் லீக் கால்பந்து போட்டியில் செல்சி அணிக்காக நீண்ட காலமாக விளையாடி வரும் டிரோக்பா சமீபத்தில் அந்த அணியில் இருந்து விலகுவதாக அறிவித்தார். இது வரை வேறு எந்த அணியிலும் அவர் இணையவில்லை.

ஷாங்காய் ஷென்குவாவில் இணைய உள்ளதாக கூறப்படுகிறது.கடந்த சாம்பியன்ஸ் லீக் போட்டி இறுதி ஆட்டத்தில் பேயர்ன்மியூனிச்சை வீழ்த்தி செல்சி முதன்முறையாக கிண்ணத்தை கைப்பற்றியது. செல்சி கிண்ணம் வெல்ல திடையர் டிரோக்பா அடித்த கோல்கள்தான் காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

# சாய்னா சம்பியன்

(ஜகார்த்தா)

இந்தோனேசியன் ஓப்பன் பட்மின்ரன் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனையான சாய்னா நெஹ்வால் சம்பியன் பட்டம் வென்று அசத்தினார்.

உலகின் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற இந்தோனேசியன் ஓப்பன் பட்மின்ரன் தொடர் இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவில் நடந்தது. இதில், மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. உலகின் 5ஆம் நிலை வீராங்கனையான இந்தியாவின் சாய்னா நெஹ்வால், உலகின் 3ஆம் நிலை வீராங்கனையான சீனாவின் லி ஜூயுர்யியை எதிர்த்து விளையாடினார். கடந்த சில நாட்களுக்கு முன் நடந்த தாய்லாந்து ஓப்பனில் சம்பியன் பட்டம் வென்ற சாய்னா இம்முறையும் பட்டம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்டது.

இதனால், இரு வீராங்கனைகள் இடையே கடும் போட்டி நிலவியது. முதல் செட்டை ஜூயுர்யி 21,13 என்ற புள்ளி கணக்கில் கைப்பற்றி சாய்னாவுக்கு அதிர்ச்சி அளித்தார். அடுத்தடுத்த செட்களில் சுதாரித்து ஆடிய சாய்னா தனது அதிரடியை வெளிப்படுத்தினார். இதற்கு ஈடுகொடுக்க முடியாத ஜூயுர்யி தோல்வியை ஒப்புக் கொண்டார். 1 மணி நேரம் 4 நிமிடங்கள் போராடிய சாய்னா 13,21, 22,20, 21,19 என்ற புள்ளி கணக்கில் ஜூயுர்யியை வீழ்த்தி தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார்.



# மாகாண பெண்கள் கால்பந்து மாதகல் சென். ஜோசப் சம்பியன்

(வவுனியா)

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட பெண்கள் கால்பந்தாட்டப் போட்டியில் மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய அணி சம்பியனானது.

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுப் பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி கடந்த 13ஆம் திகதி வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றது.

இப்பிரிவின் இறுதிப் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி அணியும், மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய அணியும் மோதின.

இரு அணிகளுமே வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தமையால் இரு அணிகளின் பலம், பலவீனம் என்பனவற்றை நன்று அறிந்திருந்தன. இருப்பினும் மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலய அணி வீராங்கனைகளின் ஆட்டம் மிகவேகமானதாகவும், விவேகமானதாகவும் அமைந்திருந்தது. போட்டியின் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய அணி இறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மாகாண மட்ட சம்பியனானது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் கனகராயன்குளம் மகாவித்தியாலய அணியும், மன்னார் புனித வளனார் மகாவித்தியாலய அணியும் மோதின. பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் கனகராயன்குளம் மகா வித்தியாலய அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

இப்போட்டித் தொடரில் முதல் மூன்று இடங்களைப் பிடித்துக் கொண்ட அணிகள் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (12, 93)

## 64ஆவது ஆண்டு நிறைவு மாபெரும் கால்பந்து

(வேலணை)

வேலணை துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு தீகவத்திற்குட்ட அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்துப் போட் டித் தொடர் எதிர்வரும் 21ஆம் திகதி முதல், 23ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

வேலணை துறையூர் ஐயனார் சனசமூக நிலையம் மற்றும் விளையாட்டுக்கழகம் ஆகிய இணைந்து நடத்தும் இப்போட்டி தொடர் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. தீகவத்திற்குட்பட்ட 32 இற்கும் மேற்பட்ட அணிகள் பங்கு கொள்ளும்இப்போட்டித் தொடர் அணிக்கு ஒன்பது பேரைக் கொண்டதாக இடம் பெறவுள்ளதாகவும், போட்டியில் கிண்ணம் வெல்லும் அணிக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் போட்டி நிரல் ஒவ்வொரு அணிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், குறித்த நேரத் திற்கு அணிகளை வருகை தந்து போட்டி சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு தருமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.(எஸ்.பி, ஞா)

## நாட்டுக்காக விளையாட மறுத்தால் இரண்டு வருடங்களுக்குத் தடை

(கொழும்பு)

நாட்டுக்காக விளையாட முடியாது என மறுப்புத் தெரிவிக்கும் எந்தவொரு விளையாட்டு வீரருக்கும் அவ்விளையாட்டிலிருந்து இரண்டு வருடங்களுக்கு தடை விதிப்பதற்கு எண்ணியுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்காக குறிப்பிட்ட ஒவ்வொரு விளையாட்டுத்துறை சார்ந்த நிறுவனங்களுக்கும் அதற்கான அனுமதியை வழங்குவதற்கு விளையாட்டுத்துறை அமைச்சு எண்ணியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இலங்கை கிரிக்கெட் சங்கத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை 60 சதவீதத்தால் குறைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்

## இறுதிப் போட்டியில் றோயல்

(உரும்பிராய்)

ஈ.கே. குமரையா ஞாபகார்த்த கால்பந்துத் தொடரின் இறுதிப் போட்டிக்கு ஊரெழு றோயல் அணி தகுதி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட அனுசரணையுடன் யாழ். மாவட்ட கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் ஈ.கே. குமரையா ஞாபகார்த்த கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டம் ஒன்று உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டியில் ஊரெழு றோயல் அணியும், ஆனைக்கோட்டை யூனியன் அணியும் மோதின. இப்போட்டியில் ஊரெழு றோயல் அணி வீரர்களின் ஆட்டம் மிகவும் சிறப்பாக இருந்தது. போட்டியின் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய றோயல் அணி 3- 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

## யாழ். மாவட்ட மட்ட தாச்சி காளி அம்பாள் சம்பியன்

(கைதடி)

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தினால் நடத்தப்பட்ட தாச்சிப் போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் யாழ் மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கைதடி குமரநகர் விளையாட்டுக்கக்ழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற இறுதிப் போட்டியில் உடுவில் ஆலடி சிந்து அணியும், தாவடிகாளியம்பாள் அணியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய நேரம் முதல் இரு அணிகளும் சளைக்காது மோதிக்கொண்ட போதிலும் காளியம்பாள் அணி பழம் பெறுவதில் நிதானத்தைக் காட்டின சிந்து அணியால் காட்டாதமையால் பழம் பெறும் வாய்ப்புகள் கிடைத்தும் பழம் பெறாத நிலையில் காணப்பட்டார்கள்.

முதல் பாதி ஆட்டம் ஆரம்பமாகிய 05ஆவது நிமிடத்தில் காளியம்பாள் அணியைச் சேர்ந்த ச.விமல்ராஜ் தனது அணிக்கான முதலாவது பழத்தைப் பெற்றுக் கொள்ள அதனைத் தொடர்ந்து இரண்டாலது பழத்தை அ.சுரேஷ் 08ஆவது நிமிடத்தில் பெற்றுக் கொள்ள தொடர்ந்து 14ஆவது 18ஆவது நிமிடங்களில் மேலும் இரண்டு பழங்களை து.சுவிந்தன் பெற்றுக் கொண்ட நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் புது வேகத்துடன் களம் புகுந்தபொதிலும் போட்டி ஆரம்பமாகிய 03ஆவது நிமிடத்தில் சிந்து அணி வீரன் ச.திலீபன் ஒரு பழத்தை தனது அணிக்காக பெற்றுக் கொள்ள தொடர்ந்து காளியம்பாள் அணியைச் சேர்ந்த அ.நேசநாதன் 16ஆவது நிமிடத்திலும் து.சுவிந்தன் 18 ஆவது நிமிடத்திலும் பழங்களை பெற்றுக் கொண்ட நிலையில் போட்டி முடிவடைந்தது.

போட்டி நிறைவில் காளியம்பாள் அணி 06 - 01 என்ற பழக்கணக்கில் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக காளியம்பாள் அணியைச் சேர்ந்த து.சுவிந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

வெற்றி பெற்ற அணிக்கான சம்பியன் கிண்ணத்தை யாழ் மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வழங்கி கௌரவித்தார். (எஸ்.பி.)





## யூனியன் சம்பியன்

(மல்லாகம்)

மைலோக் கிண்ணக் கரப்பந்தாட்டத் தொடரின் 18 வயது பெண்களுக்கான மாவட்ட மட்ட கரப்பந்தாட்டத்தில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி சம்பியனானது.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் இப்போட்டித் தொடர் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரில் யாழ். மாவட்டத்திலுள்ள முன்னணிப் பாடசாலை அணிகள் பல பங்குகொண்டன.

இதில் முதலிடத்தை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை அராலி சரஸ்வதி வித்தியாலய அணியும், மூன்றாமிடத்தை வட இந்து மகளிர் கல்லூரி அணியும், நான்காமிடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் பிடித்துக் கொண்டன.

14, 16, 18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரில், 14 வயதுப் பிரிவில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலய அணியும், 16 வயதுப் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் சம்பியனானமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகள் நேரடியாகத் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (12)

# அழித்தொழிப்பு அரசியலை தொடக்கி வைத்தவர்கள் யார்?

**1977** ஆம் ஆண்டு. இடம் மட்டக்களப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளம் தலைவர் காசி ஆனந்தன் ஆவேசமாக பேசிக் கொண்டிருக்கிறார் "இளைஞர்களே வெகுண்டெழுங்கள் - நாங்கள் ஒரு காலத்தில் சிறப்பான போராடும் இனமாக இருந்தவர்கள் - நாங்கள் கட்டாயமாக எங்களது தாய் நிலத்தை மீளவும் உறுதிப்படுத்த வேண்டும்" - 2012ஆம் ஆண்டு. இடம் அதே மட்டக் களப்பு. தமிழரசுக் கட்சியின் பெருந் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் அவர்கள் பேசியிருக்கின்றார்,

"நாம் தான் தமிழர்களின் அதிகார பூர்வமான பிரதிநிதிகள். எவ்விதமான ஆயுதப் பின்னணிகளும் அற்ற - வன்முறைப் போராட்ட வடிவங்களை என்றைக்கும் நிராகரித்த - நீண்ட ஜனநாயகப் பண்புகளைத் தன்னகத்தே கொண்ட - நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டங்களையே எப்போதும் முன்வைத்தவர்கள் நாம்."

தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து, அதற்காக போராடுமாறு தூண்டிய கட்சியின் வழிவந்த இரா. சம்பந்தன் எவ்வாறு இவ்வாறு சொல்ல முடியும்? இது தூண்டப்பட்டோரின் கேள்வியாக இருக்கிறது.

உண்மையிலேயே ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக பிரதிபலித்துவந்த தமிழரசுக் கட்சியினர், பின்னர் அதன் வழி வந்த மிதவாதத் தலைவர்கள் என்போர் வடகிழக்கில் ஒரு உறுதியான சாத்வீகப் போராட் டத்தை முன்னெடுத்திருக்கின்றனரா? மிதவாதத் தலைவர்கள் சாத்வீகப் பாதையில் அர்ப்பணிப்புடன் இருந் திருப்பின் ஈழத் தமிழ் இளைஞர்கள் மத்தியில் வன்முறை அரசியல் வேர்கொண்டிருக்குமா? அது இந்தளவு தூரம் விரிவு பெற்றிருக்குமா?

சமஸ்டி, தனிநாடு, மாவட்ட சபை என்றெல்லாம் காலத்திற்கு காலம் ஈழத் தமிழர்களுக்கான அரசியல் கோரிக்கைகளை சுருக்கியும், பெருப் பித்தும் கொண்டிருந்த மிதவாதத் தலைமைகள் எக்காலத்திலுமே சாத்வீகப் போராட்டத்தை உச்ச நிலைக்கு கொண்டு செல்ல எத்தனித் திருக்கவில்லை. தாங்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்காக தங்களை முழுமையாக அர்ப்பணிக்க எத்தனித் திருக்கவில்லை. இலங்கையில் தமிழரசுக் கட்சியினர், சாத்வீகப் போராட்டம் குறித்து பேசிக் கொண்டி ருந்த காலத்தில் இந்தியாவையே உலுக்கியெடுக்கும் வகையிலான சாத்வீகப் போராட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஆந்திரத் தலைவரான பொட்டி ஸ்ரீராமுலு ஆந்திர மாநிலக் கோரிக்கையை முன்வைத்து, 1952 இல் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். ஆனால் மத்திய அரசு அவரது கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. நாட்கள் அதிகரித்துச் செல்ல, கூடவே வெகுசனப் போராட்டமும் வளர்ந்து சென்றது. ஆனால் தனது கோரிக்கையில் இம்மியளவும் தடுமாறாத ஸ்ரீராமுலு 58ஆவது நாள் இறந்து போனார். அவரது இறப்பு ஆந்திரா முழுவதும் கிளர்ச்சிப் போராட்டங்களை பரப்பியது. சுதந்திரத்திற்கு பின்னர் இந்தியா கண்ட மிகப்பெரிய வெகுசன எழுச்சியாக இது அமைந்ததாகச் சொல்லப்படுகிறது. பொட்டி ஸ்ரீராமுலு



இறந்து, நான்காம் நாள் இந்திய மத்திய அரசு ஆந்திர மாநிலக் கோரிக்கைக்கு இணங்கியது. இதன் தொடர்ச்சியாகவே 1956ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. தனது கோரிக்கைக்காக தன்னை இழந்து மக்களை வெற்றி பெறச் செய்த பொட்டி ஸ்ரீராமுலு போன்றதொரு தலைவரை ஈழத் தமிழ் மக்கள் பெற்றிருக்கவில்லை. ஆகக் குறைந்தது அத்தகைய முனைப்புள்ள தலைவர்களைக் கூட ஈழத் தமிழ் மக்கள் பெற்றிருக்கவில்லை.

1956ஆம் ஆண்டு காலிமுகத் திடலில் நடைபெற்ற சில மணித்தியால சத்தியாக்கிரகமும், 1956 இல் மேற் கொள்ளப்பட்ட திருமலை யாத்திரையும், 1961ஆம் ஆண்டு மேற்கொள்ளப் பட்ட இரு மாத சத்தியாக்கிரகப் போராட்டமும்தான் தமிழரசுக் கட்சியினர் மேற்கொண்ட சாத்வீகப் போராட்டங்களாகும். இந்த பின்னணி யில்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தது. சமஸ்டிக் கோரிக்கைக் காக ஒரு ஸ்ரீராமுலு போன்று செயலாற்ற முடியாமையின் கையறு நிலையை மறைக்க தனிநாடு என்னும் சுலோகத்தை கையிலெடுத்தனர் கூட்டணியினர்.

மிதவாதிகள் முன்வைத்த கோரிக்கை உண்மையானதென்று அப்பாவி இளைஞர்கள் நம்பினர். இதுதான் ஈழத் தமிழர்களின் பிற்கால அரசியல் வரலாறாக பரிணமித்தது. அன்று தோற்றம் பெற்ற அனைத்து விடுதலை இயங்கங்களும் மிதவாதிக- ளின் தமிழீழ சுலோகத்தையே தாங்கியிருந்தனர். இறுதியில் ஏனைய இயங்கங்களை தடைசெய்து, செல்வாவின் கனவை தன்னால் மட்டுமே பூர்த்தி செய்ய முடியுமென்று நம்பியவர் பிரபாகரன்.

தமிழரசுக் கட்சியினர் சாத்வீகப் போராட்டத்தை உறுதியுடனும் அர்ப் பணிப்புடனும் முன்னெடுத்திருந்தால், 1976இல் தனிநாட்டு கோரிக்கையை தந்தை செல்வா முன்வைக்காது இருந்திருந்தால் - இத் தீவில் தமிழ் இளைஞர்கள் வன்முறை அரசியலை நாட வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்காது.

ஆனால் இன்று வன்முறை அரசி யலை தூண்டியவர்களே, வன்முறை அரசியலுக்கான அடித்தளத்தை உருவாக்கியவர்களே, தங்களால் உசுப்பப்பட்டு அள்ளுண்டு போனவர் களைப் பார்த்து நீங்கள் இரத்தக்கறை படிந்தவர்கள், நீங்கள் எங்களது புண்ணிய தீர்த்தத்தில் மூழ்கி உங்களை சுத்தமாக்கிக் கொள்ள முயல்கின்றீர்கள் - என்று சொல்லும் போது அதனை கேள்விக்குள்ளாக்க வேண்டிய பொறுப்பு இப்பத்தியாளருக்கு ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் இது உண்மைகளை உரத்துச் சொல்ல வேண்டிய காலம்.

இன்னொரு உண்மையையும் உரத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. கொலை அரசியலை தொடக்கி வைத் தவர்களே மிதவாதத் தலைவர்கள்தான். அல்பிரட் துரையப்பாவிற்கு இயற்கை மரணம் வரக்கூடாது என்று சொன்ன வர்கள் இயக்க இளைஞர்கள் அல்ல - இந்த சட்டம் படித்த நாகரீகமான தலைவர்கள்தான். தங்களது அரசிய லுக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த அல்பிரட் துரையப்பாவை அகற்ற வழியின்றி தடுமாறிய மிதவாதிகள், அல்பிரட் துரையப்பாவிற்கு இயற்கை மரணம் வரக் கூடாது என்று மேடைகளில் அறை கூவினர். அன்றைய மேடைகளில் காசி ஆனந்தனும், வண்ணை ஆனந்தனும் தங்களது பெருந்தலைவர்களான செல்வா, அமிர்தலிங்கம் ஆகியோரின் ஆசியுடன், அல்பிரட் துரையப்பாவை எவராவது கொல்லுங்கள் என்று மறைமுகமாகச் சொல்லிக் கொண்டிருந்தனர். ஒருவருக்கு இயற்கை மரணம் வரக் கூடாது எனின் அதன் பொருள் என்ன? பின்னர் இதுவே புலிகளின் முதலாவது தாக்குதலாக பதிவு செய்யப்பட்டது.

அழித்தொழிப்பு அரசியல் ஆரம்பமாகியது. தூண்டியவர்கள் ஒதுங்கிக் கொள்ள, தூண்டப் பட்டவர்கள் தாம் எதற்காக வந்தோம், ஏன் தங்களுக்குள் அடிபடுகின்றோம் என்று தெரியாமலேயே அழிந்து போனார்கள். மக்கள் எல்லாவற்றினதும் பார்வையாளர்களானார்கள். இரா. சம்பந்தன் தனது பேருரையில் குறிப்பிட்டிருப்பது போன்று, "அடைய முடியாத அசாத்தியமான அந்த ஒன்றுக்காக" தூண்டப்பட்டவர்கள் எல்லாம் வீழ்ந்து போக, மீண்டும் தூண்டியவர்கள் களத்தில் நின்று - தங்களை சரியானவர்களாக காண்பிக்க முயல்கின்றனர். இது எந்தவகையில் நியாயம் - இவர்களால் தூண்டப்பட்டு சந்தர்ப்ப சூழ்நிலைகளால் தவறுகளுக் கும் ஆட்பட்டு, பின்னர் ஜனநாயக வழிக்கு வந்தவர்களின் கேள்வியாக இருக்கின்றது.

ஈழத் தமிழர்களுக்கானதாகச் சொல்லப்படும் கடந்த அறுபது வருட கால அரசியலில், பங்கு கொண்டவர் கள் எவருமே தங்களை அப்பழுக்கில் லாதவர்களாகக் காட்டிக் கொள்ள முடியாது. இதில் ஏற்ற இறக்கங்கள் இருக்கலாம் ஆனால் எவருமே விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. இந்த புரிதல் இருக்கும் போது மட்டும்தான் மக்கள் நலனை முன்னிறுத்தி மட்டும் சிந்திக்கக் கூடிய தொரு கூட்டு அரசியல் சாத்தியமாகும்.

**- யதீந்திரா கட்டுரையிலிருந்து.**

---



**தோழர் பத்மநாபாவின் 22ஆவது நினைவு தினம் இன்று. 19-06-1990 அன்று சென்னையில் தோழர் நாபாவும் அவருடன் பதின்மூன்று தோழர்களும் புலிகளால் கொலை செய்யப்பட்ட பின்பு, தோழர் வீ.ஏ.கந்தசாமி எழுதிய அஞ்சலிக் கட்டுரையில் ஒரு பகுதி இது:**

# இணையற்ற த...

**தோ**ழர் பத்மநாபா ஈழமக்களின் பெருமதிப்பிற்குரிய தலைவராக மட்டுமல்லாமல், ஈழவிடுதலை இயக்கங்களின் தலைசிறந்த தலைவ ராகவும் விளங்கினார். ஈழவிடுதலை இயக்கங்களை ஒரே அணியில் ஒன்றுபடுத்த பலமுறை முயற்சி செய்தார். அவரின் இடையறா முயற்சியின் பயனாக ஏற்பட்ட ஐக்கியம்தான் திம்பு பேச்சுவார்த்தையின் போது ஈழவிடுதலை இயக்கங்கள் அத்தனையையும் - தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட - ஒரே குரலில் பேச வைத்தது. தோழர் நாபா ஈழத்து மண்ணில் கால் பதிக்காத இடமே இல்லை எனலாம். தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதியாக இருந்தாலும் சரி, கிராமப்புற கூலிவிவசாயிகள் வாழும் பகுதியாக இருந்தாலும் சரி, கடற் தொழிலாளர்கள் வாழும் பகுதியாக இருந்தாலும் சரி வடக்கு கிழக்கின் மூலை முடுக்குகள் எல்லாம் அவர் தன் கால் தடங்களைப் பதித்திருந்தார்.

தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை மூலம் தமது அரசியல் வாழ்வை ஆரம்பித்த தோழர் நாபா தமிழின வெறியராக ஒருபோதும் இருந்ததில்லை. தென்னிலங்கையில் முற்போக்காளர் மத்தியிலும்

அவர்
அரசைக்
முதன்
பேருக்கு
உருவா
தோழர்
அவரது
செயல்
தோழர்

ஆயுதப்
தொடர்ந்
செல்ல
வாழ்வி
உருவா

# மாவோயிஸ்டுகளைப் புரிந்துகொள்வது எப்படி?

- மருதன் -



"எங்களுக்குத் தனி தேசம் தேவையில்லை. அது ஏற்கெனவே எங்களிடம்தான் இருக்கிறது!" என்று முழங்கும் மாவோயிஸ்டுகளை, தேசத்தின் முதன்மையான அச்சுறுத்தல் என்று அழைக்கிறது இந்திய அரசாங்கம். இந்திய அரசாங்கத்திடம் இருந்து இந்தியர்களை விடுவிப்பதே எங்கள் இலட்சியம் என்கிறார்கள் மாவோயிஸ்டுகள். இந்த இரு அமைப்புகளுக்கும் இடையில் மேற்கு வங்கத்தில் நக்சல்பாரி என்னும் கிராமத்தில் அறுபதுகளில் தொடங்கிய போர் இன்று வரை தொடர்ந்துகொண்டிருக்கிறது. சமீபத்தில் வெளியாகியிருக்கும் அது தொடர்பான சில புத்தகங்கள்.

## ரெட் சன் (எதிர் வெளியீடு, விலை ரூ. 250)

இந்தியாவில் நக்ஸலிஸம் பரவியிருக்கும் மத்திய இந்தியாவுக்கு நேரில் சென்று, அரசாங்க அதிகாரிகள், மாவோயிஸ்டுகள், மக்கள், காவல்துறையினர், பழங்குடிகள், பத்திரிகையாளர்கள், சல்வா ஜூடும் நபர்கள் என்று பலருடன் விரிவாக உரையாடி இந்நூலை உருவாக்கியிருக்கிறார் சுதீப் சக்ரவர்த்தி. "இந்தியாவில் மாவோயிஸம் என்னும் தலைப்பில் வரலாறு எழுதும் எண்ணம் எனக்கில்லை. நான் அதற்குத் தகுதியானவன் அல்ல. இயக்கத்தின் வரலாறு, அதைச் சார்ந்தவர்களால் சிறப்பாக எழுதப்பட்டுள்ளன. இனியும், எழுதப்படும்.

மாவோயிஸ்டுகள் ஏன் தோன்றுகிறார்கள்? அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? உள்நாட்டுப் பாதுகாப்புக்கு மிகப்பெரும் அச்சுறுத்தல், மாவோயிஸம் அல்ல. ஏழைமை, செயலற்ற அரசாங்கம், அநீதி, ஊழல் ஆகியவைதான். இந்தியாவில் மூன்றில் ஒரு பங்கு பிரதேசங்களில் மாவோயிஸ்டுகள் பரவியிருப்பது நம் தோல்விகளையே பிரதிபலிக்கிறது.

சரியாக நடத்தப்படாதவர்கள், வாழ்வாதாரம் மறுக்கப்பட்டவர்கள், அநீதி இழைக்கப்பட்டவர்கள் ஆகியோரே மாவோயிஸ்ட் இயக்கத்தில் இடம் பெற்றிருக்கிறார்கள். பலாத்காரத்தைப் பயன்படுத்தி இந்தச் சூழலை மாற்றலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள்."

மாவோயிஸ்டுகள் தீவிரவாதிகளா?

"இந்தப் புத்தகத்தில், இடது சாரி போராளிகளை, எந்தவொரு இடத்திலும் "தொந்தரவு" என்றோ "சாபம்" என்றோ "பரவும் கிருமிகள்" என்றோ குறிப்பிட மாட்டேன். அவ்வாறு குறிப்பிட்டாக வேண்டும் என்றால், பெரும்பாலான இந்திய அரசாங்க அமைப்புகளையும் பல அதிகாரிகளையும் இதே பெயர்களில் அழைக்க வேண்டியிருக்கும்."

இந்தியாவில் நக்சலிஸம் பரவியிருக்கும் பகுதிகள் பிற்படுத்தப்பட்ட, வளர்ச்சி குன்றிய பகுதிகளாக நீடிப்பது நிச்சயம் தற்செயலானதல்ல. இதனை இந்திய அரசாங்கமும் ஒப்புக்கொள்கிறது. மாவோயிஸத்தை முற்றிலுமாக வெறுத்து ஒதுக்கும் காவல்துறை அதிகாரிகள்கூட சில விஷயங்களை வெளிப்படையாகவே ஒப்புக்கொள்கிறார்கள். ஆம், அவர்களிடம் மக்கள் பலம் உள்ளது. ஏதுமற்ற ஏழைகள், குடியானவர்கள், விவசாயிகள், பழங்குடிகள், இளைஞர்கள், படித்தவர்கள் என்று பலரும் நக்ஸலைட்டுகளை ஆதரிக்கிறார்கள். எனவே, "அவர்களை வெற்றிகொள்வது சுலபமான காரியமல்ல." என்கிறார் சுதீப்.



சுதீப் சந்திக்கும் ஓர் அதிகாரியின் கருத்து இது. "நக்சலிஸத்தை மிகப் பெரிய அச்சுறுத்தலாகக் காட்டுவதை இந்தியா விரும்பவில்லை. ஆமாம் அது ஒரு பிரச்சினைதான் என்று மேம்போக்காகவே குறிப்பிடுகிறார்கள். நக்சலிஸத்தைப் பற்றி அதிகம் விவாதிக்க ஆரம்பித்தால், அதிகம் கவலைப்பட ஆரம்பித்தால், பிரச்சினையின் பின்னணியை ஆராய வேண்டியிருக்கும். ஒடிசா, மேற்கு வங்கம், பிகார், ஆந்திரா, ஜார்க்கண்ட் என்று இந்தியாவின் வளர்ச்சியற்ற பகுதிகள் குறித்து சிந்திக்க வேண்டியிருக்கும். அதை இந்தியா விரும்பாது. அதே சமயம், காஷ்மீர் குறித்தும் பாகிஸ்தான் குறித்தும் இந்தியா கவனம் செலுத்தும். காஷ்மீர் தீவிரவாதம் குறித்து உரத்து விவாதங்கள் நடத்தும்... வெளி எதிரிகள் இருந்தால் பரவாயில்லை. உள்ளதிரிகளை அங்கீகரிக்கக்கூடாது."


வரலாறு, அனுபவங்கள், பேட்டிகள், விவாதங்கள், அலசல்கள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு நேர்த்தியான பார்வையை, தகுந்த சமூக பின்புலத்தில் பொருத்தி அளிக்கிறது ரெட் சன்.

## வனம் எழுதும் வரலாறு (விடியல், விலை ரூ. 130)

சுதீப்பின் நூல், மாவோயிஸ்டுகளை ஒரு குழுவாக அறிமுகம் செய்துவைக்கிறது என்றால், சத்நாம் எழுதிய "வனம் எழுதும் வரலாறு", அவர்களைத் தனித்தனி அலகுகளாக, இரத்தமும் சதையும் கொண்ட மனிதர்களாகக் கண்முன் நிறுத்துகிறது. தெற்கு சத்தீஸ்கரில் உள்ள பஸ்தாரில் அடர்ந்த கானகத்தில், யார் மாவோயிஸ்ட், யார் பழங்குடி என்று பிரித்தெடுக்க முடியாதபடி நெருக்கமாக இருவரும் பின்னிப் பிணைந்திருப்பதை சத்நாம் நேரடியாகக் காண்கிறார். அவர்களுடைய வாழ்க்கை முறை அவரைத் திகைக்க வைக்கிறது. உறக்கம், உணவு இரண்டும் போதுமான அளவுக்கு மாவோயிஸ்டுகளுக்குக் கிடைப்பதில்லை. அதிகாலையில் உடற்பயிற்சி தொடங்கிவிடும். கிட்டத்தட்ட அரிசிச் சோறு தவிர வேறு எதுவும் கிடைக்காது. ஒரு கிலோ பூசணிச் சாறு, 4 லீற்றர் நீர், அரிசி மூன்றையும் ஒன்றாகப் போட்டு வேகவைத்துவிட்டால் வடிக்க வேண்டிய அவசியம் கூட இல்லாமல் அப்படியே சாப்பிட்டுவிடலாம். பால் இல்லாத, இனிப்பு இல்லாத தேநீர் தயாரிக்கப்படும். எலுமிச்சை கிடைத்தால் கொண்டாட்டம். பலர் ஒரு தட்டு மட்டுமே வைத்திருப்பார்கள். தேநீர் பருகி முடித்த பிறகு, கழுவி அதிலேயே சாப்பிட்டு விடுவார்கள். தனியாக டம்ளர் சுமந்து செல்வது தேவையற்றது என்பது ஒரு காரணம். முடிந்தவரை சுமையைக் குறைத்துக்கொண்டே இருக்கவேண்டும் என்பது இரண்டாவது காரணம்.

காந்தி, நேரு, மவுண்ட்பேட்டன், ஆகஸ்ட் 1947 ஆகிய எதையும் அறிந்து வைத்திராத பழங்குடிகளின் நம்பிக்கையைத்தான் இவர்கள் வென்றெடுக்க வேண்டும். பழங்குடிகள் பயன்படுத்தும் கோண்டு மொழியைக் கற்பதில் மாவோயிஸ்டுகள் ஆர்வம் காட்டுகிறார்கள். அவர்களுடைய மொழியில் அவர்களுடன் உரையாட முடிகிறபோது, உணர்வு ரீதியாக அவர்களுடன் ஒன்றிணைய முடிகிறது என்கிறார்கள். ட்ரான்சிஸ்டர் அவசியம். செய்திகள், குறிப்பாக பிபிசி கேட்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள்.

புத்தகத்தின் முதல் பாதி மாவோயிஸ்டுகளையும் இரண்டாவது பாதி பழங்குடிகளையும் அறிமுகம் செய்கிறது. பழங்குடிகளின் வாழ்க்கை எளிமையாகவும் ஆபத்து நிறைந்ததாகவும் இருக்கிறது. அவர்களுடைய பாடல்களில் தனிப்பட்ட ஒருவர் பாடும் பாடல் என்று எதுவும் இல்லை, எல்லாமே குழுவாகச் சேர்ந்து இசைக்கப்படும் பாடல்கள்தாம். அதிகபட்சம் 50 ஆண்டுகளுக்கு மேல் பழங்குடிகளால் வாழ முடியாது. மலேரியாவே அதிகம் கொல்கிறது. இவர்களைச் சந்திக்கப் போகும்போது ஒவ்வொருமுறையும் பை நிறைய மாத்திரைகளைக் கொண்டு செல்கிறார்கள் மாவோயிஸ்டுகள்.



எங்கோ இருக்கும் அரசாங்கத்தைக் காட்டிலும் ஒரு கையில் துப்பாக்கியும் இன்னொருகையில் மாத்திரைகளையும் கொண்டு வரும் மாவோயிஸ்டுகளோடு இவர்களால் சுலபத்தில் ஒன்றிவிட முடிகிறது.

## நக்சலைட் அஜிதாவின் நினைவுக்குறிப்புகள் (எதிர் வெளியீடு, விலை ரூ. 275)

அஜிதாவின் நாள்குறிப்புகள், மாவோயிஸ்ட் இயக்கத்தை இன்னமும் அருகில் சென்று தரிசிக்க உதவுகிறது. "என் தந்தை குத்திகோட் நாராயணன், தாய் மந்தாகிணி இருவருமே புரட்சியாளர்கள். அவர்கள் வழியில் நானும் நக்ஸல் இயக்கத்துக்கு வந்துவிட்டேன்." என்கிறார் அஜிதா. "கல்லூரி இரண்டாவது ஆண்டு படிக்கும்போதே அது பெரும் இடைஞ்சல் என்று தெரிந்துவிட்டது. விட்டு விலகிவிட்டேன். ஒரு புதிய சாகச வாழ்க்கை தொடங்கியது." அஜிதாவின் வாழ்வில் 1968 மறக்கமுடியாத வருடம். கேரளாவில் உள்ள புல்பள்ளி என்னும் இடத்தில் இருந்த விவசாயிகளை அவர்களுடைய வாழ்விடத்தில் இருந்து வெளியேற்றுவதற்காக அரசு முயற்சி செய்து கொண்டிருந்த சமயம் அது.



அகலமாட்டோம் என்று 7000 விவசாயிகள் போராட்டத்தில் குதித்தனர். அவர்களுடைய போராட்டத்தை முறியடிப்பதற்காகக் காவல் துறையினர் இறக்கிவிடப்பட்டனர். விவசாயிகளுக்கு ஆதரவாகக் குதித்த மாவோயிஸ்டுகள், காவல்துறையினரை வர்க்க எதிரிகளாக பாவித்து ஆயுதப் போராட்டத்தில் இறங்கினர். "பல நாள் பயணத்துக்குப் பிறகு புல்பள்ளி காவல்நிலையத்தை நெருங்கினோம். முகாமில் இருந்த வயர்லஸ் ஒபரேட்டர், சப் இன்ஸ்பெக்டர் இருவரையும் கொன்றொழித்தோம். இரண்டு நிலச்சுவான்தார்களின் வீட்டைக் கைப்பற்றி, குவிக்கப்பட்டிருந்த தானியங்களை பழங்குடிகளுக்கு விநியோகித்தோம்."

அதற்குள் காவல்துறையிடம் சிக்கிவிட்டதால் அடுத்த ஒன்பது ஆண்டுகளைச் சிறையில் கழிக்கவேண்டியிருந்தது. சிறையில் இருந்து அவர் வெளியில் வந்தபோது இயக்கம் சுருங்கிவிட்டதை உணர்ந்து கொண்டார். இனி அதில் இணைய முடியாது என்பதும் தெரிந்தது. சாகசங்கள் முடிவுக்கு வந்திருந்தன. அவர் முன்பு மிகவும் வெறுத்த இயல்பு வாழ்க்கை மட்டுமே ஒரு மார்க்கம். வேறு வழியில்லை என்பதால் திருமணம், குழந்தை என்று இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டார் அஜிதா.

---

# தலைவர்

அவர் வேலை செய்து வந்ததால், இலங்கை அரசைக் கவிழ்க்க சதி செய்ததாக தோழர் நாபாவை முதன்மைப்படுத்தி சிங்களத் தோழர்களும் உட்பட 23 பேருக்கு எதிராக இலங்கை அரசு சதி வழக்கொன்றை உருவாக்கியது. அந்த வழக்கில் இருந்து சாகும்வரை தோழர் நாபா விடுவிக்கப்படவே இல்லை. இதுவும்கூட அவரது விரிவடைந்த பார்வைக்கும் புரட்சிகர செயல்பாட்டுக்கும் எடுத்துக்காட்டாகும்.

தோழர் நாபாவின் ஆரம்பகால அரசியல் அனுபவங்கள் பேரினவாத அரசின் சிறை ஒடுக்குமுறைக்கெதிரான இன உணர்வு சார்ந்ததாகவே இருந்தது. இலங்கை ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, வீட்டாரின் நிர்ப்பந்தத்தால் இங்கிலாந்து செல்ல வேண்டி ஏற்பட்டது. இது இவரின் அரசியல் வாழ்வில் ஆழ அகலப் பார்வைகளை உருவாக்கியதெனலாம்.

அன்று லண்டனில் இருந்த ஈழத்தவர்களுடன் இணைந்து ஈழப்புரட்சி அமைப்பில் செயல்பட்டார். பாலஸ்தீன விடுதலை இயக்கம், ஆபிரிக்க விடுதலை இயக்கங்கள், இன்னும் பல்வேறு விடுதலை இயக்கங்களுடனான தொடர்புகள் அவருடைய ஈழவிடுதலைப் போராட்ட உணர்விற்கு புதிய அணுகுமுறைகளைச் சேர்த்தது. இதன் காரணமாக, அவர் மற்றும் சில தோழர்களுடன் சென்று லெபனானில் ஆயுதப் பயிற்சியையும் பெற்றார். இதன்பின் 1984 ஜூனில் நடைபெற்ற ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முதலாவது காங்கிரசில் நாபா செயலாளர் நாயகமாகத் தெரிவு செய்யப்பட்டார். தன்னலங்கருதாத அவருடைய செயலாற்றும் திறன் இயக்கத்தின் உள்ளேயும் வெளியேயும் இருந்த அனைவராலும் மதிக்கப்பட்டது. அவர் தோழர்களுக்கும் மக்களுக்கும் தெம்பூட்டுவதில் எடுத்துக்காட்டாக விளங்கினார்.

போராட்ட காலங்களிலும் சமாதான காலங்களிலும் மக்களுக்கு பேரிழப்புகள் ஏற்படா வகையில் வழி-முறைகளை வகுத்தளிப்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்தார். நம்முடன் வாழும் முஸ்லிம் சகோதரர்களின் அபிலாஷைகளைப் புரிந்துகொண்டு அவர்களுடனும் இணைந்து செல்வதில்தான் வெற்றி தங்கியுள்ளது என்பது அவரது அசைக்க முடியாத கருத்தாக இருந்து வந்தது.

நலிவுற்ற மக்கள்பால் கரிசனையும், கஷ்டப்படும் தொழிலாளர் குடும்பங்களையும், மரணித்த போராளிகளின் குடும்பங்களையும் சென்று சந்தித்து, முடிந்தவரை அவர்கள் கஷ்டங்களைத் தீர்த்து வைப்பதற்கும், அவர்கள் வாழ்வைச் செப்பனிடும் முயற்சிகளையும் எப்போதும் முதன்மையாய் கருதி செயலாற்றினார். தோழர் பத்மநாபா மக்களை நேசித்த மகத்தான மனிதர்.



# சைக்கிள்

> **மணியத்தின் இளமைப் பருவம் சைக்கிளுக்கு முன் சைக்கிளுக்கு பின் என இரு வேறுபட்ட பரிணாமங்களை கொண்டது என அவனின் வரலாற்றை அறிந்தவர்கள் குறிப்பிடுவர்.**

**பண்ணாகம்** வடக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு சித்தி அடைந்ததும் ஐயாவின் ஆசையை பூர்த்தி செய்ய மணியம் இங்கிலீசிப் பள்ளிக்கூடம் என்று அழைக்கப்பட்ட சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் சேர்ந்து கொண்டான். அங்கே இப்போது இங்கிலீசில் பாடம் நடத்துவதில்லை என்ற தாற்பரியங்கள் ஐயாவுக்கு தெரியாது. ஊரிலே எல்லோரும் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு போக மணியம் இன்னும் நாலைந்து பேர் புடை சூழ விக்டோரியாக் கல்லூரிக்கு இரண்டு மைல் நடந்து போய்வந்தான்.

சைக்கிளில் போகும் எட்டாம் வகுப்பு சீனியர்கள் கேட்டாலும் அவர்கள் கரியர்களிலோ பார்களிலோ ஓசிச் சவாரி செய்ய ஒருபோதும் ஒத்துக் கொண்டதில்லை. ஆனால் அவர்களை பார்க்கும் போதெல்லாம் எப்போது எட்டாம் வகுப்பை எட்டுவோம் என்ற ஏக்கம் மட்டும் எழத் தவறுவதில்லை.

ஒரே ஒருமுறை மட்டும் சீனியர் ஒருவரின் சைக்கிள் பாரில் இருந்து யாழ்ப்பாண நகருக்கு பயணித்தது மணியத்தின் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1962 மார்ச் மாதம் ஒரு நாள் நகரில் இலவசமாக இளநீரும் பிஸ்கட்டும் கொடுக்கிறார்கள் என்று அழைத்ததால் ஆர்வமாக அவர்களின் சைக்கிளில் தொற்றி கொண்டான். அங்கே போனால் எல்லோரும் வெள்ளை வேட்டி வெள்ளை சட்டைகளுடன் குழுமி இருந்தனர். அவர்களுக்கு சாரத்தோடு நிற்கும் சில எளிய மக்கள் இளநீரை சீவிச் சீவிக் கொடுக்கிறார்கள்.

மணியமும் அவனை கூட்டி வந்த சீனியர்களும் தயங்கித் தயங்கி இளநீர் குலைகளின் கிட்டே போய் அதை ஆவென்று பார்த்துக்கொண்டே நின்றார்கள். இளநீர் வழங்கியவர்களோ இவர்களை ஒரு கணக்கில் எடுக்காமல் வெள்ளை வேட்டிகளுக்கு சீவிச் சீவிக் கொடுத்து கொண்டிருந்தார்கள். பொறுத்துப் பார்த்து ஏலாமல் 'அண்ணை எங்களையும் கவனியுங்கோ' என்று ஒரு சீனியர் கொஞ்சம் உரத்தே கேட்டார்.


'இது சத்தியாகிரகம் இருக்கிறவைக்கு. உங்களுக்கில்லை. ஓடுங்கோடா' என்று இளனிக்காரர் கலைத்தார்.

அவமானம் தாங்காமல் மணியம் வெளியே வந்தான். இலவசமாக இளனியும் பிஸ்கட்டும் வேணுமெண்டால் வெள்ளை வேட்டியோடு சத்தியாகிரகம் இருக்க வேணும் என்ற விஷயத்தை முதலே அறிந்திராத சீனியர்களை மனதுக்குள் திட்டிக் கொண்டான். சத்தியாகிரகம் எண்டால் என்ன எதற்காக இருக்கிறார்கள் என்று இவர்களுக்கும் தெரியாது. இளனி வெட்டிக்கொடுக்கும் அந்த எளிய மக்களுக்கும் தெரியாது. தமிழர்கள் கொண்டாடும் பலவகை திருவிழாக்களில் இதுவும் ஒன்றென நினைத்துக் கொண்டனர்.

எழாம் வகுப்பு முடிய மார்கழி விடுமுறையில் எட்டாம் வகுப்புக்கு சைக்கிள் வேணும் என்ற மந்திரத்தை மணியம் தினமும் தந்தைக்கு ஓதத் துவங்கினான். அவரும் முதல்ல சீற்றிலை இருந்து ஓடப்பழகு என்று பதிலுக்கு வேதம் ஓதினார். உயர்த்தி வைத்த சீற்றில் மணியத்தால் எப்படி இருந்து ஓட முடியும். பாரின் கீழால் காலை நுழைத்து பிறிவிலில் ஓடியே அவனுக்கு பழக்கம். சீற்றை பதிச்சு தந்தால் நான் ஓடிக் காட்டிறன் என்று சவால் விட்டான். அம்மாவும் அவனுக்கு ஆதரவு தர சீட் பதிக்கப்பட்டது. ஐயா பாவிக்காத நேரமெல்லாம் சைக்கிள் இரவு பகலென்றில்லாமல் வெற்றிமட முருகனைச் சுற்றிச் சுற்றி வந்தது. இறுதியில் முருகன் மனமிரங்கி ஐயாவின் வாயால் இனி சைக்கிள் உனக்குத் தான் என வரம் அருளினார்.

ஏற்கனவே பழைய இரும்புக்கு போடும் பக்குவத்தில் இருந்த சைக்கிள் இடைவிடாத பயிற்சியால் மேலும் தளர்ந்திருந்தது. இதை புதிசு போல் இளமை ஊட்டும் நுட்பம் தெரிந்தவர்கள் பண்டத்தரிப்பு அம்பாள் ஸ்டோருக்கு முன்னால் உள்ள சைக்கிள் கடைகாரர்கள் என்று ஊரே சொன்னது. பள்ளி துவங்க இரண்டு நாள் இருக்க ஒரு சனிக்கிழமை காலை முழு சேர்விசுக்காக சைக்கிள் மெக்கானிக்கிடம் கையளிக்கப்பட்டது. மணியம் பக்கத்திலிருந்து ஒவ்வொரு வேலையையும் உன்னிப்பாக அவதானித்தான்.

ஒரு பத்து நிமிடத்துள் சைக்கிள்



முழுவதும் அக்கு வேறு ஆணி வேறாகப் பிரிக்கப்பட்டு தரையில் கிடத்தப்பட்டது. பெருசு ஒவ்வொரு பாட்சுகளாக ஆராயத் துவங்கினார். பலத்த ஆய்வின் முடிவில் பல பாட்சுக்கள் மாற்றப்பட வேண்டுமென தீர்ப்பை சொன்னார். இங்கிலிசு பாட்சுகளால் மாற்றீடு செய்வது அதிக செலவென்றும் இந்திய பாட்சுகள் ஒரு வருடத்துக்கு மேல் தாங்காதென்றும் ஜப்பானிய பாட்சுகளே நல்ல தெரிவு என்றும் வழங்கப்பட்ட ஆலோசனையை மணியம் ஏற்றுக் கொண்டான்.

மூட்டுகள் எல்லாம் புதிய வெள்ளிக் குண்டுகளால் அடுக்கப்பட்டு கிறீசால் நிரப்பப்பட்டு இயக்கங்கள் சுளுவாக்கப்பட்டன. பிரேக் கட்டைகள் மாற்றப்பட்டு குதிக்கால் தேயத்தேய தடுப்புகள் போடும் தேவை தவிர்க்கப்பட்டது. துருக்கள் எண்ணெய்களால் அகறறப்பட்டு வண்ணமும் கொடுக்கப்பட்டு மின்னத் துவங்கின. சில்லின் வளையம் நுட்பமான கருவியில் சுழற்றப்பட்டு கறள் பிடித்த வளைந்த கம்பிகள் அகற்றப்பட்டு புதிய கம்பிகள் போடப்பட்டு இறுக்கப்பட்டு நேராக்கப்பட்டன. தூங்கித் தூங்கி நிலத்தை முத்தமிட முனைந்த செயின் இறுக்கப்பட்டு இளமை ஊட்டப்பட்டது. நிர்வாணமாய் கிடந்த பெடல் கம்பிகள் காண்டில்கள் புதிய இறப்பர் ஆடைகளால் அழகு செய்யபபட்டது. எல்லாச் சடங்குகளும் முடிய மூன்று மணித்துளிகள் போனது.

இறுதியில் மலிவு விலையில் சீட் கவர் உட்பட்ட சில அலங்கார சமாச்சாரங்களை ஏற்றப்பட சைக்கிள் புது மணப்பெண் போல் பூத்துக் குலுங்கியது. ஓட்டிப் பார்க்க வீதியில் இறங்கியபோது சைக்கிள் இதுவரை எழுப்பிய எல்லா ஒலிகளையும் மெக்கானிக் அடக்கி ஒடுக்கி விட்டது தெளிவாய் தெரிந்தது. எதிர்பார்த்ததைவிட அதிக செலவென்றாலும் மகிழ்ச்சியோடு கொடுத்துவிட்டு ஒரு இளவரசன் குதிரையிலே ஊர்கோலம் போகும் உணர்வோடு தெருவில் இறங்கினான் மணியம்.

இதற்கு பின்னர் மணியத்தின் எந்த முக்கியமான வரலாற்று நிகழ்வும் இந்த சைக்கிள் இல்லாமல் எழுதப்பட்டது கிடையாது. இந்தச் சைக்கிளின் வரவோடு அவனுடைய அடிப்படை அமைப்பு விதிகளில் கூட சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டது. சைக்கிளை அலங்கரிப்பதற்கும் திருத்துவதற்கும் மட்டுமே இனிமேல் சல்லி முட்டி உடைக்கப்பட வேண்டும் என்பது அதில் பிரதானமானது. இயலுமான வரை பாரில் ஒருவரையும் ஏற்றக்கூடாது என்பது இன்னொன்று. பாரின் பலத்திலேயே சைக்கிளின் ஆயுள் தங்கியுள்ளதாக சைக்கிள் மெக்கானிக் அருளிய ஆலோசனையின் அடிப்படையில் இந்த சட்ட இணைப்பு உருவாக்கப்பட்டது. இதில் சைக்கிளின் பாரம்பரிய உரித்துடைய ஐயாவுக்கு கூட விதி விலக்கு அளிக்கப்படவில்லை.

இந்தச் சைக்கிள் தனது ஆளுமையை திடீரென பனை அளவுக்கு உயர்த்திவிட்டதாக அவன் உணரத் தலைப்பட்டான். சைக்கிளின் எடுப்புக்கு இழுக்கு ஏற்படாத வகையில் மணியம் தனது உடை சிகை அலங்காரத்தையும் மெருகேற்றினான். அடிக்கடி செல்லமாக புதிதாக பொருத்திய மணியை கிலுக்கித்து தனது சைக்கிளின் வரவை தெருவெங்கும் பறை தட்டினான். அந்த மணி ஓசை அவனுக்கு ஒரு அற்புதமான இசை தரக்கூடிய கிளர்ச்சியை ஊட்டியது. மணியத்தின் இளமைப் பருவம் சைக்கிளுக்கு முன் சைக்கிளுக்கு பின் என இரு வேறுபட்ட பரிணாமங்களை கொண்டது என அவனின் வரலாற்றை அறிந்தவர்கள் குறிப்பிடுவர்.

1974 இல் தமிழாராய்ச்சி மாநாடு பத்து தினங்கள் யாழ் நகரில் நடந்தது. ஒவ்வொரு நாளும் மாநாட்டுக் கொடி காண்டில் பாரில் பறக்க நண்பரகளுடன் நகர்வலம் சென்றான் மணியம். நகரே விழாக்கோலம் பூண்டிருந்தது. ஒவ்வொரு வீதிக்குள்ளும் நுழைந்து அலங்காரத்தை மதிப்பீடு செய்வதும் புதிதாக முளைத்த சிலைகள் யாருடையது என்ற ஆய்வதும் இரவு கலை நிகழ்சிகளை பார்ப்பதுவுமென உற்சாகமாக போனது.

ஆராய்ச்சி மாநாடு என்பது நீங்கள் பார்த்த கேளிக்கையல்ல அது வீரசிங்கம் மண்டபத்தின் உள்ளே பகலில் நடக்கிறது என விஷயம் தெரிந்த பெரிசு ஒன்று உசுப்பி விட்டது. உலகெங்குமிருந்து வந்த தமிழறிஞர் பேச்சுகளை கேட்க அடுத்த நாள் காலையிலேயே மண்டபத்துக்கு சென்றார்கள். உள்ளே விடவில்லை. முன் அனுமதி பெற்றிருக்க வேண்டுமாம். நூற்றுக் கணக்கானவர்கள் கொள்ளக்கூடிய மண்டபத்தில் ஒரு இருபது பேரே இருப்பது கண்ணாடிக்கூடாக தெரிந்தது. கெஞ்சிக் கூத்தாடியும் பயனில்லை. திட்டிக்கொண்டே. வெளியேறினர்.

பத்தாம் நாள் மாலை எல்லோரும் கண்டு களிக்க தமிழ் அறிஞர்கள் வெளியே கூடுவதைக் காண அன்று மதியமே மணியமும் நண்பர்களும் வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் உள்ள புல்வெளியில் இடம் பிடித்துவிட்டார்கள். மண்டபத்திற்கு கிட்டவே சைக்கிள்களையும் விட இடம் கிடைத்ததில் மணியத்துக்கு மகா திருப்பதி. வெற்றிக்களிப்போடு காத்திருக்க இழுத்தடித்து இழுத்தடித்து ஒருவாறு ஏழு மணிக்கு அப்துல் ரகுமானின் பேச்சோடு துவங்கியது விழா.

அவர் பேசத் துவங்கி சில நிமிடத்துள் ஆயிரக்கணக்கில் நிறைந்திருந்த சனக்குவியலின் பின்னால் சிறு சலசலப்பு கேட்டது. அது கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்க தமிழின் பெயரால் அமைதியாக இருக்கும்படி ரகுமான் கேட்டுக்கொண்டார். ஆனால் அது அடங்கவில்லை. என்ன நடக்கிறதென்று முன்னால் இருப்பவர்களுக்கு புரியவில்லை. திடீரென சில வேட்டுச் சத்தங்கள் கேட்டது. பொலிஸ சுடுவதாக கூறிக்கொண்டு எல்லோரும் அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டு முன்னால் ஓடி வந்தார்கள்

மணியம் சையிக்கிள் விட்ட இடத்தை நோக்கி ஓட எத்தனித்தான். ஆனால் அந்தப் பக்கத்தில் ஒரே புகை மண்டலமாக இருந்தது. எல்லோரும் அவனையும் தள்ளிக்கொண்டு மண்டபத்துக்கு பின்னால் ஓட்டினார்கள். மதில் ஏறிக்குதித்து ரீகல் தியேட்டருக்கு பின்னால் உள்ள சகதியுள் விழுந்து எழும்பினர். குழப்ப பகுதியில் இருந்து தப்பிய மணியம் வெலிங்டன் சந்தியில் சில நண்பர்களைக் கண்டான். எப்பாடு பட்டாவது சைக்கிளை எடுக்க வேண்டும் என அந்தரப்பட்டான். இப்போது அங்கே போவது உயிருக்கே ஆபத்தானது என நண்பர்கள் அவனை இழுத்துப் பிடித்தனர். மறுநாள் பொழுது விடிய முந்தி நண்பர்களை வீட்டிலிருந்து எழுப்பி முதல் பஸ்ஸில் நகருக்கு போனான்.

முத்தவெளி ஒரு யுத்த களம் போல விரிந்து கிடந்தது. காக்கிச் சட்டைகள மக்களை போகவிடாமல் தடுத்து நிறுத்தின. அறுந்த பிய்ந்த செருப்புக்களால், புல்வெளி நிறைந்திருந்தது. 'அனுமதி பெற்று சைக்கிள் விட்ட இடத்துக்கு போனார்கள். பிணக் குவியல்கள் போல் சையிக்கிள்கள் உடைந்தும் சிதைந்தும் குவிந்து கிடந்தன. நெஞ்சு படபடக்க மணியம் தனது சயிக்கிளை தேடினான். சிறு சிறு சேதங்களுடன் எல்லோருடைய சயிக்கிள்களும் கிடைத்துவிட்டன. மணியத்தின் சைக்கிளை மட்டும் காணவில்லை.

நீண்ட தேடுதலின் பின் சீட் கவரை வைத்து மணியத்தின் சைக்கிளை நண்பன் ஒருவன் அடையாளம் கண்டான். ஒருவரையும் ஏற்றாது கவனமாகப் பாதுகாத்த பார் வளைந்து உடைந்து நொருங்கிக் கிடந்தது. மணியத்தின் சர்வ நாடியும் சையிக்கிள் போலவே உடைந்து நொருங்கியது. அதை வெறிதுப் பார்த்தபடியே இருந்தான்.

இனி என்ன செய்கிறது. வா, எடுத்துக்கொண்டு போவோம் என்று நண்பர்கள் சமாதானப் படுத்தினர். உயிரே போனபிறகு பிணத்தை எடுத்து என்ன செய்கிறது. என்று வேதாந்தம் பேசினான் மணியம். நினைவுக்கு கூட எதையும் எடுக்க மறுத்து வெறும் கையினனாய் வீடு திரும்பினான். ஆனால் அவன் நினைவில் இருந்து மட்டும் அந்தச் சைக்கிளை நீண்ட காலத்துக்கு எடுக்க முடியவில்லை.

- அசன்



# வீதி அபிவிருத்திப்பணிகளால் பயன்தரும் மரங்கள் அழிப்பு

(சிகரம்)

வடக்கு மாகாணத்தில் தற்போது துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி அபிவிருத்திப் பணிகளால் நீண்டகாலமாக வீதியின் இரண்டு பக்கங்களிலும் நிழல் பரப்பி வந்த மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த அபிவிருத்திப் பணியினால் மரங்கள் மட்டுமன்றி, வீட்டின் பாகங்களும் இடித்தழிக்கப்பட்டு வரப்படுகின்றமை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

வடமாகாணத்தின் பல பாகங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த வீதி அபிவிருத்திப் பணிகளால் வீதி புதுப்பொலிவு பெற்று வரும் அதேவேளை, வீதியை அண்மித்த மதகுகள், நீர் வழிந்தோடும் வாய்க்கால்கள் மற்றும் பாலங்கள் என்பன திருத்தப்படுவதுடன் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன.



எனினும், வீதி அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் நீண்ட காலமாக வீதியின் இரண்டு பக்கங்களிலும் உள்ள மரங்கள் தறிக்கப்படுகின்றன. இதனால் வீதியினால் பயணிப்போர் வெயில் அதிகரித்த இக்காலத்தில் மர நிழல் இல்லாமையினால் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இந்த விடயம் தொடர்பாக கச்சேரிப்பிரதேசத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவர் குறிப்பிடுகையில் வீதி அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்வது நல்லது தான் எனினும், யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் சுமார் 50 வருடங்களிற்கு மேற்பட்ட நிழல் தரும் மரங்கள் எல்லாம் அழிக்கப்படுவது மிகவும் கவலைக்குரிய விடயம் எனக் குறிப்பிட்டதுடன், நிழல் தரும் மரங்கள் மட்டுமல்லாது, அபிவிருத்திக்கு இடைஞ்சலாக உள்ள வீடுகளின் பாகங்கள், கடைகள் என்பனவும் இடித்தழிக்கப்படுவது மிகவும் கவலை தரும் ஒரு விடயமாக உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## ஞான வீர சனசமூக நிலைய இரத்ததான முகாம்



(சிகரம்)

குருதி கொடையாளர்களின் தினத்தை முன்னிட்டு யாழ் கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலையத்தினரின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நிலைய மண்டபத்தில் இரத்த தானமுகாம் நடைபெற்றது.

இந்த குருதி வழங்கும் நிகழ்வில் இந்தக் கிராமத்தினைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் யுவதிகள் கலந்து கொண்டு குருதி வழங்கும் பணியினை மேற்கொண்டனர்.

இந்த நிலையமானது இவ்வாறான மனிதாபிமானச் செயற்பாடுகளை மேற்கொள்ளுவதன் மூலம் நல்லூர் கோட்டத்தில் முதலாவது இடத்தினைப் பிடித்துள்ளது.

சனசமூக நிலையங்களின் இவ்வாறான செயற்பாடுகளுக்கு இந்தப்பகுதி இளைஞர்கள், யுவதிகளின் ஒற்றுமையான செயற்பாடே காரணமென கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலைய கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

## ஆஞ்சநேயருக்கு 60 அடி சிலை

(சாரா- சிகரம்)



இணுவில் மருதனார் மடம அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயிலின் அஞ்சனேய சுவாமிக்கு 60 அடி ராஜகம்பீர வீர அஞ்சநேயர் ஸ்வருபத்தின் அடிக்கல் நாட்டு விழா கடந்த மாதம் (04-05-2012) நடைபெற்றது.

தற்போது இந்த ஆலயத்திற்கு வானளாவிய மாடிக் கோவிலிற்கு வர்ணம் தீட்டுதல் வசந்த வாசலில் கதைகள் நிறுவி அழகூட்டல் ஆலயத்தை சுற்றி அழகிய கர்ணன் கூடு அமைத்து சிற்பங்கள் நிறுவுதல் வீதிகளைச் செப்பனிட்டு பக்தர்களின் வழிபாட்டுக்கு ஏற்ற வகையில் மண்டபம் அமைதல் போன்ற வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆலய நிர்வாகத்தினர் தற்போதைய திருப்பணிகளுக்கு நன் கொடையாளர்களிடமிருந்து நிதி மற்றும் பொருட்களை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளனர். திருப்பணிக்கு பண உதவி செய்யவிரும்புபவர்கள் சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கியின் நிலையான வைப்பு கணக்கு இலக்கம் 117020032795 இற்கோ அல்லது இலங்கை வங்கி சுன்னாகம் கிளையின் நடைமுறை கணக்கு 7471506-p எனும் இலக்கத்தின் ஊடாகவும் கொடையாளர்கள் நன்கொடை வளங்க முடியும் என ஆலய குரு சிவஸ்ரீஇ.சுந்தரேஸ்வரக்குருக்கள் ஆதீன கர்த்தா தெரிவித்தார்.

# யாழில் றம்புட்டான் பழங்கள்

(பகி, பிரமிலன்)



யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலும் கொழும்பிலிருந்து கொண்டுவரப்படும் றம்புட்டான் பழங்களின் விற்பனை அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணம் திருநெல்வேலி சந்தையில் நாகலையிலிந்து றம்புட்டான்களைக் கொண்டுவந்த ஒருவர், தனது வாகனத்தில் வைத்தபடியே வியாபரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

கொழும்பிலிருந்து கொண்டு வந்து யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்படும் றம்புட்டான் பழம் ஒன்றினை 8ரூபாவிற்குக் கொள்வனவு செய்து 10ரூபாவிற்கு விற்பனை செய்வதாகவும், இதனால் றம்புட்டான் விற்பனையில் பெரிதாக இலாபம் கிடைப்பதில்லை எனவும் உள்ளூர் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.வழமைக்குமாறாக இந்த ஆண்டு றம்புட்டான் விளைச்சல் வீழ்ச்சியடைந்து காணப்படுவதாகவும், இதனாலே தற்போது மல்வானை றம்புட்டான், மலேசியன் றம்புட்டான் வகைகளை சேர்ந்தவைக்கு சந்தையில் கேள்வி அதிகரித்துள்ள தாகவும் தென்னிலங்கை றம்புட்டான் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப் பட்டுள்ளதால், வடக்கு மற்றும் கிழக்குபகுதிகளுக்கும் பெருமளவிலான றம்புட்டான் .பழங்கள் இறக்குமதி செய்யப்படுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இது தவிர, டுபாய், சவூதி அரேபியா போன்ற அரபு நாடுகளுக்கும் கனடா, ஐக்கிய இராட்சியம், சுவிஸ்ஸர்லாந்து, பிரான்ஸ் மற்றும் அவுஸ் திரேலியா போன்றநாடுகளுக்கும் றம்புட்டான்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பதிவிறக்கப் பெட்டகம்

கவிதை உணர்ச்சியின் வெளியீடு என்கிறார்கள். அப்படிப் பொத்தாம் பொதுவாகச் சொல்வதால், கவிதை பற்றி முழுவதையும் சொல்வதாகாது. உணர்ச்சியை மனிதன் ஒவ்வொருத்தனும் தனது ஒவ்வொரு நிலையிலும் சொல், செயல் இரண்டின் மூலமும் வெளியிட்டுக் கொண்டுதான் இருக்கிறான். கவிஞனுக்கு உணர்ச்சி தோன்றும்போது அவன் அடைந்த அனுபவத்தை அப்படியே வாசகனுக்கும் தோன்றவைக்க வேண்டும் என்கிறார்கள். இதுவும் பொதுப்படையான குறிப்புதான். உணர்ச்சி வெளியிடப்பட்டது என்று நாம் குறிப்பிட்டாலே, அது நமக்குத் தொற்றிவிட்டது என்பதைத்தான் குறிப்பிடுகிறோம். பிராணி வர்க்கம் முழுவதுமே, ஒன்றின் உணர்ச்சி ஒன்றுக்குத் தொற்றிக்கொண்டே இருப்பதன் விளைவாகத்தான் இயங்குகிறது. ஆகவே, உணர்ச்சி தொற்றுதல் என்ற காரணம் மட்டும் கவிதை ஆகாது.

அப்படியானால் கவிதை என்றால் என்ன?
சிருஷ்டி முழுவதிலும் ஊறி, அதை இயக்கும் சக்திக்கு மறுபெயர்தான் கவிதை. கவிஞனுடைய வேலை இந்தச் சக்திக்குத தன்னை ஊற்றுக்கண்ணாகத் திறந்து கொள்வதுதான்.

இயற்கை என்ற ஒளியை விசிறும் மின்சாரம்தான் கவிதை. அந்த மின்சாரத்தை இயற்கையாகவே கவிஞன் உணர்கிறான். அவனை, அவனது பாஷை மூலம் நாம் உணருகிறோம். ஆகவே, பாஷைத் தகட்டை செப்புக் கம்பியாக நீட்டி, தன் ஆத்மாவினுள் கரைந்த கவிதையை பாய்ச்சுகிறான். நம்மூடேயும் அக்கவிதை பாய்ந்து மனசில் ஒளியாகப் பூக்கிறது.

**– தருமு சிவராம்**

நம்முடைய நவீன வாழ்க்கையைச் சொல்வதே நவீன கவிதை. நவீன உலகத்தில், நவீன மனிதர்கள் மத்தியில், நமது வாழ்வு எப்படியாக இருக்கிறது, எப்படி ஆகி இருக்கிறது என்று பேசுவதைத்தான் அது பண்பும் பயனுமாய் கொண்டிருக்க வேண்டும். அல்லாதபோது, அது நவீன கவிதையே இல்லை. நவீன உலகம் நம்மை எப்படி பாதிக்கிறது. நவீன வாழ்க்கை நம்மை எங்கே கொண்டுவந்து விட்டிருக்கிறது. நவீன மனிதர்கள் நடுவே நம் நிலைமை என்னவாக இருக்கிறது என்றெல்லாம் பேசுவதுதான் நவீன கவிதையாக இருக்க முடியும்.

இதையே இன்னொரு விதமாகவும் சொல்லலாம். இன்றைய சமூகத்தில் தனிமனிதனின் நிலை என்ன, என்று கவிதை, காண்பித்துத் தரவேண்டும். அதாவது அவனுடைய அக புற வாழ்வுக் கோலங்கள் கவிதையில் தெரிய வேண்டும். என்றைக்குமே கவிதை மனிதனின் அக–புற உலகம் சார்ந்ததாகத்தான் இருந்து வருகிறது. நவீன கவிதையும் அப்படித்தான் இருக்கும். கவிஞன் இதைச் சரியாகக்கண்டு சொல்கிறானா என்பதுதான் முக்கியம்.– **விக்ரமாதித்யன**

தமிழின் சொந்த வடிவம் கவிதைதான். அது மிகப் பழையது என்பதும் நாமறிந்த ஒன்று. பாரதியின் வசன கவிதையிலிருந்து நவீனகவிதை தமிழில் தொடங்குகிறது என எடுத்துக்கொண்டால், ஒரு நூறு ஆண்டுகளைக் கடந்துவிடயிருக்கிறோம். அன்றிலிருந்து இன்றுவரை மிகக குறைவான கவிதை(உற்பத்தி) வகைமைகளே முயற்சிக்கப்பட்டு வந்திருக்கிறது. அனைத்து வகைமைகளுக்கிடையிலும் சில பொதுத் தன்மைகள் எப்போதும் மாறாமல் அல்லது மீறப்படாமல் தொடர்ந்து வருவதை நாம் அவதானிக்கலாம். துண்டு துண்டான வரியமைப்பு, இறுக்கமான அல்லது விரிவான (வானம் பாடிகள் உருவாக்கிய) சொல் தேர்வு, கவிதைக்குள் உருவாக்க முடியாத படர்க்கை நிலை, அகம் புறம என்பதுபோல நான்–நீ என்ற மாறாத எதிர்நிலை உருவாக்கம், கடைசி வரியிலோ அல்லது அதற்கு சற்று முந்தியோ ஒரு கிளைமாக்ஸ் வரி அல்லது அதிர்ச்சிதரக்கூடிய திருப்பம் போன்றவற்றோடு சில சொற்கள் கவிதையில் பயன்படுதத் தக்கவை அல்ல என்றளவிலான் புரிதல் அத்தோடு நவீன கவிதை என்றால் இப்படித்தான் இந்த இந்த பண்புகளைக் கொண்டதாகத்தான் இருக்க வேண்டும் என்ற எழுதப்படாத ஒரு விதியை எல்லோரும் ஏற்றுக்கொண்டதுபோல ஒரு தோற்றம். இவை எல்லாவற்றையும் கடந்து மிக முக்கியமானதும் மோசமானதுமான பொதுத்தன்மை என்னவென்றால், கவிதை அனுபவங்களைப் பிரதிபலிப்பது என்ற கதைகளை உருவாக்கும் சூழல்களையும், கவிதைச் சம்பவங்களையும் அவை கொண்டிருப்பதுதான். சமகாலத்தில் அனுபவத்தை பிரதிபலிப்பது என்ற கதைகளிலிருந்து விடுபட்டு புதியதொரு அனுபவத்தை பிறப்பிக்கக்கூடிய கவிதைகளும் உருவாகிக் கொண்டிருக்கின்றன. ஆயினும் கவிதை உருவாக்கம், மொழிதல், கவிதையாக தன்னைக் கட்டமைப்பதிலும் பிரதிசார்ந்தோ கருத்துருவாக்க உட்சிக்கல் சார்ந்தோ மாற்றங்கள் எதுவுமில்லாமல் இருக்கிறது என்பதே முக்கியம்.– **றியாஸ் குரானா**

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2012

## (பழைய பாடத்திட்டம்) நேர அட்டவணை

**ஆகஸ்ட் 06 ஆம் திகதி திங்கட்கிழமை**

| முற்பகல் | பிற்பகல் |
|---|---|
| 8.30 - 11.30<br>10 இணைந்த கணிதம் I<br>78 அரபு I | 12.30 - 14.30<br>09 உயிரியல் I<br>12.30 - 15.30<br>21 பொருளியல் I பகுதி I- II<br>79 மலாய் I<br>80 பேர்சிய மொழி I |

**ஆகஸ்ட் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 11.30<br>52 நாட்டியம் (சிங்களம்) I<br>53 நாட்டியம் (பரதம்) I<br>54 சங்கீதம். (கீழைத்தேயம்) I<br>55 சங்கீதம் (கர்நாடகம்) I<br>56 சங்கீதம் (மேலைத்தேயம்) I | 12.30 - 15.30<br>09 உயிரியல் II<br>21 பொருளியல் II பகுதி I- II<br>79 மலாய் II<br>80 பேர்சிய மொழி II |

**ஆகஸ்ட் 08 ஆம் திகதி புதன்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 11.30<br>10 இணைந்த கணிதம் II<br>52 நாட்டியம் (சிங்களம்) II<br>53 நாட்டியம் (பரதம்) II<br>78 அரபு II | 12.30 - 14.30<br>08 விவசாய விஞ்ஞானம் I<br>12.30 - 15.30<br>48 கிரேக்க உரோம நாகரிகம் I<br>83 ருசியன் I |

**ஆகஸ்ட் 09 ஆம் திகதி வியாழக்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 11.30<br>32 வணிகக்கல்வி I பகுதி I-II<br>51 சித்திரக்கலை I<br>82 ஜேர்மன் I<br>85 உருது I<br>86 சீனமொழி I | 12.30 - 15.30<br>54 சங்கீதம் (கீழைத்தேயம்) II<br>55 சங்கீதம் (கர்நாடகம்) II<br>56 சங்கீதம் (மேலைத்தேயம்) II |

**ஆகஸ்ட் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 10.30<br>01 பௌதிகவியல் I<br>8.30 - 11.30<br>32 வணிகக் கல்வி II<br>பகுதி I-II<br>51 சித்திரக்கலை II<br>82 ஜேர்மன் II | 14.00 - 17.00<br>71 சிங்களம் I<br>72 தமிழ் I |

**ஆகஸ்ட் 11 ஆம் திகதி சனிக்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 11.30<br>08 விவசாய விஞ்ஞானம் II<br>48 கிரேக்க உரோம நாகரிகம் II<br>83 ருசியன் II<br>86 உருது II<br>85 சீனமொழி II | 12.30 - 15.30<br>28 மனைப்பொருளியல் I |

**ஆகஸ்ட் 13 ஆம் திகதி திங்கட்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 11.30<br>01 பௌதிகவியல் II<br>51 சித்திரக்கலை III | 12.30 - 15.30<br>71 சிங்களம் II<br>72 தமிழ் II<br>76 இலத்தீன் II |

**ஆகஸ்ட் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 11.30<br>24 அளவையியலும்<br>விஞ்ஞான முறையும் I | 12.30 - 15.30<br>28 மனைப்பொருளியல் II<br>76 இலத்தீன் II |

**ஆகஸ்ட் 15 ஆம் திகதி புதன்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 10.30<br>02 இரசாயனவியல் I<br>8.30 - 11.30<br>75 சமஸ்கிருதம் I<br>77 கிரேக்கம் I<br>81 பிரெஞ்சு I | 12.30 - 15.30<br>24 அளவையியலும்<br>விஞ்ஞான முறையும் II |

**ஆகஸ்ட் 16 ஆம் திகதி வியாழக்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 10.30<br>14 குடிசார்த் தொழினுட்பவியல் I<br>15 பொறிமுறைத் தொழினுட்பவியல் I<br>16 மின், இலத்திரன்,<br>தகவல் தொழினுட்பவியல் I<br>17 உணவுத் தொழினுட்பவியல் I<br>18 விவசாயத் தொழினுட்பவியல் I<br>19 உயிர்வளத் தொழினுட்பவியல் I<br>8.30 - 11.30<br>74 பாளி I | 12.30 - 15.30<br>25 வரலாறு (இந்திய) II<br>பகுதி I-II<br>25 வரலாறு (ஐரோப்பிய) II<br>பகுதி I-II |

**ஆகஸ்ட் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 11.30<br>02 இரசாயனவியல் II<br>75 சமஸ்கிருதம் II<br>77 கிரேக்கம் II<br>81 பிரெஞ்சு II | 14.00 - 17.00<br>23 அரசியல் மூலத்துவங்கள் I<br>பகுதி I-II |

**ஆகஸ்ட் 18 ஆம் திகதி சனிக்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 11.30<br>13 பொது ஆங்கிலம் I | 12.30 - 15.00<br>13 பொது ஆங்கிலம் II |

**ஆகஸ்ட் 20 ஆம் திகதி திங்கட்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 11.30<br>41 பௌத்தம் I<br>42 இந்து சமயம் I<br>43 கிறிஸ்தவம் I<br>44 இஸ்லாம் I<br>45 பௌத்த நாகரிகம் I<br>46 இந்து நாகரிகம் I<br>47 இஸ்லாமிய நாகரிகம் I | 12.30 - 14.30<br>29 தொடர்பாடலும்<br>ஊடகக்கற்கையும் I |

**ஆகஸ்ட் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 11.30<br>73 ஆங்கிலம் I | 12.30 - 15.30<br>25 வரலாறு I பகுதி I- II |

**ஆகஸ்ட் 22 ஆம் திகதி புதன்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 11.30<br>14 குடிசார்த் தொழினுட்பவியல் II<br>15 பொறிமுறைத் தொழினுட்பவியல் II<br>16 மின் இலத்திரன், தகவல்<br>தொழினுட்பவியல் II<br>17 உணவுத் தொழினுட்பவியல் II<br>18 விவசாயத் தொழினுட்பவியல் II<br>19 உயிர்வளத் தொழினுட்பவியல் II<br>74 பாளி II | 12.30 - 15.30<br>22 புவியியல் I |

**ஆகஸ்ட் 23 ஆம் திகதி வியாழக்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 11.30<br>23 அரசியல் மூலத்துவங்கள் II<br>பகுதி I- II | 12.30 - 15.30<br>73 ஆங்கிலம் II |

**ஆகஸ்ட் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 11.30<br>33 கணக்கீடு I<br>பகுதி I- II<br>84 ஹிந்தி I | 14.00 - 17.00<br>22 புவியியல் III<br>பகுதி I- II |

**ஆகஸ்ட் 25 ஆம் திகதி சனிக்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 11.30<br>41 பௌத்தம் II<br>42 இந்து சமயம் II<br>43 கிறிஸ்தவம் II<br>44 இஸ்லாம் II<br>45 பௌத்த நாகரிகம் II<br>46 இந்து நாகரிகம் II<br>47 இஸ்லாமிய நாகரிகம் II | 12.30 - 15.30<br>29 தொடர்பாடலும்<br>ஊடகக்கற்கையும் II |

**ஆகஸ்ட் 27 ஆம் திகதி திங்கட்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 11.30<br>33 கணக்கீடு I<br>பகுதி I- II<br>84 ஹிந்தி II | 12.30 - 15.30<br>22 புவியியல் III<br>பகுதி I- II |

**ஆகஸ்ட் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 11.30<br>31 வணிகப் புள்ளிவிபரவியல் I<br>57 நாடகமும் அரங்கியலும்<br>(சிங்களம்) I<br>58 நாடகமும் அரங்கியலும்<br>(தமிழ்) I<br>59 நாடகமும் அரங்கியலும்<br>(ஆங்கிலம்) I | 12.30 - 15.30<br>07 கணிதம் I<br>11 உயர் கணிதம் I<br>87 யப்பானிய மொழி I |

**ஆகஸ்ட் 29 ஆம் திகதி புதன்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 11.30<br>31 வணிகப் புள்ளிவிபரவியல் II<br>57 நாடகமும் அரங்கியலும்<br>(சிங்களம்) II<br>58 நாடகமும் அரங்கியலும்<br>(தமிழ்) II<br>59 நாடகமும் அரங்கியலும்<br>(ஆங்கிலம்) II | 12.30 - 15.30<br>07 கணிதம் II<br>11 உயர் கணிதம் II<br>87 யப்பானிய மொழி II |

**ஆகஸ்ட் 30 ஆம் திகதி வியாழக்கிழமை**

| | |
|---|---|
| 8.30 - 11.00<br>12 பொதுச் சாதாரண பரீட்சை | 12.30 - 15.30<br>57 நாடகமும் அரங்கியலும்<br>(சிங்களம்) III<br>58 நாடகமும் அரங்கியலும்<br>(தமிழ்) III<br>59 நாடகமும் அரங்கியலும்<br>(ஆங்கிலம்) III |

Grade - 13

# க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்

G.C.E. (A/L) Examination model Paper

# கல்வி முரசு

உயிரியல் - பகுதி - I & II
Biology - Part - I &II

02 | T | II

நேரம் : 2 மணித்தியாலம்

ஆசிரியர் :
Ponniah Aravinthan
(B.se, M.ed, Dip.in.ed)

## உயிரியல் - *பகுதி - I தொடர்ச்சி.....*

45. மனிதனின் மூளையம் பற்றிய பின்வரும் கூற்றுகளுள் எது / எவை தவறானது / தவறானவை?
   A. அது மூளையின் மிகப் பெரிய பகுதியாகும்.
   B. அது நடுமூளையில் இருந்து வருவிக்கப்பட்டது.
   C. அது இச்சையுள் தசைச்சுருங்கலைக் கட்டுப்படுத்துவதுடன் தொடர்புபட்டது.
   D. அது உடலின் சமனிலைக்குப் பொறுப்பானது.
   E. அது புலன்,இயக்க பரப்புகளைக் கொண்டிருக்கிறது.

46. மனிதனின் நீள்வளைய மையவிழையம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் எது அல்லது எவை சரியானது அல்லது சரியானவை?
   A. அது குருதியமுக்கத்தை கட்டுப்படுத்துகிறது.
   B. அது இதய அடிப்பை ஒழுங்காக்குகிறது.
   C. முண்ணான் தெறிவினையை ஆளுகிறது.
   D. காற்றோட்டவீதத்தை கட்டுப்படுத்துகிறது.
   E. வெப்பச்சீராக்கல் மையமாகச் செயற்படுகிறது.

47. சுகதேகி மனிதன் ஒருவனின் சாதரண குருதியமுக்கம் அண்ணளவாக.
   01. 120 / 80 mmHg
   02. 90 / 140 mmHg
   03. 180 / 60 mmHg.
   04. 60 / 40 mmHg
   05. 120 / 40 mmHg.

48. சாள்ஸ் டாவின் இன் கூர்ப்புக் கொள்கையில் உள்ளடக்கப்பட்ட எண்ணக்கருக்களில் அவரின் அவதானமாக அமைவது.
   01. இயற்கைத் தேர்வு
   02. தக்கனப்பிழைத்தல்
   03. மிகைப்பெருக்கம்
   04. விகாரங்கள்
   05. இசைவாக்கம்

49. வைரசுகள் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் தவறானது.
   01. கல அமைப்பற்றவை
   02. கழிவகற்றுகின்றன.
   03. பளிங்காக்கப்படக்கூடியன
   04. உயிர்க்கலங்களில்பெருக்கமடைகின்றன.
   05. அவை ஒளி நுணுக்குக்காட்டி ஊடாக அவதானிக்கப்பட முடியாதவை.

## உயிரியல் - *பகுதி - II*

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. A. i. உயிரியல் மூலக்கூறுகள் என்பதனை வரையறுக்க.

.............................................................................

.............................................................................

.............................................................................

ii. உயிர்க்கலங்களில் காணப்படுகின்ற நான்கு பிரதான சேதன மூலக்கூறுகளைக் குறிப்பிட்டு அவற்றில் C, H, O, N, S, P ஆகிய மூலகங்கள் காணப்பட்டால் ( √ ) அடையாளத்தையும், காணப்படா விட்டால் (X) அடையாளத்தையும் இடுவதுடன் அவற்றினை ஆக்கும் ஆக்கக் கூறுகளையும் குறிப்பிடுக.

| உயிரியல் மூலக்கூறு | C | H | O | N | P | S | ஆக்கக்கூறு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

iii. a. மேலே நீர் குறிப்பிட்ட உயிரியல் மூலக்கூறுகளில் மாமூலக்கூறுகள் என அழைக்கப்படுபவை எவை?


.............................................................................

.............................................................................

b. மேலே நீர் குறிப்பிட்ட உயிரியல் மூலக்கூறுகளில் எது / எவை பின்வரும் கட்டமைப்புகளில் காணப்படுகின்றது எனக் குறிப்பிடுக.
   1. இழைமணி ..............................................
   2. கொல்கியுடல் ..............................................
   3. ரைபசோம் ..............................................
   4. கலச்சுவர் ..............................................

iv. கீழுள்ள படமானது கலமென்சவ்வின் அமைப்பினைக் காட்டுகிறது.

a. A - D வரையான கட்டமைப்புகளைப் பெயரிடுக.




A .............................. B ..............................
C .............................. D ..............................

b. கலமென்சவ்வின் மேற்குறித்த கட்டமைப்பினை விபரித்த விஞ்ஞானிகள் யாவர்?

.............................................................................

.............................................................................




B. i. இழையம் என்பதனை வரையறுக்க.

.............................................................................

.............................................................................

.............................................................................

ii. a. கீழே காட்டப்பட்டுள்ள A, B, C ஆகிய இழையங்களை அடையாளம் காண்க.

.............................. .............................. ..............................
(A) (B) (C)

b. A, B ஆகிய இழையங்களின் பரம்பல்களுக்கு இரு உதாரணங்கள் தருக.

A.............................................................................

.............................................................................

B.............................................................................

.............................................................................

iii. பல்கல விலங்குகளில் பொதுவாகக் காணப்படுகின்ற நான்கு இழைய வகைகளைத் தருக.

.............................................................................

.............................................................................

.............................................................................

.............................................................................

iv. a. மேலே C எனப் பெயரிடப்பட்ட இழையத்தினை ஆக்கும் கலவகைகளைப் பெயரிடுக.

.............................................................................

.............................................................................

.............................................................................

.............................................................................

b. மேலே C எனப் பெயரிடப்பட்ட இழையத்தினால் ஆற்றப்படும் இரு பிரதான தொழில்களைக் குறிப்பிடுக.

.............................................................................

.............................................................................

.............................................................................

v. a. தாவர விலங்குகளின் இழையங்களிலே பொதுவாக அவதானிக்கப்படத்தக்க நான்கு கலவிடை இணைப்பு வகைகளைக் குறிப்பிடுக.

.............................................................................

.............................................................................

.............................................................................

.............................................................................

b. மேலே வினா(a) நீர் குறிப்பிடுகின்றவற்றுள் தாவர இழையங்களில் மட்டும் காணப்படும் கலவிடை இணைப்பு வகைகளைத் தருக.

.............................................................................

.............................................................................

C. i. விஞ்ஞான முறை என்பதனை வரையறுக்க.

.............................................................................

.............................................................................

.............................................................................

.............................................................................

(மறுபக்கம் பார்க்க)

ii. விஞ்ஞான முறையின் பிரதானமான படிமுறைகளைத் தருக.

iii. a. விஞ்ஞானமுறையின் மிகவும் அடிப்படையான படியாக விளங்குவது.

b. விஞ்ஞானமுறையின் முக்கியத்துவங்கள் இரண்டு தருக.

iv. a. உயிரியல் பிரச்சினைகள் தீர்ப்பதில் விஞ்ஞான முறையின் பயன்பாடுகள் மூன்று தருக.

b. விஞ்ஞானமுறையின் தந்தை என வர்ணிக்கப்படுபவர்.

v. a. உயிரியல் கல்வியின் முக்கியத்துவங்கள் நான்கு தருக.

b. விஞ்ஞானமுறையில் கட்டுப்பாட்டுப் பரிசோதனையின் முக்கியத்துவத்தை விளக்குக.

02. A. (i) ஒருசீர்வெப்பநிலை என்பதை வரையறுக்க.

(ii) ஒரு வெப்பநிலையுள்ள விலங்குகளுக்கு இரு உதாரணங்கள் தருக.

(iii) மனித உடல் வெப்பநிலை குறைவடையும்போது இடம்பெறும் வெப்பம் உருவாக்கப்படும் பொறிமுறையைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(iv) மனித உடலில் வெப்ப இழப்பு மையம் அமைந்துள்ள இடம் எது?

(v) வெப்பநிலைச்சீராக்கலில் ஈரலின் பங்கினைக் குறிப்பிடுக.

B. (i) வாங்கிகளாலும்,விளைவுகாட்டிகளாலும் ஆற்றப்படும் பிரதான தொழில்களைக் குறிப்பிடுக.

வாங்கி: ....................

விளைவுகாட்டி: ....................

(ii) உறுத்துணர்ச்சி என்பதனை வரையறுக்க.

(iii) தெறிவினைத் தொழிற்பாடு(Reflex Action) என்பதனை வரையறுக்க.

(iv) முண்ணான் தெறிவில்லின் (Spinal reflex arcs) கூறுகளை ஒழுங்குமுறையில் தருக.

(v ) மண்டையோட்டுத் தெறிவினைக்கான (cranial reflex) உதாரணங்கள் இரண்டு தருக.

C. (i) ஒருசீர்த்திடநிலை என்ற எண்ணக்கருவை வரையறுக்க.

(ii) ஒருசீர்த்திடநிலையின் முக்கியத்துவம் இரண்டு தருக.

(iii) ஒருசீர்த்திடநிலையில் பங்கு கொள்ளும் அங்கங்கள் இரண்டு தருக.

(iv) அகச்சூழல் என்பதற்கு பொருத்தமான உதாரணம் தருக.

03. A. (i) கலவட்டம் என்ற எண்ணக்கருவினை வரையறுக்க.

(ii) இயூக்கரியோற்றாக் கலம் ஒன்றின் கலவட்டத்தின் போது நிகழும் பிரதான அவத்தைகள் நான்கு பிரதான அவத்தைகளைத் தருக.

(iii) கலம் ஒன்றானது பிரிவடைவதற்கான காரணங்கள் இரண்டு தருக.


(iv) a. புரோக்கரியோற்றாக் கலம் பிரிவடையும் முறையினைச் சுருக்கமாக விபரிக்க.

b. புரோக்கரியோற்றா கலவட்டத்திற்கும் இயூக்கரியோற்றா கலவட்டத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் மூன்று தருக.

(v) தாவரக்கலங்களில் நிகழும் கலப்பிரிவுக்கும் விலங்குக்கலத்தில் நிகழும் கலப்பிரிவிற்கும் இடையிலான வேறுபாடுகள் மூன்று தருக

| தாவரக்கலம் | விலங்குக்கலம் |
|---|---|
| .................... | .................... |
| .................... | .................... |
| .................... | .................... |

B. (i) P, Q என்னும் படங்கள் ஒடுங்கற்பிரிவின் இரு நிலைகளைக் காட்டுகின்றன. இந்நிலைகளைப் பெயரிடுக? ஒவ்வொரு நிலைகளின் போதும் கலங்களில் இடம்பெறும் மூன்று பிரதான நிகழ்வுகளை கீழே எழுதுக.




P.................... Q....................



P வில் நிகழும் பிரதான நிகழ்வுகள்:....................

Q வில் நிகழும் பிரதான நிகழ்வுகள்....................

(ii) ஒடுங்கற்பிரிவின் முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக.

(தொடரும்)

# பிரணாப் முகர்ஜிக்கு எதிராக அன்னா ஹசாரே குழு குற்றச்சாட்டு

(ஜோத்பூர்)

அரிசி ஏற்றுமதி ஊழல், கடற்படை இரகசியங்கள் கசிந்தது தொடர்பான விஷயங்களில், பிரணாப் முகர்ஜிக்கு தொடர்புள்ளதாக குற்றச்சாட்டு உள்ளது. இதுகுறித்து தனியாக ஒரு குழு அமைத்து விசாரிக்க வேண்டும். அவரை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தக் கூடாது என அன்னா ஹசாரே குழுவினர் கூறியுள்ளனர்.

அன்னா ஹசாரே குழுவைச் சேர்ந்த அரவிந்த் கெஜ்ரிவால், மனிஷ் சிஷாடியா ஆகியோர் ஜோத்பூரில் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி தேர்தலில், ஐ.மு., கூட்டணி வேட்பாளராக, பிரணாப் முகர்ஜி நிறுத்தப்பட்டுள்ளார். இவர் ஏற்கனவே வெளியுறவு அமைச்சராக இருநத போது கானா நாட்டுக்கு அரிசி ஏற்றுமதி செய்ததில் 2,500 கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடு நடந்ததாக தகவல்கள் வெளியாயின.

மேலும், இவர் இராணுவ அமைச்சராக இருந்தபோது கடற்படை இரகசியங்கள் கசிந்தன. ஸ்கார்பைன் நீர்மூழ்கி கப்பல் வாங்கியதில் முறைகேடு நடந்ததாகவும் புகார் எழுந்தது. பிரணாபுக்கு எதிரான இந்த குற்றச்சாட்டுகள் குறித்து தனியாக ஒரு குழு அமைத்து, விசாரணை நடத்த வேண்டும். ஜனாதிபதி பதவி என்பது மிக உயர்ந்த பதவி. எனவே குற்றச்சாட்டில் சிக்கியுள்ளவர், இந்த பதவிக்கு போட்டியிடக் கூடாது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அன்னா ஹசாரே குழுவினர் ஏற்கனவே பிரதமர் மன்மோகன் சிங் நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி உட்பட 15 மத்திய அமைச்சர்களுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகளை தெரிவித்தனர். இதுகுறித்து மத்திய அரசு விசாரணை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

ஆனால் இந்த குற்றச்சாட்டுகளை மத்திய அரசு மறுத்து விட்டது. இந்நிலையில் பிரணாப் முகர்ஜிக்கு எதிராக ஹசாரே குழுவினர் மீண்டும் குற்றச்சாட்டுகளை கூறியுள்ளனர்.

இந்தியச் செய்திகள்

# சாய்பாபா பத்தர்கள் பஸ் விபத்தில் பலி

(ஜோத்பூர்)

இந்தியாவின் மஹாராஷ்ரா மாநிலத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 32 பேர் உயிரிழந்துளளனர். ஒஸ்மானாபாத் மாவடடத்தில் பாலத்தில் இருந்து வீழ்ந்த பஸ்சில் இருந்த யாத்திரிகர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக இந்திய தகவல்கள் குறிப்பிடுகின்றன.


சீரடி சாய்பாபா ஆயலத்திற்குச் சென்று திரும்பிய யாத்திரிகள் பயணித்த இந்தப் .பஸ் நேற்று அதிகாலை விபத்துக்குள்ளானதில் 20 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். இந்த விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஆந்திர மாநில முதலமைச்சர் கிரன்குமார் ரெட்டி தமது அனு தாபங்களைச் தெரிவித்துள்ளார்.



# கருணாநிதி மீது வைகோ குற்றச்சாட்டு

ஈழத் தமிழர்களைக் கொன்று குவிப்பதற்கு காரணமாக இருந்த கருணாநிதி, தற்போது இதை மூடி மறைக்கவே டெசோ மாநாட்டை நடத்துகிறார் என்று ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ தெரிவத்துள்ளார். தமிழ்நாடு, அரியலூரில் ம.தி.மு.க.வின் 19 ஆவது ஆண்டு தொடக்க விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொள்ள வந்த வைகோ செய்தியாளர்களிடம் கூறியதாவது, இலங்கையில் மாவீரர் துயிலகங்கள், தமிழர் வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்பட்டு சிங்களவர் குடியேற்றம் நடைபெற்று வருகிறது. இதைத் தடுதது நிறுத்த வேண்டும் என்று வைகோ வலியுறுத்தினார். மேலும் ஈழத் தமிழர்களை கொன்று குவிப்பதற்கு காரணமாக இருந்தவர் கருணாநிதி. இதை மூடி மறைக்கவே, தி.மு.க. இப்போது டெசோ மாநாட்டை நடத்துகிறது எனவும் குற்றம் சாட்டினார்.

# பணத்தாள்களில் தலைவர்களின் தலை ரிசர்வு வங்கி பரிசீலனை



(சென்னை)

இந்திய பணத்தாள்களில் மகாத்மா காந்தி போன்ற மற்ற தலைவர்களின் படங்களையும் அச்சடிக்க மத்திய ரிசர்வு வங்கி பரிசீலனை செய்து வருகின்றது. இதுகுறித்து மத்திய ரிசர்வு வங்கி அதிகாரி ஒருவர் கூறியதாவது,

முதலில் பணத்தாள்களில் அசோக ஸ்தூபி மட்டுமே அச்சடிககப்பட்டிருந்தது. கடந்த 1987 ஆம் ஆண்டில் முதன் முதலில் 500 பணத்தாளில் மகாத்மா காந்தி படம் அச்சடிக்கப்பட்டது.

இதன்பின்னர் 1993 இல் மற்ற பணத்தாள்களிலும் காந்தி படத்தை அச்சடிக்க மத்திய அரசு அனுமதியுடன் ரிசர்வு வங்கி குழு முடிவெடுத்தது. இந்நிலையில் 1996 முதல் எல்லா பணத்தாள்களில் மகாத்மா காந்தி படம் அச்சடிக்கப்பட்டு வருகிறது.

தற்போது இந்திய நாட்டிற்காக சமூகம் அடிப்படையில் உழைத்த அம்பேத்கர் ஜவகர்லால் நேரு, சத்ரபதி சிவாஜி, இந்திரா காந்தி ஆகியோரின் படங்களையும் பணத்தாளகளில் அச்சடிக்க வேண்டுமென பலர் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுபற்றி மத்திய ரிசர்வு வங்கி பரிசீலித்து வருகிறது எனறு அந்த அதிகாரி தெரிவித்தார்.

# 1006 ஜோடிகளுக்கு பிரமாண்டமான திருமணம்

(சென்னை)

அறநிலையத் துறை சார்பில் நேற்று நடந்த 1,006 ஜோடிகளுக்கான திருமணத்துக்கு 4.5 கோடி ரூபாயில் சீர் வரிசைகள் வழங்கப்பட்டது. அறநிலையத் துறை சார்பில், 1,006 ஜோடிகளுக்கான திருமணம் திருவேற்காடு கோவிலில் நேற்று நடைபெற்றது. முதல்வர் ஜெயலலிதா திருமணத்தை நடத்தி வைதார். முதலில் மண மேடையில் உள்ள ஏழு மணமக்களுக்கு முதல்வர் ஜெயலலிதா திருமாங்கல்யங்களை எடுத்துக் கொடுத்து திருமணத்தை நடத்தி வைத்தார். இதைத் தொடர்ந்து விழாப் பந்தலில் மீதமிருக்கும், 999 மணமக்கள் முதல்வரின் ஆசியுடன் மங்கல வாத்தியங்கள் முழங்க வேத மந்திரங்கள் ஓத மணப்பெண்கள் கழுத்தில், ஒரேநேரத்தில் திருமாங்கல் யத்தைக் கட்டினர்.



இதையடுத்து மேடையில் உள்ள மணமக்களுக்கு, முதல்வர் சீர் வரிசைகளை வழங்கி வைத்தார். ஒரு மணமகளுக்கு நான்கு கிராம் திருமாங்கல்யம் வீதம் 1,006 ஜோடிகளுக்கு, 4 ஆயிரத்து 24 கிராம் தங்கம் வழங்கப்படுகிறது. ஒரு மணமகளுக்கு ஆறு கிராம் வெள்ளி மெட்டி வீதம் 6 ஆயிரத்து 36 கிராமில் மெட்டிகள் அளிக்கப்படுகின்றன.

மணமகனுக்கு பட்டு வேட்டி, துண்டு, சட்டை மணப்பெண்ணுக்கு பட்டுப்புடவை வழங்கப்படுகிறது. இது தவிர பாய், தலையணை, சீர் வரிசை பாத்திரங்கள் கொடுக்கப்பட்டன. மணமக்கள் மற்றும் திருமணத்தில் பங்கேற்போருக்கு திருமணப் பந்தலிலேயே விருந்து அளிக்கப்படுகிறது.

இனிப்பு, சாம்பார், ரசம், காரக் குழம்பு, பொரியல், கூட்டு, வடை, அப்பளம், ஊறுகாய், மோருடன் அறுசுவை உணவு வழங்கப்படுகிறது. இவற்றுக்காக, 4.5 கோடி ரூபாய் செலவிடப்பட்டது.

ஒரு திருமணத் தம்பதிகளுக்கு தமிழக அரசு 21 ஆயிரத்து 200 ரூபாய் செலவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஏயர் இந்தியாவிற்கு புதிய விமானிகள் நியமனம்

(சென்னை)


விமானிகளின் தொடர் வேலை நிறுத்தப்போராட்டத்தை அடுத்து புதிய விமானிகளுக்கு பயிற்சி அளித்து ஏர் இந்தியாவில் பணியமர்த்தப்போவதாக சிவில் விமானப்போக்குவரத்துத்துறை அமைச்சர் அஜித் சிங் தெரிவித்துள்ளார்.

ஊதிய உயர்வு, சிறப்பு போயிங் விமானப்பயிற்சி உட்பட சில கோரிக்கைகளை தமக்கு செய்து தர வலியுறுத்தி ஏயர் இந்தியா விமானிகள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்போராட்டத்திற்கு டில்லி உயர்நீதிமன்றம், மத்திய அரசு கண்டனம் தெரிவித்தும் கூட விமானிகள் தங்களது போராட்டத்தினை நிறுத்தவில்லை.

இந்நிலைலயில் ஏயர் இந்தியாவிற்கு புதிய விமானி களை பணியமர்த்த மத்திய சிவில் விமானப்போக்கு வரத்துத துறை முடிவு செய்தது. அதன படி புதிய விமானிகளுக்கு பயிற்சி அளித்து அவர்கள் விரைவில் பணியமர்த்தப்படுவார்கள் என்று சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் அஜித் சிங் கூறியுள்ளார்.

# மொட்டை அடிக்க வரிசையில் பத்தார்கள்



(நகரி)

திருமலையில் பக்தர்கள் முடிகாணிக்கை செலுத்துமிடத்தில் சவரத் தொழிலாளர் பற்றாக்குறை உள்ளதாக தெரிய வந்துள்ளது. இதனால், இங்கு பகதர்கள் நீண்ட வரிசையில் காததிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதால் மேலும் கூடுதலாக 300 சவரத் தொழிலாளர்கள் விரைவில் நியமிக்கப்பட உள்ளனர்.

சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த சவரத் தொழிலாளர்கள் மட்டுமே இங்கு பணியில் அமர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.


திருமலையில் பக்தர்கள் தங்கும் வசதிக்காக நந்தகம் என்ற பெயரில் 30 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வரும் விடுதி வளாகம், அடுத்த மாதம் திறக்கப்பட்டு பக்தர்களுக்கு வசதி ஏற்படுத்தப்பட உள்ளது.

# திராணியற்ற தமிழக அரசியல் கட்சிகள்

(சென்னை)

காவிரியில் தமிழ்நாட்டிற்கு உள்ள உரிமையைக் கேட்கக்கூட திராணியற்ற நிலையில் தமிழக கட்சிகள் உள்ளன என தமிழக பா.ஜ. தலைவர் பொன் ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கர்நாடகாவில் பா.ஜ. ஆட்சி தான் நடக்கிறது. இருப்பினும் தமிழர்களின் உரிமைக்காக கர்நாடகாவை எதிர்க்கும் வலிமை பா.ஜ.வுக்கு உள்ளது. கர்நாடகா முதல்வர் சதானந்தா கவுடா தமிழகத்திற்கு தரவேண்டிய 250 டி.எம்.சி. தண்ணீரை தந்தே ஆக வேண்டும். தர மறுத்தால் தமிழக பா.ஜ. கடுமையாகப் போராடும் எனத் தெரிவித்துள்ளார்.



# துருக்கி சிறையில் தீ ; 13 பேர் பலி

தென்கிழக்கு துருக்கியிலுள்ள சிறைச்சாலையொன்றில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக 13 சிறைக்கைதிகள் பலியானதுடன், 5 பேர்ளரிகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாகவும் அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சனிலூர்பா மாகாணத்திலுள்ள இச்சிறைசசாலையில் சுமார் 1,000 கைதிகள் உள்ளனர். இச்சிறைச்சாலையில் கடந்த சனிக்கிழமை மாலை ஏற்பட்ட இத்தீ விபத்துக் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் மூச்சுத்திணறலுக்கு உள்ளாகியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சிறைச்சாலையின் ஏனைய பகுதிகளுக்கு தீ பரவுவதற்கு முன்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. குறித்த பகுதியில் ஏற்பட்ட கலவரத்தின்போது தீ ஏற்பட்டதாக துருக்கிய ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியை உள்ளூர் ஆளுநர் நிராகரித்துள்ளார். வரிசையில் நின்ற கைதிகளுக்கு இடையில் தீ பரவியதாகவும் அவர் கூறினார்.

உலகச் செய்திகள்



# சக காவலாளிகளை சுட்டுக் கொன்று ஏ.டி.எம்.இயந்திரத்தில் கொள்ளை

கனடா நாட்டில் அல்பெர்டா மாகாணத்தில் எட்மோடன் நகரில் பல்கலைக்கழக வளாகத்தில் ஏ.டி.எம் மையம் உள்ளது.

இந்த எந்திரத்தில் பணம் வைப்பதற்காக 5 காவலாளிகள் காரில் சென்றனர். இவர்களில் ஒருவரான டிராவிஸ் பாம்கார்ட்னர் (வயது 21) துப்பாக்கியால் திடீரென்று மற்ற காவலாளிகளை சுட்டார். இதில் ஒரு பெண் உள்பட 3 காவலாளிகள் இறந்தனர். மேலும் ஒருவர் பலத்த காயம் அடைந்தார். பின்னர் அந்த வாலிபர் பணம் மற்றும் துப்பாக்கிகளை எடுத்துக் கொண்டு காரில் தப்பி சென்றார். இவரை கனடா பொலிசார் தேடி வந்தனர்.

இந்நிலையில் டிராவிஸ் பாம்கார்ட்னர் அமெரிக்காவுக்குள் நுழைய முயன்றார். அங்கு எல்லைப்பகுதி சோதனை சாவடியில் இருக்கும் அமெரிக்க பொலிஸார் காரை தடுத்து நிறுத்தினர். காரில் இரத்தக்கரை படிந்திருப்பதை கண்ட பொலிஸார் சோதனை நடத்திய போது அதில் அதிகளவு பணம் மற்றும் துப்பாக்கிகள் இருப்பதை கண்டுபிடித்தனர்.

அத்துடன் கனடாவில் 3 பேரை கொன்று விட்டு தப்பி வந்ததும் வெளியானது. இதனை அடுத்து வாலிபரை அமெரிக்க பொலிஸார் கைது செய்தனர். விரைவில் அவர் கனடா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார் என தெரிகிறது.


# ஜி-20 நாடுகளின் உச்சி மாநாட்டில் உலகப் பொருளாதாரம் குறித்து விவாதம்




மெக்சிக்கோவின் லாஸ் கோபாஸ நகரில் ஜி-20 நாடுகளின் இரண்டு நாள் மாநாடு ஆரம்பித்தது. இந்த மாநாட்டில் கிரீஸ் மற்றும் ஸ்பெயின் போன்ற ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி குறித்தும், இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்தும், விரிவான ஆலோசனையை ஜி-20 நாடுகளின் தலைவர்கள் நடத்தினர். இந்த இரு நாடுகளின் கடன் சுமையை குறைப்பது, நிதி உதவி அளிப்பது தொடர்பாக தலைவர்கள் ஆலோசித்தனர்.

இந்நிலையில் இந்தியா, சீனா போன்ற நாடுகள் பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்து வருகின்றன. இந்த சூழ்நிலையில் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி இந்த நாடுகளையும் பாதிக்கும் வாய்ப்புள்ளதாக பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

கடனை குறைப்பது, பொருளாதார ரீதியான போட்டியை அதிகரிப்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் ஐரோப்பிய பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என ஜேர்மன் அதிபர் மார்க்கெல் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளார். மேலும் அவர் ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மிகவும் சிக்கலான விஷயம். இது சர்வதேச அளவிலான பொருளாதார வளர்ச்சிக்கும், பாதிப்பை ஏற்படுத்தும். எனவே இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஜி-20 நாடுகளின் தலைவர்கள் கணிசமான நேரத்தை செலவிட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.



பாகிஸ்தானின் லாகூரில் வெயில் 111 டிகிரி பாரன்நைட்டை தாண்டியது. இதையடுத்து கால்வாய் ஒன்றில் குளித்து வெப்பத்தை போக்கி கொள்ளும் பொதுமக்கள்.

# பொருளாதார நெருக்கடியில் பெப்சி,சொனி,யாகூ; 71 ஆயிரம் ஊழியர்களைக் குறைக்க முடிவு

(நியூயோர்க்)

நோக்கியா, பெப்சி, சொனி, யாகூ போன்ற 12க்கும் மேற்பட்ட பன்நாட்டு நிறுவனங்கள், இவ்வாண்டு 71 ஆயிரம் ஊழியர்களை, பணிநீக்கம் செய்ய முடிவு செய்துள்ளன.

அமெரிக்கா, ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகளில் உள்ள பிரபல நிறுவனங்கள், உலகில் பல நாடுகளில் தங்களது தயாரிப்பு நிறுவனங்களை நிறுவி, அவற்றில் இலட்சக்கணக்கானோர் பணியாற்றி வருகின்றனர். பிரபல கைத தொலைபேசி தயாரிப்பு நிறுவனமான நோக்கியா, குளிர்பான நிறுவனமான பெப்சிகோ, மின்னணுப் பொருட்களைத் தயாரிக்கும் சோனி, கணினி துறையில் உள்ள எச்.பி. விமான நிறுவனமான லுப்தான்சா, கமராக்கள் தயாரிப்பு நிறுவனமான ஒலிம்பஸ் உட்பட 12 நிறுவனங்கள் தங்கள் நிறுவனத்தில் பணியாற்றி வரும் 71 ஆயிரம் ஊழியர்களை பணிநீக்கம் செய்ய முடிவெடுத்து அறிவித்துள்ளன.

இதில், கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வரும் நோக்கியா நிறுவனம் அடுத்தாண்டு இறுதிக்குள் 10 ஆயிரம் பேரை பணி நீக்கம் செய்ய முடிவு செய்துள்ளது. தற்போது பெருகி வரும் பலத்த போட்டிக்கு இடையே தாக்குப்பிடிக்க முடியாத நிலை இருப்பதும், ஊழியர்களை குறைக்க இந்த நிறுவனம் முடிவெடுத்ததற்கு காரணமாகி விட்டது. ஊழியர்களை குறைப்பதன் மூலம், 200 கோடி டொலர் சேமிக்க முடியும் என்று நிறுவனம் நம்புகிறது.

அதேபோல், கமராக்களைத் தயாரித்து விற்று வரும் பிரபல ஒலிம்பஸ் நிறுவனம் இன்னும் இரண்டாண்டுகளில் 40 ஆயிரம் ஊழியர்களை வெளியேற்றத் திட்டமிட்டுள்ளது. இதில், இம்மாதம் மட்டும் 2700 பேரை வெளியேற்றிவிட நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. கணினி தயாரிப்பில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான, எச்.பி. நிறுவனம் அடுத்த இரண்டாண்டுகளில் 27 ஆயிரம் ஊழியர்களை வெளியேற்றவும் முடிவு செய்துள்ளது.

# பிரான்ஸ் நாடாளுமன்ற தேர்தல் ஜனாதிபதி ஹோலண்டே கட்சி வெற்றி



பிரான்ஸ் நாடாளுமன்ற தேர்தலில், ஜனாதிபதி பிராங்கோய்ஸ் ஹோலண்டேவின் கட்சி பெரும்பான்மை பெற்று வெற்றி பெற்றுள்ளது. இப்புதிய திடமான மற்றும் பெரும்பாண்மை, சட்டம் மற்றும் மாற்றங்கள் கொண்டுவர உதவும் என்றும், ஐரோப்பாவிலும் பிரான்சின் பெரும் மதிப்பு கூடும் என அந்நாட்டின் வெளிவிவகாரத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஐரோப்பிய பொருளாதார சிக்கலை கருத்தில் கொண்டு அதிக பணம், பட்ஜெட் சலுகைகள் ஆகியவைகளை ஹோலண்டே கையாளவில்லை என தேர்தல் அமைப்பாளர்களுக்கு தெரிய வந்தது. முன்னாள் ஜனாதிபதி சர்கோசியின் கன்சர்வேட்டிவ் கட்சி தேசிய சபையில் தனது அதிகாரத்தை பயன்படுத்தியிருந்தது. இதனால் இழப்பு நேரிட்டது. தீவிர வலது தேசிய முன்னணி சிறிய வெற்றி பெற்றிருப்பதால் நாடாளுமன்றத்தில் முதல் முறையாக முக்கியத்துவம் பெறுகிறது.

# விடிய விடிய நடத்திய தாக்குதலில் 40 தீவிரவாதிகள் பலி



ஆப்கானிஸ்தானில் அந்நாட்டு பொலிஸ் படையினரும், நேட்டோ படையினரும் இணைந்து தலிபான் தீவிரவாதிகளை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிக்ளின் தாக்குதல்கள் அதிகரித்து வருகிறது.


இதையடுத்து ஆப்கானிஸ்தான் தேசிய பொலிஸ் மற்றும் நேட்டோ நேச நாடுகளின் இராணுவமும் இணைந்து பயங்கரவாதிகளை பிடிக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் லாக்மான், காந்தகார், கோஸ்து, காஸி ஆகிய பகுதிகளில் பொலிஸாருக்கும், தலிபான் பயங்கரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கி தாக்குதல் நடந்தது. நேற்று முன்தினம் நடத்தப்பட்ட துப்பாக்கி தாக்குதலில் 40 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர், மேலும் 37 பேர் கைது செய்யப்பட்டனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வல்லரசு நாடுகள் ஈரானுடன் பேச்சுவார்த்தை

ஈரான் அணு ஆயுதங்களை தயாரித்து வருகிறது என அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் குற்றம் சுமத்தி உள்ளதுடன், பல்வேறு பொருளாதார தடைகளையும் விதித்துள்ளன. மேலும் ஈரான் தன்னுடைய அணுசக்தி திட்டங்கள் குறித்த தகவல்களை வெளியிட மறுப்பதுடன், அணு ஆயுதம் தயாரிக்க நினைக்கும் நோக்கத்தையும் வெளிப்படுத்த மாட்டேன் என்கிறது. தன்னுடைய அணுவிசை நிலையங்கள் அனைத்தும் ஆக்கப்பூர்வமான உற்பத்திக்குத்தான் என்று ஈரான் இடைவிடாமல் சொல்கிறது.

ஆனால் இஸ்ரேலும், அமெரிக்காவும் ஈரானை நம்ப மறுக்கின்றன. எனவே ஈராக்கில் அணு ஆயுதத்தை சதாம் உசைன் மறைத்து வைத்திருப்பதாகக் கூறி அதிரடியாக உள்ளே நுழைந்ததைப் போல ஈரானிலும் செய்ய அமெரிக்கா தலைமையிலான நேச நாடுகள் விரும்புகின்றன. ஆனால் ஈரானுக்கு எப்போதும் உற்ற தோழனாக ரஷ்யா விளங்குகிறது. இப்போதைக்கு ஈரான் சொல்வதையெல்லாம் முழுக்க நம்புவதற்கு ரஷ்யா தயார் இல்லை என்றாலும் ஈரான் மீது பிற வல்லரசு நாடுகள் கைவைக்காமல் தடுக்க நினைக்கிறது.

இதற்கிடையே இந்தியா உள்ளிட்ட 7 நாடுகளுக்கு அமெரிக்க அரசு நேரடியாகவும் மறைமுகமாகவும் விடுத்த எச்சரிக்கைகள் பலன்தரத்தொடங் கியிருக்கின்றன.



ஈரானுடன் பொருளாதார உறவு கொண்டு அந்நாட்டை ஆதரிக்காதீர்கள் என்று அமெரிக்கா அரசு கூறிவருகிறது. இந்நிலையில் நேற்று ஈரானுடன் ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி மற்றும் அமெரிக்க போன்ற நாடுகள் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளன.

# ஜப்பானில் நில நடுக்கம்

ஜப்பான் நாட்டின் கடலோரப் பகுதியில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அந்த ஆய்வின் படி நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 6.4 என பதிவானதாகவும், 115 கி.மீ தொலைவில் உள்ள மோரியோகாவில் இந்நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும் தகவல் வெளியிட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட சேதம் குறித்து எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை. சுனாமி எச்சரிக்கை ஏதும் அறிவிக்கப்படவில்லை என அந்த ஆய்வு தெரிவிக்கிறது.

# நோயாளிகளின் துயரம் துடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

## ஏக்கத்துடன் காலம் கழிக்கும் நோயாளர்கள்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மாதாந்தம் மருந்து பெற்றுக்கொள்வதற்காக வைத்தியரின் கையொப்பம் மட்டும் எடுத்துக்கொள்ளச் செல்லும் நோயாளிகள் தாங்கள் பலமணி நேரம் காக்க வைக்கப்படுவதாகக கவலை தெரிவித்துள்ளார்கள். (றிப்பிற்) எனப்படும் மருந்து எடுப்பதற்காக வைத்தியரிடம் நோயாளிகளின் மருந்துக் கொப்பிகளில் கையெழுத்தைப் பெற்றுக்கொள்வதற்காக மட்டுமே வைத்தியசாலைக்கு இவர்கள் செல்கின்றார்கள்.

இதற்காக காலை 5.00 மணியிலிருந்து முற்பகல் 10.00 மணி வரை (றிப்பிற்) இற்காகச் செல்லும நோயாளிகள் காத்திருக்க வேண்டிய அவலநிலை பல தடவைகள் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து கிளினிக்கையே கவனித்துக் கொண்டிருக்கும் வைத்தியர்கள் றிப்பிற்றுக்காகச் செல்லும் தங்களை மறந்துவிடுவதாக இந் நோயாளிகள் மனவேதனையுடன் தெரிவித்துள்ளார்கள்.

5.00 மணிக்கு வீட்டைவிட்டுப் புறப்பட்டு 5.30 மணிக்கு வைத்தியசாலைக்குள் சென்று 6.00 மணிக்கு (றிப்பிற்) பிரிவுக்குப் போய் 7.15 மணிக்கு கொப்பிகளை ஊழியரிடம் கொடுத்து விட்டு தாங்கள் காவல் இருப்பதாகவும், ஆனால் பல தடவைகள 10.00 மணியாகியும் தம்மை எவரும் கவனிப்பதில்லை எனவும் இவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

தொடர்ந்து 'கிளினிக்' இற்காக வந்திருக்கும் நோயாளர்களையே வைத்தியர்கள் பார்வையிடுவதால் தம்மை மறந்து விடுவதாக இந்நோயாளிகள் கூறினார்கள். இவர்களில் பலர் தன்னிச்சையாக இயங்கமுடியாமல் வேறு துணைகளுடனேயே நடமாடுபவர்கள். 'றிப்பிற்' பிரிவில் பல மணிநேரம் காத்திருப்பதால் பலர் சோர்ந்தும் மயக்கமடையும் நிலையிலும், களைப்புற்றும் காணப்படுகின்றார்கள்.

மருந்துக் கொப்பிகளில் வைத தியரின் கையெழுத்துக்காக மட்டும் பல மணிநேரம் காத்திருக்கும் இவ்வயோதிப நோயாளிகள் மீண்டும் மருந்து எடுக்கும் இடத்திலும் மணிக்கணக்கில் காவல் நிற்க வேண்டியுள்ளது.

வயோதிபக் காலத்தில் தம்மை வருந்தவிடாமல் இப்பிரிவில் சீரான ஒரு நடவடிக்கையை ஏற் படுத்தித் தருமாறு இவர்கள் சம்பந்தப்பட்டவர்களை கேட்டுள்ளார்கள். (137)

# கைவிடப்பட்ட வாகனங்கள்; உரிமையாளர்கள் ஏமாற்றம்

வன்னிப் பகுதியில் உள்ள மக்களால் முள்ளிவாய்க்காலில் கைவிடப்பட்ட வாகனங்கள் இராணுவத்தினரின் உதவியுடன் மாவட்ட செயலகத்தினால் அவ் வாகன உரிமையாளர்களிடம் வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் நேற்றைய தினம் வாகன உரிமையாளர்களுக்கு முள்ளிவாய்க்கால் பகுதிக்கு வருமாறும் தமது வாகனங்களை அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்து வரும் வன்னி மக்கள் நேற்றைய தினம் முள்ளிவாய்க்கால் பகுதிக்குச் சென்ற போது அங்கு கடமையிலிருந்த இராணுவத்தினர் வாகனங்களை வழங்கமுடியாது எனக் கூறி திருப்பியனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் விசனம் அடைந்த மக்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தபோது கிளிநொச்சி மாவட்ட செயலக அதிகாரிகள் முள்ளிவாய்க்கால் பகுதி இராணுவத்தினரிடம் கலந்துரையாடினர்.

இதன்போது அவர்கள் வாகனங்களை வழங்க முடியாது என கூறியதையடுத்து செயலக அதிகாரிகள் இது தொடர்பாக கலந்துரையாடி மீண்டும் அறிவிப்பதாகக் கூறி அனுப்பிவைத்தனர்.

எனினும் தமது வாகனங்களை ஏற்றிக்கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுவந்ததாகவும் இதனால் தமக்கு பெரிய பொருளாதார செலவு ஏற்பட்டுள்ளதாக வாகன உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (12)

# கியூபாவுடன் ஒப்பந்தம்

கியூபாவுக்கு மூன்றுநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அந்த நாட்டின் உப ஜனாதிபதியை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

53 வருடகால இலங்கை - கியூப உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப் படுகின்றது. இதன்போது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான புரிந்து ணர்வு ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

# கட்டுவன இரட்டைக் கொலை ஆர்ப்பாட்டத்தில் குதித்தது ஜே.வி.பி.

கட்டுவன பிரதேச இரட்டைக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையதான சந்தேகநபர்களைக் கைது செய்யுமாறு வலியுறுத்தி ஜே.வி.பி.யினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டமொன்று நேற்று பிற்பகல் கொழும்பில் நடத்தப்பட்டது.


இந்த இரட்டைக்கொலைச் சம்பவம் இடம்பெற்று மூன்று தினங்கள் ஆகின்ற நிலையில் கொலையுடன் தொடர்புடையதான சந்தேகநபர்கள் எவரும் இதுவரையில் கைது செய்யப் படவில்லை.

அத்துடன், சந்தேகநபர்களைக கைது செய்வதில் பொலிஸார் பின்தங்கியுள்ளனர் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை மேற்படி கொலைச் சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களையோ அல்லது பேரணிகளை நடத்த வலஸ்முல்ல நீதவான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

தென் பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஜயசிங்கவினால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு மனுவினைக் கருததிற்கொண்ட நீதவான் இந்த உத்தரவினைப் பிறப்பித்துள்ளார்.

# அரசுக்கு ஆதரவு வழங்க நிபந்தனை கோருகிறார் ரணில்



7500 ரூபா சம்பள உயர்வு உள்ளிட்ட பொதுமக்களுக்கு அரசு ஏற்கனவே வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றினால் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கப்படும் என எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அப்படியில்லாவிட்டால் நவம்பர் மாதம் தொடக்கம் பொது மக்களை திரட்டி வீதிக்கு இறங்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். தொகுதி அமைப்பாளர்கள் சிலருக்கு நியமனம் வழங்கும் வைபவம் நேற்று ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தவில் இடம் பெற்றபோதே எதிர்கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்கள் 8 பேருக்கும், தொகுதி அமைப்பாளர்கள் 19 பேருக்கும் எதிர்கட்சித் தலைவரால் நியமனம் வழங்கப்பட்டது. சிறப்பாக கடமையாற்றுவோருக்கு முன்னுரிமையும் வழங்குவதுடன் வேலை செய்யாதோர் பதவி விலக கப்படுவர் எனவும் எதிர்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் யுத்தம் நிலவியபோதும் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டதாகவும் தற்போதைய அரசு யுத்தத்தை காட்டி மக்களுக்கான நிவாரணத்தை தட்டிப்பறித்துள்ளதாகவும் யுத்தம் முடிந்தபின் மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

யுத்தத்திற்காக உழைத்தவர்கள், உயிர் தியாகம் செய்தவர்கள், ஊனமுற்றவர்கள் சாதாரண ஏழை மக்களின் பிள்ளைகள் எனவும் அவர்கள்தான் அரசாங்கத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சாதாரண மக்கள் பிள்ளைகளின் ஊழியர் சேமலாப நிதியில் கை வைத்துள்ள அரசாங்கம் அதன் நிதியை பங்குச் சந்தையில் முதலீடு செய்துள்ளதாக எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

# அமைச்சுப் பதவி எனக்கு வேண்டாம்

(கொழும்பு)

இலங்கையில் அன்று தொடக்கம் இன்றுவரை காணப்பட்ட அரசுகளில் ஊழல் நிறைந்த மகிந்த ராஜபக்ஷ அரசுடன் ஒருபோதும் இணையப்போவதில்லை என ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள அமைச்சரவை மாற்றத்தில் விளையாட்டுத்துறை அமைச்சராக அர்ஜுன ரணதுங்க நியமிக்கப்படுவார் என வெளியாகியுள்ள தகவல் குறித்து பி.பி.சி. சிங்கள சேவை (சந்தேசியா) வினவியபோதே மேற்கண்டவாறு அவர பதிலளித்துள்ளார்.

ஜனாதிபதி பொதுமன்னிப்பில் சிறையில் இருந்து வெளிவந்த சரத் பொன்சேகாவும் அரசுடன் கூட்டுச்சேரப்போவதில்லை என குறிப்பிட்டுள்ளார். நான் அறிந்த வகையில் மகிந்த ராஜபக்ஷ அரசே அதிக ஊழல் நிறைந்தது. அவ்வாறான அரசில் இணைந்து ஊழல் நபராக மாற எனக்கு அவசியமில்லை என அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். விளையாட்டுத்துறை அமைச்சல்ல பிரதமர் பதவி கொடுத்தாலும் ஏற்கவேண்டிய அவசியம் எனக்கில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கில் படையினர்...

விரைவில் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும். இதன் அடிப்படையில் எதிர்வரும் மூன்று மாத காலப் பகுதிக்குள் காணிப் பிரச்சினைகள் தொடர்பில் உரிய தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

அடையாளம் காணப்படும் அரச காணிகளில் முகாம்கள் மீள் அமைக்கப்பட்ட பின்னர் பொது மக்களின் வீடுகளில் தங்கியுள்ள இராணுவத்தினர் அந்த வீடுகளை உரிமையாளர்களிடம் கையளிக்கவுள்ளனர். ஐந்து மாவட்டங்களிலும் அரச காணிகள் தொடர்பாக ஆராயப்பட்டு அதில் இராணுவத்திற்குத் தேவையான காணிகளை வழங்கும் பொருட்டு காணிகளை அடையாளம் காணும் நடவடிக்கைகளை பிரதேச செயலாளர்கள் மேற்கொண்டு வருவதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் போதிய அளவு அரச காணிகள் காணப்படுகின்ற போதிலும் யாழ்ப்பாணத்தில் காணிகளை அடையாளம் காணுவதில் பெருமசிரமம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். அவ்வாறு அடையாளம் காணப்படும் அரச காணிகள் தொடர்பில் நில அளவைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அந்தக் காணிகளை பெற்றுக் கொள்வதற்கு தேவையான மாகாண காணி ஆணைக்குழுவின் அனுமதி பெறவேண்டியுள்ளது என்றும் இந்தக் காணிகளை பெற்றுக் கொள்வதற்கான நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி மேலும் தெரிவித்தார்.

## வெளியுறவுக்...

தொடர்பான விடயங்களை ஐக்கிய நாடுகளின் பிரதி பிரதிநிதி மனீசா குணசேகர கையாள்வதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்கு முன்னர் இடம்பெற்ற 19 ஆவது மாநாட்டில் தமரா குணநாயகம் கையாண்டிருந்தார். இந்தமுறை மனீசா குணசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க இராஜதந்திரிகளுடன் ஒருங்கிசைவாக அனைத்து விடயங்களையும் இவர் கையாளுவார் என்ற எதிர்பார்ப்புடன் இந்த நியமனம் மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

## வன்னி...

விநியோகம், நீர்பாசனம், மீன் பிடித்துறை, கல்வி, சுகாதாரம், கூட்டுறவு, போக்குவரத்து, தபால் உட்பட அடிப்படைதுறை தொடர்பான அபிவிரத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளதாக மூன்று மாவட்டங்களினதும் செயலாளர்களான சரத் ரவீந்திர, பந்துல ஹரிச்சந்ர, என்.வேதநாயகன் ஆகியோர் தெரிவித்தனர்.

## போதனா...

பசுபதிராஜா வெளியிட்ட அறிக்கையின் பின்னர், புற்றுநோய் வைத்திய நிபுணர் ஜெயக்குமார் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக விரிவான விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

அந்த வகையில் அரச மருத்துவ சங்கத் தலைவர், செயலாளர் உட்பட யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட விசாரணை அதிகாரி வணிக சேகரவினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டனர்.

இவ் விசாரணையின் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற முறைகேட்டுச் சம்பவங்களில் தொடர்புடையவர்கள் இனங்காணப்படுவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. (எஸ்)

## தொண்டர்...

இனியும் எம்மை ஏமாற்றாதே போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட சுலோகங்களை ஏந்திய வாறு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் முன்பாக உண்ணா விரதப் போராட்டம் நடத்தினர்.

அதேவேளை, பாரம்பரியக் கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோருடன் சந்திப்பு ஒன்றும் இடம்பெற்றது. இச் சந்திப்பின்போது 600 வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகவும் உங்களுக்கு நியமனம் வழங்க ஏற்பாடு செய்யப்படும் இந்தத் தருணத்தில் இவ்வாறான ஆர்ப்பாட்டத்தினால் அந்த ஏற்பாடுகள் குழம்பிப் போய்விடும் சூழல் தோன்றிவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை உரிமை உரிமை என்று கோஷமிட்டு உரிமை இழந்து நிற்கின்றீர்கள். அமைச்சரவையின் அங்கிகாரம் கிடைத்ததும் நிச்சயம் தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் கிடைக்கும் என அமைச்சர் உறுதியளித்தார். (எஸ்)

# வன்னி ஆசிரியர்கள் நியாயம் வேண்டி மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு



(யாழ்ப்பாணம்)

வன்னி ஆசிரியர்கள் 104 பேரின் இடமாற்றத்தில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதைத் தொடர்ந்த நேற்று மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கை ஆசிரியர் சங்கம் முறைப்பாடு தெரிவித்துள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோருக்கு எதிராக இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

வன்னிப்பகுதியிலிருந்து ஒரு குழு ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டபோதும் ஏனைய 104 ஆசிரியர்களும் இடமாற்றம் செய்யப்படாததையிட்டு பலமுறை வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டபோதும் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக கல்வி அதிகாரிகளிடம் விசாரித்தபோது பதில் ஆசிரியர்கள் இல்லையென்றும் தேசிய கல்வியியற் கல்லூரி நியமனங்கள் வழங்கப்பட்டதும் இதனைச் சீர்செய்வதாக சாட்டுப்போக்கான காரணங்களை அதிகாரிகள் குறிப்பிடுவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. மேலும் ஜோசப் ஸ்ராலின் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் 400 இற்கும் மேற்பட்ட மேலதிக ஆசிரியர்கள் இருப்பதாக சுட்டிக்காட்டி இவ்விடமாற்றங்கள் உடனடியாக சீர் செய்யப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


இவ்வழக்குத் தாக்கலில் இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் அந்தந்த மாவட்ட தலைவர், செயலாளர்கள் மற்றும் 80 இற்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட ஆசிரியர்களும் இதில் கலந்துகொண்டனர். (12,எஸ்)

# மாணவர்களின் தாக்குதலில் ஆசிரியர்கள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

பாடசாலையில் புதிதாக இணைந்துகொண்ட மாணவர்கள் சிலரை பகிடிவதைக்கு உட்படுத்த முயன்ற மாணவர் குழுவொன்றை தடுத்து நிறுத்திய இரு ஆசிரியர்கள் அம்மாணவர் குழுவின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பெல்வத்தை பிரதேசத்தில் அமைந்துள்ள பிரபல பாடசாலையொன்றில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தை அடுத்து, மேற்படி ஆசிரியர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் நான்கு மாணவர்களைக் கைது செய்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.



**கியூபாவிற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் 'ஜொஸேமாரட்' நினைவுத் தூபியில் மலரஞ்சலி செலுத்தினார். இன்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு தங்கியிருப்பாரெனவும் பின்னர் ஜி - 20 மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரேஸிலுக்கு புறப்பட்டுச் செல்வாரெனவும் தெரிவிக்கப்படுகின்றது.**

# கால்வாயில் குதித்து இளைஞன் பலி

(கொழும்பு)

கொழும்பு - கொம்பனித்தெரு சிற்றம்பலம் காடினர் மாவத்தையில் உள்ள பாலமொன்றின் மீதிருந்து இளைஞர் ஒருவர் கால்வாயில் குதித்து உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் குறித்த இளைஞன் கால்வாயில் குதித்துள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனையடுத்து விசாரணை நடத்திய கொம்பனித்தெரு பொலிஸார் நேற்றுக் காலை கடற்படையினரின் உதவியுடன் சடலத்தைத் தேடும் பணிகளில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் நேற்றுப் பகல் 12.30 அளவில் சடலம் மீட்கீப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் 20 வயதுடைய இளைஞன் என கூறப்படும் நிலையில் அவருடைய விபரங்கள் தெரியவரவில்லை. கொம்பனித்தெரு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வடக்கின் முதலாவது அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டம் விரைவில் பூர்த்தி

(கொழும்பு)

வடக்கின் முதலாவது அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டம் வவுனியா மாவட்டத்தில் வெற்றிகரமாக இடம்பெற்று வருவதுடன் இங்கு 300 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வடக்கில் கடமையாற்றும் அரச ஊழியர்களின் நன்மை கருதியும் கடமைகளை கிரமமாக மேற்கொள்வதற்கான வசதியை ஏற்படுத்தும் வகையிலுமான இலவச வீடமைப்புத் திட்டத்தை அரசாங்கம் முதற்கட்டமாக வவுனியா மாவட்டத்தில் ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அரச ஊழியர்களுக்கு வீடுகளை அமைப்பதற்காக தலா 40 பேர்ச் காணியையும் 5 இலட்சம் ரூபாவைக் கடனுதவியாகவும் வழங்கி உள்ளது. வீடமைப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் அரச ஈடு மற்றும் முதலீட்டு வங்கியினால் வழங்கப்படும் இக்கடன் தொகைக்கு 11 வீத வட்டி அறவிடப்படுகின்றது. வீடுகளை அமைக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அவற்றை இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் ஓமந்தைப் பகுதியில் தமிழ் உத்தியோகத்தர்களுக்கான 200 வீடுகளும் இரட்டைப் பெரிய குளம் பகுதியில் சிங்கள உத்தியோகத்தர்களுக்கான 100 வீடுகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

# திட்டமிட்டு தீ மூட்டப்படும் காடுகள்

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளிலும் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் காட்டுத் தீயானது, அப்பகுதியிலுள்ள சிலரால் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டுவரும் நாசகார செயல் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்றுத் தெரிவித்தது.

இலங்கையில் காட்டுத் தீ ஓர் இயல்பான நிகழ்வு அல்ல என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கூறியது.

காட்டுத் தீ காரணமாக 800 ஏக்கருக்கு மேற்பட்ட காடுகளும் பயிர்ச்செய்கை நிலங்களும் அழிந்துள்ளதாகவும் அது அறிவித்துள்ளது.

நடுக்காட்டில் மக்கள் வாழாத பகுதியில் தீ உண்டாகியமை இந்த காட்டுத் தீ சம்பவங்கள் தற்செயலானவையாக இருக்க முடியாது என்பதை வெளிப்படுத்துவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் சரத் லால் குமார கூறினார்.



இந்த காட்டு தீக்கு காரணமான விஷமிகளை கண்டு பிடிப்பது இயலாத காரியமாகும் எனவும் இவ்வாறு காட்டுத் தீ பரவுவது ஆபத்தான விடயம் எனவும் இதனால் பல ஏக்கர் நிலங்கள் அழிந்துள்ளதாகவும் மக்களுக்கு விளக்கி அவர்களை மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு கேட்டுள்ளோம் என சரத் லால் குமார மேலும் கூறினார்.

# ஒருநாள் தொடர் இலங்கை வசம்



(கொழும்பு)

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற 5 ஆவதும் இறுதியுமான பரபரப்பான ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 2 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது. இதன் மூலம் தொடரை 3:1 என்ற ரீதியில் இலங்கை அணி கைப்பற்றியது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 247 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பர்கத் 56, உமர் அக்மல் ஆட்டமிழக்காமல் 55 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் மென்டிஸ் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்பத்தில் தடுமாற்றத்துடன் ஆடியது. சந்திமால் 54 ஓட்டங்களைப் பெற்று அணிக்கு வலுவூட்டினார். பின்பு வந்த மத்தியூஸ் தனி ஆளாக போராடி ஆட்டமிழக்காமல் 80 ஓட்டங்களைப் பெற்று இலங்கை அணியின் வெற்றிக்கு வழிகோலினார். 49.4 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து இலங்கை அணி வெற்றியிலக்கை அடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக மத்தியூஸ் தெரிவானார்.

# டெங்கு நோய் மருந்து தனியாரும் இறக்கலாம்

(கொழும்பு)

டெங்கு நோய் தொடர்ந்து அதிகரித்து வருகின்ற நிலையில், அதற்கு எதிரான மருந்துப் பொருட்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கு தனியார் துறையினருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி செயற்பாட்டு குழுவின் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும் போது அவர இதனைத் தெரிவித்துள்ளார்.

# ஒலிம்பிக் தொடக்க விழா நிகழ்ச்சியில் தமிழ் பாடகி மாயா அருட்பிரகாசம்

(கொழும்பு)

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழாவில் நடக்கும் பல்வேறு கலை கலாசார நிகழ்வுகளில் ஒன்று, தேர்ந்தெடுக்கப்பட்ட உலகப் பாடல்கள் அடங்கிய ஒரு நிகழ்ச்சி. இதில் இடம் பெறும் 86 பாடல்களில் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட பிரிட்டனில் வாழும் மியா என்ற மாதங்கி அருள்பிரகாசம் என்பவரது, பிரபலமான பேப்பர் ப்ளேன்ஸ், (காகித விமானங்கள்) என்ற பாடல் இந்தப் பட்டியலில் இடம்பெறுவதாக லண்டன் செய்திகள் தெரிவிக்கின்றன.

குடியேறிகளின் அனுபவத்தைச் சொல்லும் இந்தப் பாடல் 2007 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பாடல், அவரது இரண்டாவது இசை வெளியீடான கலா என்ற ஆல்பத்தில் இடம்பெற்றிருந்தது.

மேலும் தமிழ்நாட்டில் இருந்து இசையமைப்பாளர் இளையராஜாவின் இசையில், எஸ்.பி. பாலசுப்ரமணியம் பாடிய நான்தான் ஓங்கப்பண்டா என்ற பாடலும் இடம் பெறுகின்றது. கமலஹாசன் மற்றும் ஸ்ரீபிரியா நடிப்பில் 1981 இல் வெளியான ராம் லக்ஷ்மன் என்ற படத்தில் வரும் பாடல் இது.

ஒஸ்கார் விருது பெற்ற ஸ்லமடாக் மிலியனேர் போன்ற படங்களை இயக்கிய டானி போய்ல் ஒலிம்பிக் தொடக்கவிழா நிகழ்ச்சிகளை கருத்துருவாக்கி வருகிறார். அவரது மேற்பார்வையில், சுமார் 27 மில்லியன் பவுண்ட் செலவில் உருவாகிவரும் இந்தத் தொடக்கவிழா ஒலிம்பிக் நிகழ்ச்சியில் இடம்பெறவுள்ளது.



# பிரதி அமைச்சர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

புத்தசாசன மற்றும் சமய விவகார பிரதி அமைச்சர் எம்.கே.டி.எஸ்.குணவர்தன திடீர் மரடைப்பின் காரணமாக கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கந்தளாயிலுள்ள தனது வீட்டிலிருந்து விசேட விமானத்தின் மூலம் கொழும்பிற்கு பிரதி அமைச்சர் கொண்டுவரப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூன் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.